Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU




முரசு – 03 திருவள்ளுவர் ஆண்டு 2044 சித்திரை 20 வெள்ளிக்கிழமை (03.05.2013) பக்கங்கள் 20 ஓசை – 215

காத்திருப்பு



03

சாதனை



10

கவர்ச்சிக்கு முழுக்கு



11

அனுமதி



14

துவைக்காமல் போட



18

# மனித உரிமைகளைப் பாதுகாக்க வலுவான பொறிமுறை உருவாக்கம்

## உதவுகிறது பொதுநலவாய செயலகம்



(கொழும்பு)

நாடு முழுவதும் மனித உரிமைகள் பாதுகாக்கப் படுவதை உறுதிப்படுத்தும் முகமாக வலுவான புதிய பொறிமுறையுடன் கூடிய செயற்றிட்டம் ஒன்று அமுல் செய்யப்படவிருக்கிறது.

இப்புதிய செயற்றிட்டத்தை வரைபு செய்வதற்கும் அதை அமுல் செய்வதற்கும் பொதுநலவாய செயலகம் உதவிகளை வழங்க முன்வந்திருக்கிறது.

புதிய பொறிமுறையினை வரைவு செய்யும்போது தொழில்நுட்ப ரீதியான விடயங்களில் ஆலோசனை வழங்குவதற்கும் இத்துறையில் நிபுணத்துவம் வாய்ந்த துறைசார் வல்லுநர்களைப் பரிமாறிக்கொள்ளவும் பொதுநலவாய நாடுகளின் செயலகம் முன்வந்திருக்கிறது.

பொதுநலவாய நாடுகளின் செயலாளர் நாயகம் கமலேஷ் சர்மாவை லண்டனில் வைத்து இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பிரதிநிதிகள் சிலர் சந்தித்தபோதே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே, நேற்று முன்தினம் லண்டனில் ஆரம்பமான பொதுநலவாய நாடுகளின் மனித உரிமைகள் தொடர்பான மாநாட்டிற்கு இலங்கைக் குழுவினர் கலந்து கொண்டனர்.

இதன்போது, பொதுநலவாய நாடுகளின் மனித உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டிய விதம் மற்றும் மனித உரிமைகள் மீறப்படுவது தொடர்பாக முன்னெடுக்க வேண்டிய நடைமுறை என்பன தொடர்பாக விரிவாகக் கலந்துரையாடப்பட்டது.

# வெளியேறிய முஸ்லிம்கள் குடியேறிய பின்பே தேர்தல்

## அகில இலங்கை முஸ்லிம் காங்கிரஸ் கோரிக்கை

(கொழும்பு)

வடக்கில் முஸ்லிம்கள் அனைவரும் மீள்குடியமர்த்தப்பட்டு அவர்களின் பெயர்கள் வாக்காளர் பட்டியலில் இணைக்கப்படாதவரையில் வடக்கு மாகாணசபைத் தேர்தலை நடத்தக்கூடாது என்று அகில இலங்கை முஸ்லிம் காங்கிரஸ் கட்சி கோரிக்கை விடுத்துள்ளது.

வட புலத்திலிருந்து வெளியேற்றப்பட்ட முஸ்லிம்களின் மீள்குடியேற்றம் பூர்த்தி செய்யப்பட்டு அவர்கள் அங்கு வாக்களிக்கின்ற உரிமை உறுதிப்படுத்தப்படும் வரை அங்கு வடமாகாணசபை தேர்தல் நடத்தப்படக் கூடாது. இவ்வாறு இடம்பெற்றால் எமது கட்சி அதனை எதிர்க்கும் என்று அக்கட்சியின் செயலாளர் நாயகம் வை.எல்.எஸ். ஹமீட் தெரிவித்துள்ளார்.



இன்று யுத்தம் முடிவுற்று அமைதி திரும்பி இருக்கும் நிலையில், வடமாகாணத்தில் வாழுகின்றவர்களுக்கு மாத்திரம் தான், வடமாகாணத்தில் நடைபெறுகின்ற தேர்தல்களில் வாக்களிக்க முடியும், வடமாகாணத்தை சேர்ந்தவர்களாயினும், வேறு மாவட்டங்களில் அகதி

19 ஆம் பக்கம் பார்க்க

# மின் கட்டணச் சலுகை புதிய விபரம் அறிவிப்பு

61 மின் அலகுகள் தொடக்கம் 180 அலகுகள் வரை பயன்படுத்தும் மின் பாவனையாளர்களிடம் அறவிடப்படுகின்ற கட்டணத்தில் 25 வீதத்தைக் குறைப்பதற்கு மின்சக்தி எரிசக்தி அமைச்சு தீர்மானித்துள்ளது.

அதிகரிக்கப்பட்ட மின் கட்டணம் தொடர்பில் ஜனாதிபதி அறிவித்துள்ள நிவாரணங்களைக் கருத்திற்கொண்டு இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டதாக அமைச்சின் செயலாளர் எம்.எம்.சி. பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

இதனைத் தவிர 61

19 ஆம் பக்கம் பார்க்க

# வாள்வெட்டில் 4 பேர் படுகாயம்

## கொழும்புத்துறையில் கொடூரம்

கொடுத்த பணத்தினை கேட்டு சென்ற இருவர் மீது 8 பேர் கொண்ட குழுவினர் மேற்கொண்ட வாள் வெட்டில் நால்வர் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கொழும்புத்துறை துண்டிச் சந்தியில் இந்த சம்பவம் நேற்று மாலை 5.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவத்தில் ஆரியகுளம் பகுதியைச் சேர்ந்த குணசேகரம் பிரேமம்காந் (வயது-26) சுதர்சன் நிருபன் (வயது-27) குணசேகரம் பிரசாத் (வயது-24)

19 ஆம் பக்கம் பார்க்க

# அனுமதியற்ற சிறுபோக நெற்செய்கை அழிக்கப்படும்

(கிளிநொச்சி)

கிளிநொச்சியில் அத்துமீறி சிறுபோகச் செய்கையில் ஈடுபடும் விவசாயிகளது நெற்செய்கைகளை அழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவிருக்கிறது.

இது விடயம் சம்பந்தமாக கிளிநொச்சி மாவட்டச் செயலகம் பின்வரும் பகிரங்க அறிவித்தலை விடுத்துள்ளது.

2000 ஆம் ஆண்டு 46 ஆம் இலக்க கமநல அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் 23(1)23 (2) பிரிவின் கீழும் 16.02.213 திகதிய இரணைமடு நீர்ப்பாசனப் பயிர்ச்செய்கை குளக்கூட்டத் தீர்மானத்திற்கமையவும்

19 ஆம் பக்கம் பார்க்க

# முச்சக்கர வண்டிகளுக்கு புதிய விதிகள் அறிமுகம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.நகரில் சேவையில் ஈடுபடும் முச்சக்கர வண்டிகளின் உரிமையாளர்கள் பின்பற்றுவதற்காக புதிய விதி முறைகள் அமுல் செய்யப்படவுள்ளன.

கீழ்வரும் புதிய விதிமுறைகள் எதிர்வரும் 15 ஆம் திகதி முதல் கண்டிப்புடன் அமுல் செய்யப்படவுள்ளது.

ஆட்டோ சங்கத்தில் பதியப்பட்டிருக்க வேண்டும், ஆட்டோ சங்கத்தில் பதியப்பட்டு ஸ்ரிக்கர் ஒட்டப்பட்டு இருத்தல் வேணடும். ஆட்டோவுக்குரிய மீற்றர் பொருத்தியிருத்தல் வேண்டும், யூனிபோம் இல்லாத ஓட்டு

19 ஆம் பக்கம் பார்க்க

# வலுவடையும் உறவு



இலங்கைக்கு விஜயம் செய்துள்ள ஜப்பான் உதவிப் பிரதமர் டாரோ ஆசோ ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தினார். அலரி மாளிகையில் இச்சந்திப்பு இடம்பெற்றது. நேற்று முன்தினம் இரவு 10.30 மணிக்கு விமான நிலையம் வந்திறங்கிய ஜப்பான் உதவிப் பிரதமரையும் அவரது பாரியாரையும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் வரவேற்றார்.

இலங்கைக்கும் ஜப்பானுக்கும் இடையில் உறவுகளை பலப்படுத்தும் நோக்கிலேயே ஜப்பான் உதவிப் பிரதமர் இலங்கை வந்துள்ளதாக இலங்கைக்கான ஜப்பான் தூதரகம் தெரிவித்துள்ளது.

# குளத்தில் மிதந்தது சடலம் வற்றாப்பளையில் பரபரப்பு

நேற்று மாலை 3.30 மணியளவில் வற்றாப்பளை சீனியா மோட்டை குளத்தில் இருந்து சடலம் ஒன்று மீட்கப்பட்டு முல்லைத்தீவு மாவட்ட பொது வைத்தியசாலையில் பிரேத பரிசோதனைக்காக ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது, அதே இடத்தைச் சேர்ந்த 59 வயதான

19 ஆம் பக்கம் பார்க்க

உள்ளே...

க.பொ.த. சாதாரண தரத்துக்கான வரலாறு மாதிரி வினாத்தாள்

பக்கம் 02 இல்...

அபிவிருத்தி லொத்தர் சபையின் சனிக்கிழமை அதிர்ஷ்டம் உத்தியோகபூர்வ முடிவுகள்



அன்புளநீர் அகமெல்லாம் பொங்கப் பொங்க
அறமெழுந்து பெருஞ்சேவை ஆற்ற ஆற்றத்
தொண்டு செய்யப் பல அன்பர் தோன்றத் தோன்ற
தோற்று சுவை சோறாக உண்ண உண்ண
கண்டுவரும் அடியார்கள் ஆர்ப்ப ஆர்ப்ப
கடி அமுதசுரபியினால் ஊட்ட ஊட்ட
கொண்டு பசி தீர்த்தவர்கள் கோடி கோடி
கோடானு காலமெல்லாம் வாழி வாழி

**நயினாதீவு - ஸ்ரீ நாகபூஷணி**

# அமுதசுரபி அன்னதான சபை

(ஆரம்பம் - 1960)

'விஜய வருட அன்னதானப் பெருவிழா'

நயினாதீவு அருள்மிகு ஸ்ரீ நாகபூஷணி அம்பாளின் திருவருளினால் 1960 ஆம் ஆண்டு அமைக்கப்பட்ட நயினாதீவு அருள்மிகு ஸ்ரீநாகபூஷணி ஆலய அமுதசுரபி அன்னதான சபை அமுதசுரபி என்னும் பெயர்தாங்கிய மணி மண்டபத்தின் கண்ணே ஆண்டுதோறும் பல்லாயிரக்கணக் கான அம்பிகை அடியார்களின் பசிப்பிணி தீர்க்கும் தொண் டினைச் செவ்வனே செய்து வருகின்றது. இவ்வாண்டுடன் 54 ஆவது ஆண்டில் பிரவேசிப்பதில் மனமகிழ்வெய்து கிறோம்.

அம்பிகையின் திருப்பதியிலே நடைபெறும் இத்தொண்டு சிறந்த சேவையெனக் கருதி தருமசீலர்களாகிய வர்த்தகப் பெருமக்கள், விவசாயப் பெருமக்கள், தொழிலாளப் பெரு மக்கள் மற்றும் அம்பிகை அடியார்கள், அன்பர்கள் அனை வரும் மனமுவந்து பணம் பண்டம் உதவிகளை வழங்கி வருவதுடன் ஆக்கமும் ஊக்கமும் தந்து அன்னதான சபை யின் அரும்பணியைப் பாராட்டியும் வருகின்றனர். 2012 ஆம் ஆண்டு யாழ். மாநகர சபையினர் அம்பிகையின் திருப்பணி யைப் போற்றி "யாழ் விருது" வழங்கிப் பாராட்டினார்கள்.

அம்பிகையின் திருவருளினால் பணிக்கப் பெற்ற இப்பெரும்பணியைச் சிறந்த முறையில் செய்து அல்லும் பகலும் அயராது உழைத்துவரும் சபையின் நிர்வாகி களுக்கும் உறுப்பினர்களுக்கும் நற்சேவைத் தொண்டர்களுக் கும் அமுதசுரபி மண்டபத்திற்கு வந்து பணிசெய்யும் அடியார்களுக்கும் தத்தமது பணிகளைத் திறமையுடன் செய்த, செய்கின்ற சேவையாளர்கள் அனைவருக்கும் அன்ன தானத் தொண்டினை நேரடியாகக் கண்டும் கேட்டும் ஆசி யுரை வழங்கிவரும் அன்பர்களுக்கும் அனைத்திலும் மேலாக ஆண்டுதோறும் பணம், பண்டங்கள் முதலியவற்றை மன முவந்து உதவிவரும் தருமசீலர்கள் அனைவருக்கும் அன்னை ஸ்ரீ நாகபூஷணி அம்பிகையின் திருவருள் கிடைக் கும் வண்ணம் பிரார்த்தித்து சபையின் மனமுவந்து பணி வார்ந்த வணக்கத்தை தெரிவித்துக் கொள்கின்றோம்.

அடியார்களே!

விஜய வருடம் வைகாசித் திங்கள் 26 ஆம் நாள் (9.06.2013) ஞாயிற்றுக்கிழமை அம்பிகையின் உயர்திருவிழா கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி ஆனித்திங்கள் 4 ஆம் நாள் (18.06.2013) செவ்வாய்க்கிழமை திருமஞ்சத் திருவிழா வும், ஆனித்திங்கள் 7 ஆம் நாள் (21.06.2013) வெள்ளிக் கிழமை சப்பரத் திருவிழாவும் ஆனித்திங்கள் 8 ஆம் நாள் (22.06.2013) சனிக்கிழமை தேர்த்திருவிழாவும்; ஆனித்திங்கள் 9 ஆம் நாள் (23.06.2013) ஞாயிற்றுக்கிழமை தீர்த்தத் திரு விழாவும் ஆனித்திங்கள் 10 ஆம் நாள் 24.06.2013 திங்கட் கிழமை தெப்பத் திருவிழாவுடன் இனிதே நிறைவு பெறும். இவ்வாண்டும் அம்பிகையைத் தரிசிக்க வரும் அடியார்கள் அனைவருக்கும் சிறந்த முறையில் பதினாறு நாட்கள் இரவு பகல் அன்னதானம் வழங்க சபை தீர்மானித்துள்ளது. எனவே தருமசீலர்களாகிய தங்களிடம் எம்மால் நியமிக்கப்பட்ட உத்தமத் தொண்டர்கள் வருவார்கள். அவர்களிடம் வழமை போல் நீங்கள் உதவும் பணம், பண்டங்களை வழங்கி சபை யின் பற்றுச்சீட்டைப் பெற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள் கின்றோம். வங்கி மூலம் பணம் அனுப்ப விரும்பும் அடியார் கள் Commercial Bank - Peoples Park Petha கிளை Amuthasurabi கண. இல 1247985001 என்ற கணக்கிற்கு அல்லது B.O.C - ஊர்காவற்றுறை கிளை வேலணை க.கு. இல 7687836 என்ற கணக்கிற்கோ அனுப்பிவைக்குமாறு பணிவன்புடன் வேண்டுகிறோம். அத்துடன் யாழ். நகரில் திரு சி.சிவகுமார் வெற்றிலை மார்க்கட் என்ற முகவரியிலும் தேனு களஞ்சியம் நவீன சந்தை, திருநெல்வேலி என்ற முகவரியிலும் பணம் பண்டங்களை வழங்கி எமது பற்றுச் சீட்டைப் பெற்றுக்கொள் ளலாம் என்பதையும் அறியத்தரு கின்றோம்.

அம்பிகையின் திருப்பதியிலே அடியார்கள் வசதியாகத் தங்கி நின்று தரிசிப்பதற்காக நவீன வசதிகளுடன் அமைந்த அமுதசுரபி அன்னபூரணி இறைபயணிகள் இல்லமும் மாற்று வலுவுடையோரை ஆற்றுப்படுத்தி அமுதளிக்கும் சிறப்புத் தொண்டர்களைக் கொண்ட அமுதசுரபி - விசாலாட்சி மண்டப மும் அமைக்கப்பெற்றுள்ளதென்பதையும் மனமகிழ்வுடன் அறியத்தருகின்றேன்.


வணக்கம்


"மண்ணிற் பிறந்தார் பெறும் பயன் மதிசூடும்
அண்ணலார் அடியார்தமை அமுது செய்வித்தல்"

**அமுதசுரபி மண்டபம்**
**நயினாதீவு - 02**
**தொ.பே: 0213213575,**
**பதிவு எண் S236**

(C/2523)

**அன்னையின் பணியில்**
**மதியாபரணம் அம்பிகைபாகன்**
**செயலாளர்**







சாவகச்சேரி பொலிஸ் பிரிவிற்கான பொலிஸ் பரிசோதனை நேற்று நடைபெற்றது. இதன்போது யாழ். பிராந்திய பொலிஸ் மா அதிபர் ஜந்து கருணாரட்ண பரிசோதனை மேற் கொள்வதையும், சாவகச்சேரி பொலிஸ் அத்தியட்சகர் திலகரட்ண மற்றும் சாவகச்சேரி பொலிஸ் பொறுப்பதிகாரி வன்னியாராச்சி ஆகியோர் காணப்படுவதையும், பொலிஸார் அணிவகுத்து நிற்பதையும், அணிவகுப்பு மேற்கொள்வதையும் காணலாம். (43)

## பிற்போடப்பட்டுள்ளது

யாழ். கல்விவலயப் பாடசாலைகளில் தரம் 6 தொடக்கம் தரம் 11 வரையான தரங்களுக்கு நாடகமும் அரங்கியலும் பாடத்தினை கற்பிக்கின்ற ஆசிரியர்க ளுக்கு இன்றும் நாளையும் யாழ். கல்வி வலய ஆசிரிய வளநிலையத்தில் நடை பெறவிருந்த நாடக பாட இருநாள் செய லமர்வு தவிர்க்கமுடியாத காரணத்தினால் பிற்போடப்பட்டுள்ளது.

எதிர்வரும் 10 (வெள்ளி) ஆம் 11 (சனி) ஆம் திகதிகளுக்கு பிற்போடப்பட் டுள்ள தாக யாழ். கல்வி வலய அழகியல் பாட உதவிக் கல்விப்பணிப்பாளர் சகல பாடசாலை ஆசிரியர்களுக்கும் அறிவித் துள்ளார். (52)

## திருநாவுக்கரசர் குருபூசை

திருநாவுக்கரசு நாயனாரின் குருபூசை நாளை இடம்பெறவுள்ளது.

இதனை முன்னிட்டு யாழ். மாவட்ட இந்துப் பாடசாலைகளில் குருபூசை தினத் தினை சிறப்பாக நினைவுகூருவதற்கான ஏற்பாடுகளினை அவ்அவ் பாடசாலை இந்து மன்றங்கள் ஏற்பாடு செய்துள்ளன.

அவ்வடிப்படையில் சனிக்கிழமை விடு முறை தினமாக இருக்கின்ற பொழுதிலும் குருபூசை தினத்தில் சொற்பொழிவு மற்றும் பூசை வழிபாடுகளை பல இந்துப் பாடசாலைகளும் மேற்கொண்டுள்ளதாக அறியமுடிகின்றது. (42)

## ஊடக சுதந்திர தினம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் இன்று ஊடக சுதந் திரதின நிகழ்வுகள் யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் இடம்பெறவுள் ளன. யாழ்ப்பாணத்தின் கறுப்பு - வெள்ளை புகைப்படங்கள், தெருவெளிப் புகைப் படங்கள் காட்சி காலை 10.00 மணிக்கும் குறும்படங்கள் வெளியீடு பி.ப 2.30 மணிக் கும் இடம்பெறவுள்ளது.

யாழ். பல்கலைக்கழக ஊடக வளங் கள் மற்றும் பயிற்சி மையம் இதற்கான ஏற்பாடுகளை செய் துள்ளது.

## தெப்பத் திருவிழா

பருத்தித்துறை சித்திவிநாயகர் ஆலய (கொட்டடிப் பிள்ளை) தெப்பத் திருவிழா நாளை மாலை ஆலயத் தின் முன் குளத் தில் வெகுவிமர் சையாக நடைபெற வுள்ளது.

கலை நிகழ்ச்சிக ளும் வில்லுப் பாட் டுக்களும் கடந்த சில வருடங்களாக இடம்பெறாதிருந்த நிலையில் தற் போது நடத்தப்பட விருப்பதாகத் தெரி விக்கப்பட்டுள்ளது. (109)


# சனிக்கிழமை அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

ஆங்கில எழுத்து: F

வெற்றி எண்கள்: 02 11 24 43

போனஸ் இல: 70

ஜக்பொட் பரிசு ரூ. 30,860,775/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை | மொத்த பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 1 இல | 183035 | 20/- | 3,660,700/- |
| 2 இல | 13024 | 100/- | 1,302,400/- |
| 3 இல | 273 | 1,000/- | 273,000/- |
| 4 இல | 01 | 1,000,000/- | 1,000,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் | 7260 | 40/- | 290,400/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் | 529 | 1,000/- | 529,000/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் | 05 | 10,000/- | 50,000/- |
| 4 இல + ஆங்கில எழுத்திற்கும் | - | 30,860,775/- | - |
| 1 இல + போனஸ் இல | 8788 | 100/- | 878,800/- |
| 2 இல + போனஸ் இல | 430 | 500/- | 215,000/- |
| 3 இல + போனஸ் இல | 06 | 100,000/- | 600,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 366 | 200/- | 73,200/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 15 | 1,500/- | 22,500/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | - | 150,000/- | - |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | 213732 | | 8,895,000/- |

இந்த சனிக்கிழமை சுப்பர் ஜக்பொட் பரிசு ரூ. 31,360,300/-

அபிவிருத்தி லொத்தர் சபை

(C/2703)







1 ஆவது

பிறந்தநாள் வாழ்த்து

அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா அவர்களின் ஆசியுடன் முதலாவது பிறந்த நாளை தனது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகிறார்.

எஸ்.தஷான்



திரு.திருமதி ராம் மாலா
04 ஆம் வட்டாரம் வேலணை கிழக்கு

(C/2702)

# வடக்கில் சுவீகரிக்கும் காணிகளுக்கு இழப்பீட்டுத்தொகை வழங்கப்படும்

## யாழ். கட்டளைத் தளபதி தெரிவிப்பு



வடக்கில் பெற்றுக் கொள்ளப்படும் காணிகளுக்கு உரிய மதிப்புத் தொகையைநில உரிமையாளர்களுக்கு வழங்குவோம். பலாலி விமான நிலையத்தை சரவதேச தரத்திற்கு உயர்த்த அப்பகுதியில் 2 ஆயிரம் ஏக்கர் காணியை பெற்றுக் கொள்ளத் தீர்மானித்துள்ளோம என்று யாழ். கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் மகிந்த ஹத்துருசிங்க தெரிவித்தார்.

உண்மைக்கு முரணான பிரசாரங்களைப் பரப்பி வடக்கில் அரசியல் கட்சிகள் ஆர்ப்பாட்டங்களை மேற்கொண்டு வருகின்றன. அந்த ஆர்ப்பாட்டங்களில் வெறும 50 இற்கும் குறைவானவர்களே பங்குபற்றுகின்றனர்.

எவ்வாறாயினும் இந்தப் போராட்டங்களை நாம் பொருட்படுத்த வேண்டியதில்லை என்றும் அவர் குறிப்பிட்டார்.

இது தொடர்பில் யாழ். கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் மகிந்த ஹத்துருசிங்க தொடர்ந்தும் கூறுகையில்,

இலங்கையின் வட பகுதியில துரித அபிவிருத்திப் பணிகள் முன்னெடுக்கப்படுகின்றன. குறிப்பாக பலாலி விமான நிலையத்தைச் சர்வதேச ரீதியில் தரம் உயர்த்துவது மற்றும் துறைமுகத்தை அபிவிருத்தி செய்வது என பல்வேறு அபிவிருத்தித் திட்டங்கள் வடக்கில் முன்னெடுக்கப்படவுள்ளன. இவற்றுக்கு போதிய காணிகள் தேவைப்படும்போது அவற்றை பெற்றுக் கொள்ள சம் பந்தப்பட்டவர்களை நாம் நாடுவோம்.

தென் அதிவேக வீதி, மத்தள சர்வதேச விமான நிலையம் மற்றும் ஹம்பாந்தோட்டை துறைமுகம் போன்ற அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப்படுகையில், அப்பிரதேச மக்களின் காணிகளும் பெற்றுக்கொள்ளப்பட்டன. அப்போது பொதுமக்கள் அரசாங்கத்திற்கு ஒத்துழைப்பு வழங்கினார்கள்.

ஆனால், வடக்கில் அரசியல் கட்சிகள் போலியான பிரசாரங்களை கட்டவிழ்த்து விட்டு பொது மக்களை ஏமாற்றி வருகின்றன.

இராணுவம் ஒருபோதும் வடக்கில் பொது மக்களின் காணிகளைச் சுவீகரிக்கவில்லை. குற்றச் சாட்டுகள் அனைத்துமே உள்நோக்கங்களைக் கொண்டவை எனறும் அவர் மேலும் கூறினார்.




முல்லைத்தீவு நகரில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மேதின நிகழ்வுவின் போது... (125)

# கிடைக்குமா? வீட்டுத்திட்டம் காத்திருக்கும் வரணி மக்கள்

(வரணி)

வடக்கு வரணி ஜே/339 கிராம அலுவலர் பிரிவில் வாழும் மக்கள் வீட்டுத்திட்ட வசதிகள் இது வரை தமக்குக் கிடைக்கவில்லை எனவும், இனியாவது தமக்குக் கிடைக்குமா என ஆவலுடன் எதிர பார்ப்பதாகவும் தெரிவிக்கின்றனர்.

இக்கிராம அலுவலர் பிரிவில் வசிக்கும் வீட்டுவசதி இல்லாத மற்றும் உறவினர் வீடுகளில் தங்கி வாழும் குடும்பங்கள் வீட்டுத்திட்ட வசதிகளின்றி பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

வரணிப் பிரதேசத்தில் கடந்த காலங்களில் உலகவங்கி, தொண்டு நிறுவனம் மற்றும் பாதுகாப்புத் தரப்பினர் வீடுகளை அமைத்து வழங்கியுள்ள நிலையில் பல மக்கள் வீட்டுத் திட்ட வசதிகள் இன்றி இருப்பதுடன் வீட்டுத்திட்டத்திற்கு விண்ணப்பித்திருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (150)

# காளியம்பாள் ஆலயத்தில் திருட்டு; சந்தேகத்தில் ஒருவர் கைது



(கொடிகாமம்)

கொடிகாமம் அருள்மிகு ஸ்ரீ மஹா லாவன்ய காளி அம்பாள் ஆலயத்தில் உட்புகுந்த திருடர்கள் பணத்தைக் களவாடிக் கொண்டு தப்பிச் சென்ற சம்பவம கடந்த செவ்வாய்க்கிழமை இரவு இடம்பெற்றுள்ளது.

குறித்த தினத்தன்று இரவு ஆலய மடப்பள்ளியின் புகைக் கூட்டுக் கம்பியை உடைத்து உள்ளே சென்ற திருடர்கள் உணடியலிலிருந்த பணத்தையும் மற்றும் களஞ்சிய அறையில் இருந்த ஒரு தொகைப் பணத்தையும் களவாடிச் சென்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

உண்டியலைப் பெட்டியோடு எடுத்துச் சென்ற திருடர்கள் கோயில் வளாகத்திலுள்ள தென்னை மரத்தின் கீழ் வைத்து உடைத்து சில்லறை நாணயங்களை விட்டுவிட்டு தாள் நாணயங்களை மாத்திரம் எடுத்துச் சென்றுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இத்திருடர்கள் மூலஸ்தானக் கதவை உடைக்க முயற்சிகள் மேற்கொண்டும் அவை பயனளிக்காததை அடுத்தே இவர்கள் பணத்தை மட்டும் திருடிச் சென்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இத்திருட்டு நடவடிக்கை தொடர்பாக ஆலய நிர்வாகம் கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்ததை அடுத்து நேற்று முன்தினம் மோப்ப நாய்களுடன் வந்த பொலிஸார் பரிசோதனைகளை மேற்கொண்ட பின்னர் சந்தேகத்தின் பேரில் ஒருவரைக் கைது செய்துள்ளனர். மேலும் பொலிஸார் ஆலயத் தில் பதிந்திருந்த திருடர்களின் கைரேகை அடையாளங்களையும் எடுத்துள்ளனர். (இ)

# துணுக்காய் வலயமட்ட தமிழ்த்தினப்போட்டி முடிவுகள்

(துணுக்காய்)

துணுக்காய் வலயக் கல்வி அலுவலகத்திற்குட்பட்ட பாடசாலைகளுக்கு இடையே நடைபெற்ற வலய மட்டத் தமிழ்த்தினப் போட்டியில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவர்களின் விபரம் வருமாறு,

**வாசிப்பு**

**பிரிவு 01**

ப.கேதுஜா - மு.பாலிநகர் ம.வி, பி.சஞ்சிகா - மு.அணிஞ்சியன் குளம் த.வி, சி.சாருஜா - மு.திருமுறிகண்டி இ.வி.

**பிரிவு - 02**

இ.நர்மதா - மு.பாலிநகர் ம.வி, வி.தர்சிகா - மு.துணுக்காய் அ.த.க.பாடசாலை, ஜே.ஜெயதுர்க்கா - மு.ஒலுமடு த.வி.

**ஆக்கத்திறன் செயற்பாடு**

**பிரிவு - 01**

வ.ரஜிபன் - மு.பாண்டியன்குளம் ஆரம்பப் பாடசாலை, ஜெ.வினோஜா - மு.மயில்வாகனம் த.வி.

**பேச்சு**

**பிரிவு - 01**

சி.சோபிதன் - மு.வவுனிக்குளம் படிவம் 4 அ.த.க. பாடசாலை, அ.மதுஜா - மு.பாலிநகர் ம.வி, சி.தனுஷா - மு.முத்தையன்கட்டு இடதுகரை அ.த.க. பாடசாலை.

**பிரிவு - 02**

ச.டிசாந்தன் - மு.முத்தையன் கட்டு இடதுகரை அ.த.க. பாடசாலை, ச.சரணியா - மு.யோகபுரம் ம.வி, தி.சோபனா - மு.நட்டாங் கண்டல் அ.த.க. பாடசாலை.

**பிரிவு - 03**

து.குபேந்தினி - மு.ஒட்டுசுட்டான் ம.வி, ஜெ.மிர்ணாளினி - மு.பாண்டியன்குளம் ம.வி.

**பிரிவு - 04**

பி.பிரசாந்தினி - மு.பாலிநகர் ம.வி.

**பிரிவு - 05**

ர.லோகேஸ்வரன் - மு.பாண்டியன்குளம் ம.வி, நா.யசிந்தா - மு.ஐயன்குளம் அ.த.க. பாடசாலை.

**பாவோதல்**

**பிரிவு - 01**

தி.தேனுகா - மு.முத்தையன் கட்டு இடதுகரை அ.த.க. பாடசாலை, க.சுஜனி - மு.ஐயன்கன் குளம் அ.த.க. பாடசாலை, ப.தினேகா - மு.நட்டாங் கண்டல் அ.த.க. பாடசாலை.

**பிரிவு - 02**

அ.சானுகா - மு.மாங்குளம் ம.வி, அ.வேணுசா - மு.நட்டாங் கண்டல் அ.த.க.பா, பா.அஜிந்தன் - மு.ம.மத்திய கல்லூரி.

(தொடரும்)

# பாடசாலை வீதி புனரமைக்கப்படுமா?

வடக்கு வரணி சைவப்பிரகாச வித்தியாசாலை வீதி மிக நீண்டகாலமாக எந்தவித புனரமைப்பும் இன்றி மோசமாகச் சேதமடைந்துள்ளதாகவும் இதனூடான பயணங்கள் நெருக்கடியின் மத்தியில் இடம்பெறுவதாகவும் இப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

குண்டும் குழியுமாக சேதமடைந்துள்ள இவ்வீதியின் புனரமைப்பு நடவடிக்கைகள் குறித்து தாம் உரிய தரப்பினருக்குப் பல முறை தெரியப்படுத்தியும் இது வரை அதற்கான உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை என மக்கள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

இவ்வீதிப் பகுதியில் கிராம அலுவலகம், முன்பள்ளி, பாடசாலை, பனைப்பொருள் கூட்டுறவுச் சங்கம் என்பன அமைந்துள்ளதுடன் மாசேரி ஜே/340 கிராம மக்களும் இவ்வீதியைப் பயன்படுத்தி வரும் நிலையில் மழை காலங்களில் பாடசாலை மாணவர்கள் வழுக்கி விழும் நிலையும் ஏற்படுவதாகவும், வாகனங்களும் மண்ணுக்குள் புதையும் அவல நிலையும் காணப்படுவதாகவும் மக்கள் தெரிவிக்கின்றனர். எனவே இப்பிரதேச மக்களின் போக்குவரத்துத் தேவைகளைக் கருத்திற் கொண்டு இவ் வீதியைப் புனரமைக்க உரியவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா? என மக்கள் கேள்வி எழுப்புகின்றனர். (03)



நெல்லியடி லயன்ஸ் கழகத்திற்கு மாவட்ட ஆளுநரின் உத்தியோகபூர்வ விஜயத்தின் போது லயன்கழகப் பிரதிநிதிகள் கௌரவிககப்படுவதைக் காணலாம். (01)

கடுமையாக முயற்சி செய், வெற்றி உன்னைத் தேடி வரும் நாள் வெகு தொலைவில் இல்லை. - வெஸ்மல்.

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU

இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.thinamurasu.net

## செக்குச் சுழலிலிருந்து வெளிவருதல்!

இன்று உலக பத்திரிகை சுதந்திர தினம். பத்திரிகை சுதந்திரத்தின் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துதல் மற்றும் கருத்து சுதந்திரத்தை கட்டிக்காப்பது பற்றி உணர்த்தும் விதமாக மே 3ஆம் திகதி உலக பத்திரிகை சுதந்திர தினம் கடைப்பிடிக்கப்படுகிறது. சமூக மாற்றத்திற்கு பத்திரிகை சுதந்திரம் அவசியம் என்பது மையக்கருத்தாக உள்ளது.

நமது சூழலில், ஊடக சுதந்திரம் பற்றி எண்ணினாலே, "ஊடகங்களுக்குச் சுதந்திரத்தை விட இன்று முக்கியமானது ஊடகங்களிடமிருந்து மக்களுக்குச் சுதந்திரமே" என்று சொன்னவரின் வாக்கே தவிர்க்க முடியாமல் நினைவுக்கு வருகிறது. நமது மக்களின் உண்மை அறியும் சுதந்திரத்தை இன்று பெருமளவில் பறித்துக் கொண்டிருப்பவை ஊடகங்கள்தான் என்பதில், சிந்திக்கத் தெரிந்தவர்களுக்கு ஒருவகையிலும் சந்தேகமிருக்காது.

நடப்பதை உள்ளபடியோ, நடைமுறைக்குச் சாத்தியமான எதிர்பார்ப்புகளையோ மக்களுக்குத் தருவதில்லை தமிழ் ஊடகங்கள். மக்களை உணர்ச்சிகரத்தில் ஆழ்த்தி உண்மையை அறியவிடாமற் செய்யும் தந்திரோபாயத்தையே தமிழ் ஊடகங்கள் இன்னமும் கைவிடாமல் செய்துகொண்டிருக்கின்றன.

ஈழத்தமிழ் மக்களுக்கு இன்று சாத்தியமாகக் கூடிய தீர்வு எது என்பது பற்றி இந்த ஊடகங்கள் எதுவும் பேசுவதில்லை. தமிழ் மக்கள் ஏமாற்றப்படுகிறார்கள், பேரினவாதத்தால் அடக்குமுறைச் சுருக்குவளையம் இறுக்கப்படுகிறது, இராணுவ ஆக்கிரமிப்பு அதிகமாகிறது, நிலம் பறிபோகிறது, திட்டமிட்ட குடியேற்றங்கள் உருவாகின்றன... என்பது போன்ற அறுபது வருடக் கோஷங்களே இன்றும் அதே சுருதி மாறாமல் ஊடகங்களில் போடப்படுகிறது.

சுதந்திரன் காலத்திலிருந்து தமிழரசுக் கட்சியின் இன்றைய பத்திரிகை வரை இந்தக் கோஷங்களால் விற்பனை லாபத்தையும், சார்ந்த கட்சியினரின் நாடாளுமன்றக் கதிரைகளையும் தொடர்ந்து பார்த்துக் கொண்டனரே தவிர, மக்களுக்குப் பிரயோசனமாக எந்த ஒரு சிறு மாற்றத்தையும் ஏற்படுத்தியதில்லை.

இப்போதும் அதே வீர விளாசல்களே லாபத்தையும் கதிரைகளையும் தந்துகொண்டிருக்க, மக்கள் பேரழிவுகளையும் அன்னவாரங்களையும் பட்டதோடு இன்றும் அடிப்படை வசதிகள் முழுமையாகத் தீர்க்கப்படாமல் கஷ்டங்களுக்குள்ளேயே வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். இந்த நாட்டை விட்டு எங்காவது வசதி வாய்ப்புகள் உள்ள நாடுகளை நோக்கி ஓடிப்போய்விட்டால் போதும் என்ற மனநிலையில் மக்களைக் கொண்டுவந்து விட்டிருப்பதே இந்த ஊடகங்களும் இவர்களது அரசியலும் இதுநாள்வரை செய்திருக்கும் – செய்துகொண்டிருக்கும் சாதனை!

மக்களை வாழ வைக்கும் விதமான எழுத்தை – விவாதங்களை – அரசியலை இவர்கள் செய்ததில்லை. வெறுப்பையும் விரோதத்தையும் ஊட்டி, அந்த மனநிலையில் மக்களது அவலங்களை நியாயப்படுத்திக்கொள்ளும் குரூர ஊடக தந்திரமே இன்றுவரை கோலோச்சுகிறது. அவலங்கள் மாறாமலிருப்பதற்கான பழியை மட்டும் யார் மீதாவது உணர்ச்சிகரமாகப் போட்டுவிடுவதற்கு, காலத்துக்குக் காலம் எதிரிகளைப் புதுப்புதுசாய் கண்டுபிடித்து மக்களுக்கு வழங்கியதே, எப்போதும் இவர்களை வெல்ல வைத்துக் கொண்டிருக்கும் ஒரே தந்திரோபாயம்!

தங்களை வியாபார ரீதியாகவும் அரசியல் ரீதியாகவும் வெல்ல வைத்துக் கொள்ளும் தமிழ் ஊடகங்கள் ஒருபோதும் ஒரு சிறு விஷயத்திலும் மக்களை வெல்ல வைத்ததில்லை. மக்கள் தொடர்ந்தும் அவலநிலைகளுக்குள்தான் வாழ்ந்து வருகிறார்கள் என்பதையும் இந்த ஊடகங்களே சொல்லிக் கொண்டிருக்கின்றன; அதனையே தங்களுக்கான முதலாக்கியும் கொள்கின்றன. தமிழிலே கொஞ்சமேனும் தாங்கள் சிந்திப்பதாகக் கருதிக் கொள்வோர், தங்களது முதல் கடமையாக இந்த அபத்த சூழலைக் கண்டு கொள்வதும், எடுத்துச்சொல்லி மக்களை இந்தச் சுழலிலிருந்து வெளியே கொண்டுவர முயற்சிப்பதையுமே செய்ய வேண்டும்.

- ஆசிரியர்

# தேசிய ஒற்றுமையை உருவாக்க அனைவரும் போராட வேண்டும்

## அழைப்பு விடுக்கிறார் சோமவன்ச

நாட்டில் சர்வாதிகார வெறியும் ஏகாதிபத்திய ஆக்கிரமிப்பும் வேண்டாம். தற்போதைய அரசாங்கத்தை ஆட்சியிலிருந்து விரட்டியடித்து தேசிய ஒற்றுமையை உருவாக்க அனைவரும் போராடுவோம். இன்று வடக்கிற்கோ அல்லது தெற்கிற்கோ எந்தவிதத்திலும் சுதந்திரம் இல்லை என ஜே.வி.பி.யின் மே தினக் கூட்டத்தில் அக் கட்சியின் தலைவர் சோமவன்ச அமரசிங்க தெரிவித்தார்.

நேற்று முன்தினம் நடந்த ஜே.வி.பி.யின் மே தின சிவப்பு பேரணி தெஹிவளையிலிருந்து ஊர்வலமாக வந்து ஹவ்லொக் வீதியில் அமைந்துள்ள பி.ஆர்.சி. மைதானத்தில் கூட்டம் இடம்பெற்றது. இதன்போது உரையாற்றுகையிலேயே சோமவன்ச அமரசிங்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

ஏகாதிபத்திய வாத அமெரிக்கா இன்று ஆசியாவை குறிவைத்துள்ளது. மாலைதீவில் அமெரிக்காவின் தளமொன்றை அமைக்க திட்டங்கள் தீட்டப்படுகின்றன. இதற்கு ஆசிய பிராந்திய மக்கள் இடமளிக்கக் கூடாது. அதேபோல் அமெரிக்காவினால் திட்டமிட்டு ஈரான் மற்றும் வடகொரியா மீது முன்னெடுக்கப்படுகின்ற அடக்குமுறைகளைக்கண்டிப்பதோடு அந்த நாடுகளுக்கு ஜே.வி.பி. நிபந்தனை அற்றவகையில் ஆதரவு வழங்கும்.

யுத்தம் முடிவுக்கு வந்தும் பொதுமக்களின் அடிப்படைப் பிரச்சினைகள் தீர்த்துவைக்கப்படவில்லை. அனைத்து நிவாரணங்களும் வெட்டப்படுகின்றன. மாத்தளை மனிதப் புதைகுழி உண்மைகளையும் மூடிமறைக்க அரசு திட்டமிட்டுள்ளது.

எனவே, போராட்டத்தின் ஊடாக வெற்றி இலக்கை அடைய பொதுமக்கள் ஒன்று திரள வேண்டும். இது எளிதான விடயமல்ல. சவால் மிக்கதாக அமைந்தாலும் அதனை எதிர்கொள்ள பரந்த சூழல் தற்போது கிடைத்துள்ளது. அமெரிக்கா, ஆசியா மீது தனது பார்வையை திருப்புவதையோ அல்லது நமது நாட்டின் உள்ளக விடயங்களில் தலையிடுவதையோ அனுமதிக்க முடியாது. வியட்நாம், சிரியா, லிபியா, ஈரான், ஆப்கானிஸ்தான் மற்றும் வடகொரியா போன்ற நாடுகள் மீது அடக்கு முறைகளை அமெரிக்கா மேற்கொண்டு வருகின்றது என அவர் மேலும் தெரிவித்தார்.

# பால்மா பரிசோதனை குறித்த நியூஸிலாந்தின் கோரிக்கை நிராகரிப்பு

நியூசிலாந்திலிருந்து இறக்குமதி செய்யப்படும் பால்மா வகைகளை கதிரியக்க பரிசோதனைக்கு உட்படுத்த வேண்டாம் என நியூசிலாந்து விடுத்த கோரிகையை தேசிய அணுசக்தி அதிகார சபை நிராகரித்துள்ளது.

இலங்கைக்கு வருகைதந்துள்ள நியூசிலாந்தின் சிறுக்கைத்தொழில் அமைச்சின் பிரதிநிதிகள் இருவருடன் இது தொடர்பாக நேற்று முன்தினம் நடைபெற்ற பேச்சுவார்த்தையின்போதே அதிகார சபை இந்தத் தீர்மானத்தை அறிவித்துள்ளது.

தமது நாட்டு பால்மா வகைகளை கதிரியக்க பரிசோதனைக்கு உட்படுத்த வேண்டாம் என குறித்த இருவரும் கேட்டுக்கொண்ட போதிலும் அவர்கள் எவ்வித அழுத்தங்களும் கொடுக்கவில்லை என தேசிய அணுசக்தி அதிகார சபையின் தலைவர் கலாநிதி ரஞ்சித் விஜேவர்தன குறிப்பிட்டார்.

கதிரியக்க பதார்த்தங்கள் அடங்கியுள்ளனவா என்பதைக் கண்டறிய தேசிய அணுசக்தி அதிகார சபையினால் மேற்கொள்ளப்படும் பரிசோதனைகளின் பின்னரே இறக்குமதி செய்யப்படுகின்ற பால்மா வகைகள் நாட்டிற்குள் அனுமதிக்கப்படுகின்றன.

# யாழ்.குடாநாட்டில் அதிகரிக்கும் காலாவதியான பொருள் விற்பனை

யாழ். குடாநாட்டில் காலாவதியான பொருட்களின் விற்பனை நாளாந்தம் அதிகரித்து வருவதாக யாழ். மாவட்ட பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் அதிகாரி என். சிவசீலன் தெரிவித்தார்.

யாழ். மாவட்டத்தில் உள்ள ஐந்து நீதிமன்ற எல்லைக்குட்பட்ட பிரதேசத்தில் பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையினால் கடந்த ஏப்ரல் மாதம் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையின் போது, 56 வர்த்தகர்களுக்கு எதிராக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

இந்த நடவடிக்கையின் போது, யாழ்ப்பாணத்தில் 10 வர்த்தக நிலையங்களும், ஊர்காவற்றுறையில் 8 வர்த்தக நிலையங்களுக்கும் மலலாகத்தில் 18 வர்த்தக நிலை யங்களுக்கும், சாவகச்சேரியில் 10 வர்த்தக நிலையங்களுக்கும் எதிராக நடவடிக்கை மேற்கொளளப்பட்டது.

இந்த வர்த்தக நிலையங்களுக்கு எதிராக எதிர்வரும் வாரங்களில் அந்தந்தப் பிரதேச நீதிமன்றங்களில் வழக்குத் தாக்கல் செய்யப்படவுள்ளதாக அவர் கூறினார்.

அத்துடன், வர்த்தக நிலையங்களில் பொருட்களை நுகர்வோர் காலாவதி திகதி, கொள்வனவு திகதி என்பவற்றினை பரிசீலனை செய்து பெற்றுக் கொள்ளுமாறும் வேண்டுகோள் விடுத்துள்ளார். (25)

# எரிபொருள் மானிய முத்திரை குறைப்புச் செய்யவேண்டாம்

## – அமைச்சர் ராஜிதவிடம் கோரிக்கை

மீனவர்களுக்கு வழங்கப்பட்ட எரிபொருள் மானியத்தில் ஆட்குறைப்புச் செய்யப்பட்டுள்ளமையினால் மீனவர்கள் பல்வேறு இன்னல்களுக்கு முகம் கொடுத்து வருகின்ற நிலையில் எரிபொருள் மானியங்களில் எவ்வித குறைப்பும் செய்யாது மீனவர்களுக்கு தொடர்ந்தும் வழங்குமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன், கடற்றொழில் மற்றும் நீரியல்வளத்துறை அமைச்சர் ராஜித சேனாரத்னவுக்கு கோரிக்கைக் கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

குறித்த கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

எரிபொருள் விலையேற்றத்தினால் மீனவர்கள் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து வந்த நிலையில் மீனவர்களின் நலன் கருதி கடற்றொழில் மற்றும் நீரியல்வளத்துறை அமைச்சு மீனவர்களுக்கான எரிபொருள் மானியத்தை வழங்கி வந்தது.

இந்நிலையில் தற்போது. மன்னார் மற்றும் முல்லைத்தீவு மீனவர்களுக்கு வழங்கப்பட்டு வரும் எரிபொருள் மானிய முத்திரைகளில் ஆட்குறைப்புச் செய்யப்பட்ட நிலையில் பல மீனவர்களுக்கு குறித்த எரிபொருள் மானிய முத்திரை வழங்கப்படவில்லை என பாதிக்கப்பட்ட மீனவர்கள் தெரிவித்துள்ளனர்.

இதனால் அந்த மீனவர்கள் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து வருகின்றனர். ஆனால மன்னார் மாவட்ட கடற்றொழில் பணிமனையின் அதிகாரிகள் குறித்த மானியக் குறைப்புத் தொடர்பாக எவ்வித அறிவித்தல்களையும் உரியமுறையில் வழங்கவில்லை.

எனவே, கடற்றொழில் அமைச்சர் என்ற வகையில் பாதிக்கப்பட்ட மன்னார் மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களைச் சேர்ந்த மீனவர்களுக்கு எவ்வித குறைப்பும் இன்றி அனைத்து மீனவர்களுக்கும் குறித்த எரிபொருள் மானிய முத்திரையினை வழங்க நடவடிக்கையினை உடன் மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்வதாக அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# மக்கள் கையேந்தும் நிலையை மாற்றுகின்ற அரசியலே எம்முடையது!

**கிளிநொச்சியில் நடைபெற்ற ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் மேதினக் கூட்டத்தில், ஈ.பி.டி.பி.யின் யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் நாடாளுமன்ற குழுக்களின் பிரதித் தவிசாளருமான முருகேசு சந்திரகுமார் ஆற்றிய உரை.**



இது உழைப்பாளர்களின் நாள். உழைப்பினாலும் உழைப்பாளர்களினாலும் உருவாக்கப்பட்டதே இந்த உலகமாகும்

உழைப்பாளர்கள் இல்லையென்றால் இன்று நாம் பார்க்கின்ற வடிவத்தில் இந்த உலகம் இருக்காது.

அது வேறு வடிவமாக இருந்திருக்கும். ஆகவே உழைப்பாளிகள் தங்களுடைய உழைப்பினால் இந்த உலகத்தை நமக்காக உருவாக்கித் தந்திருக்கிறார்கள்.

இன்று மட்டுமல்ல, நாளை நாம் வாழப்போகின்ற உலகமும் உழைப்பினால் உருவாக்கப்படும் உலகமாகவே இருக்கும்.

ஆகவே இந்த உலகம் உண்மையில் உழைப்பாளிகளுக்கே உரித்தானது.

அந்த உழைப்பாளர்கள் தங்கள் உரிமைகளுக்காக, தங்களுடைய அடையாளங்களுக்காக, தங்களுடைய உணர்வுகளை வெளிப்படுத்துவதற்காக இந்த நாளை பிரகடனப்படுத்தியிருக்கிறார்கள்.

19ஆம்நூற்றாண்டிலே சிக்காக்கோ தலைநகரிலே தொழிலாளர்கள் தங்கள் உரிமைகளுக்காகப் போராடிய அந்த நிகழ்ச்சி இன்று உலகம் முழுவதும் தொழிலாளர்கள் உரிமைகளுக்கான அடையாளமாக மாறியுள்ளது.

மே தினம் என்பது சம்பிரதாய பூர்வமாக கொண்டாடப்படும் ஒரு சடங்கு அல்ல. அரசியல்கட்சிகள் தங்களுடைய அரசியல் ஆதாயங்களைத் தேடுவதற்காக நடத்தப்படுகின்ற விழாவுமல்ல.

அது உரிமையை விரும்புகின்ற மக்களின் ஒரு வெளிப்பாட்டு நிகழ்ச்சியாகும்.

எமது மக்கள் தங்களுடைய

**யதார்த்தத்தை, வரலாற்றை, உண்மை நிலைவரத்தை புரிந்து கொள்ளாத வெறும் கற்பனைவாத இலட்சிய நோக்கே பின்னோக்கிய நிலைமைகளுக்குக் காரணம். இதுதான் உண்மை. உண்மையையும், வரலாற்றையும், யதார்த்தத்தையும் ஏற்றுக் கொள்ளாத எந்தச் சமூகமும் எந்தக் கொம்பர்களும் முன்னோக்கி ஒரு அடியை நகர்த்தமுடியாது.**

உணர்வுகளை வெளிப்படுத்துவதற்காக மே தினத்தை ஒரு வாய்ப்பாக பயன்படுத்துகின்றனர்.

நாம் எமது மக்களுடன் இணைந்து சிதைந்துபோன வாழ்க்கையை மீளக்கட்டியெழுப்பி உழைத்து வருகின்றோம்.

ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி தன்னுடைய அரசியல் வழிமுறையை இந்த அடிப்படையிலேயே முன்னெடுத்து வருகிறது. எமது கட்சியின் செயலாளர் நாயகமும் கௌரவ அமைச்சருமான தோழர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் தீர்க்கதரிசனமாக பொருத்தமான அரசியற்கொள்கையை வகுத்துள்ளார்.

இலங்கை இந்திய உடன்படிக்கையின் பின்னர் ஏற்பட்ட அரசியல் மாற்றங்களையும் கடந்த கால போராட்ட அனுபவங்களையும் கவனத்திலெடுத்து புதிய அரசியல் வழிமுறையை நாம் உருவாக்கினோம்.

எமது அரசியல் வழிமுறையானது கடந்த காலத்தில் மிகப்பெரும் நன்மைகளை தமிழ்ச் சமூகத்திற்கு வழங்கியுள்ளது. இதை நாம் பெருமையோடும், மகிழ்ச்சியோடும் இங்கே தெரிவிக்கின்றோம்.

நாம் ஆக்கத்தின் அரசியலையே மக்களுக்காக முன்னெடுக்கின்றோம். அழிவு அரசியலுக்கு எதிராகச் செயற்படுகின்றோம். கடந்த காலத்தில் எமது அரசியல் செயற்பாடுகளின் மூலம் தமிழ்ச்சமூகம் பெற்றுக்கொண்ட நன்மைகள் ஏராளம்.

உழைப்பாளிகள் இந்த உலகத்தை உருவாக்கியதைப் போல நாங்களும் எமது மக்களின் வாழ்வையும் பிரதேசங்களையும் வளமாக்கியுள்ளோம்.

மக்களை அவலத்திலிருந்து மீட்பதே எமது பணியாகவிருந்தது. அல்லது மக்களுக்கு ஏற்படும் இன்னலைக் குறைப்பதாகவே எமது அரசியல் வழி-முறை இருந்தது.

நாங்கள் ஊர்களை விட்டு மக்களை இடம்பெயரச் செய்யும் அரசியலை முன்னெடுக்கவில்லை.

ஊர்களுக்கும், சொந்த வீடுகளுக்கும் திரும்பிவரும் அரசியலையே முன்னெடுக்கிறோம். ஊர்களை அழிக்கும் அரசியலை நாங்கள் எதிர்க்கின்றோம். ஊர்களை ஆக்கும் அரசியலையே நாங்கள் ஆதரிக்கிறோம்.

இதுதான் எங்களுக்கும் எங்களுக்கு எதிராகச் செயற்படுவோருக்கும் இடையிலான வேறுபாடு.

இதை நீங்கள் தெளிவாகப் புரிந்துகொள்ள வேண்டும்.

எமது மக்களே, நீங்கள் விழிப்பாக இல்லையென்றால் நிச்சயமாக மீண்டும் மீண்டும் சுயநலவாதிகளால் ஏமாற்றப்படுவீர்கள்.

எமது இந்த அரசியல் உண்மையையும் உழைப்பையும் திட்டமிட்டு எதிர்ச் சக்திகள் மூடிமறைத்து வருகின்றன. இதற்கு சில ஊடகங்களும் துணைபோகின்றன.

மக்களே, உங்களுக்கு உண்மைகள் தெரியும். உங்களை யாரும் ஏமாற்ற முடியாது.

பொய் சொல்கின்ற ஊடகங்கள் உங்களுக்கே துரோகம் இழைக்கின்றன. மக்களுக்கு உழைப்பவர்களின் உழைப்பை மூடி மறைக்கும் துரோகச் செயலை எந்தவகையான கூச்சமும் இல்லாமல் செய்கின்றன.

உழைப்பாளிகளின் நாளில் மெய்யான - உண்மையான உழைப்புக்குச் செய்யப்படும் அநீதியை நான் கண்டிக்கிறேன்.

மக்களுக்காக நாங்கள் செய்கின்ற பணியை எமது உழைப்பை மறைத்து அதைக் கொச்சைப்படுத்தி நாங்கள் சோரம் போகும் அரசியலை முன்னெடுப்பதாக பொய் கூறுகிறார்கள்.

மக்களுடைய சிந்தனையைத் திசைதிருப்பி அவர்களை அவலத்திலேயே தொடர்ந்தும் வைத்திருப்பதையே குறியாகக் கொண்டு செயற்படுவதே. பாரம்பரிய தமிழ் அரசியல் வழிமுறையாகும்.

இதற்கு படித்த வர்க்கத்தினரும் அறிந்தும் அறியாமலும் துணைபோவது மிகவும் வருத்தத்திற்குரியது.

இன்று உலகம் பல மாற்றங்களைக் கண்டுள்ளது. அறிவாலும் அனுபவத்தாலும் முன்னோக்கிப் பயணிக்கின்றது.

கடந்த கால அனுபவங்களைப் பாடமாகக் கொண்டு புதிய மாற்றங்களை உருவாக்கி வருகின்றது உலகம்.

ஆனால் தமிழர்களில் ஒருசாரார் அனுபவங்களையும் அறிவையும் மூட்டை கட்டித் தூர வைத்துவிட்டு பழைய பாதையிலேயே குருட்டுப்பயணம் செய்கின்றார்கள்.

இது அறிவியலுக்கு நேர்மாறானது. ஒரு சிந்திக்கும் சமூகம் நிச்சயமாக இப்படிச் செயற்படமாட்டாது.

ஆனால் தமிழ் மக்கள் எதிர்வளமாகவே சிந்திக்கப் பழக்கப் படுத்தப்பட்டுள்ளார்கள். என்றபடியால்தான் தமிழ்ச் சமூகம் நீண்ட காலமாக எந்தப் பிரச்சினைக்கும் தீர்வு காணமுடியாமல் புதிது புதிதா-கப் பிரச்சினைகளை உருவாக்கிக் கொண்டிருக்கிறது.

புதிய தேசத்தை உருவாக்கப் போராடிய தமிழ்ச் சமூகம் இன்று ஊர்களை மீட்க முடியாமல் திண-றிக் கொண்டிருகின்றது. இதுதான் வரலாற்றின் சோகம்.

இதற்கு யார் பொறுப்புச் சொல்வது?

யதார்த்தத்தை, வரலாற்றை, உண்மை நிலைவரத்தை புரிந்துகொள்ளாத வெறும் கற்பனைவாத இலட்சிய நோக்கே பின்னோக்கிய நிலைமைகளுக்குக் காரணம். இதுதான் உண்மை.

உண்மையையும், வரலாற்றையும், யதார்த்தத்தையும் ஏற்றுக்கொள்ளாத எந்தச் சமூகமும் எந்தக் கொம்பர்களும் முன்னோக்கி ஒரு அடியை நகர்த்த முடியாது.

கடந்த காலத்தில் எம்மைத் தூற்றியவர்களும் எமது அரசியல் வழிமுறையைக் கொச்சைப்படுத்தியவர்களும் இன்று அரங்கில் இல்லை. இது எல்லோருக்கும் தெரிந்த உண்மை.

மிகப் பிரமாண்டமான தோற்றப்பாட்டைக் காட்டுவது அரசி யலில் எளிது. ஆனால் ஒரு நொடியில் அது சுவடில்லாமல் போய்விடக்கூடியது. இதுதான் கடந்த காலத்தில் நடந்தது.

நான் எதைக்குறிப்பிடுகிறேன் என்று உங்களுக்கு நன்றாக விளங்கும்.

பல்லாயிரக்கணக்கான உயிர்களை இழந்து, கோடிக்கணக்கான சொத்துக்களை இழந்து, பெறுமதியான வாழ்வை இழந்து, சிறப்பான ஊர்களை இழந்து, அருமையான இயற்கை வளங்களை இழந்து, உழைப்பை இழந்து, பெற்ற பிள்ளைகளைச் சொந்தங்களை இழந்து, கை கால் உறுப்புகளை இழந்து என வாழ்க்கை முழுவதும் இழப்புகளையே சேகரித்த ஒரு சமூகமாக மாறியுள்ளோம்.

எமது சமூகம் இழப்பதற்காகப் போராடவில்லை. எந்த ஒரு சமூகமும் இழப்பதற்காகப் போராடுவதில்லை. தொழிலாளர்களும் தங்கள் உரிமைகளை இழப்பதற்காகப் போராடுவதில்லை.

போராட்டம் என்றால் வெற்றியைத் தரவேண்டும். நல்ல வாழ்வைத் தரவேண்டும். நன்மைகளைத் தர வேண்டும்.

ஆனால், தமிழ்ப்பாரம்பரிய அரசியல் சிந்தனையும், வழிமுறையும் வெற்றிக்குப் பதிலாக, நன்மைகளுக்குப் பதிலாக தோல்விகளையும், சிதைவுகளையும், பின்னடைவுகளையும், அலைச்சல்களையுமே கொடுத்துள்ளது. இதற்கு நிச்சயமாக முழுப்பொறுப்பையும் இந்தப் பாரம்பரிய தமிழ் அரசியல்வாதிகளே பொறுப்பேற்க வேண்டும்.

அன்பான மக்களே! உழைப்பாளிகளே! பிரியத்திற்குரிய தோழர்களே!

உண்மைகளையும் உணர்ந்துகொள்ளுங்கள். சரியையும், பிழையையும் விளங்கிக் கொள்ளுங்கள். சரிக்கும் பிழைக்குமிடையில் உள்ள வேறுபாட்டை இனங்காணுங்கள்.

**அபிவிருத்தி அரசியல் என்பது மக்களுடைய தேவைகளை நிறைவு செய்யும் வழிமுறையே! மருத்துவமனை தேவையில்லையென்று யாராவது சொல்ல முடியுமா? எல்லாப் பிரச்சினையும் தீர்ந்த பின்னர் பிள்ளைகளைப் படிக்கவைக்கலாம், அப்போது பாடசாலைகளைக் கட்டிக்கொள்ளலாம் என்று யாரும் சொன்னால் அதை ஏற்றுக்கொள்வீர்களா? வீதிகளும், மின்சாரமும், வீடும் எங்களுக்குத் தேவையில்லை. எல்லாம் இன்னொருபோது பார்த்துக்கொள்ளலாம் என்று எவரும் சொல்வதில்லை. எல்லாம் எங்களுக்குத் தேவை. எல்லாவற்றையும் இழந்த எங்களுக்கு எல்லாமே தேவையாகவுள்ளது. இந்தத் தேவைகளை நிறைவு செய்வதே எமது அரசியல் வழிமுறையாகும்.**

(08ஆம் பக்கம் பார்க்க)

# அரசுக்கு எதிரான யுத்தம் ஆரம்பம் என்கிறார் ரணில்

(கொழும்பு)

அரசாங்கத்தை கவிழ்ப்பதற்கான யுத்தம் தொடங்கிவிட்டதாக ஐக்கிய தேசியக்கட்சியின் தலைவரும், எதிர்க்கட்சித் தலைவருமான ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார்.

அரசாங்கத்திற்கு நாம் திரும்பத்திரும்ப எச்சரிக்கை விடுத்தோம். இனிமேலும் எச்சரிக்கை விடுக்கப்போவதில்லை. அரசாங்கத்தை நாம் விரைவில் கவிழ்ப்போம் என்றும் அவர் தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக்கட்சியின் தலைமையகமான சிறிகொத்தாவில் நேற்று முன்தினம் நடைபெற்ற மே தினக்கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.



அரசாங்கத்தைக் கவிழ்ப்பதற்கான போராட்டம் ஆரம்பமாகிவிட்டது. அதற்காக சமயத்தலைவரகள் மற்றும் சிவில் சமுகத்தினர் உட்பட பலதுறைகளைச்சேர்ந்தோரும வீதியில் இறங்கிப்போராட வேண்டும் என்றும் வேண்டுகோள் விடுத்தார்.

நியாயப்படுத்த முடியாத மோசமான தொழில்முயற்சிகளிலும் விரும்பத்தகாத நோக்கங்களிலும் அரசாங்கம் ஊழியர் சேமலாப நிதியை முதலீடு செய்தமையினால் அது தற்போது பூச்சிய மட்டத்தை அடைந்துள்ளது.

கொழும்பு பங்குப் பரிவர்த்தனை நிலையத்தில் புதிதாக சேர்க்கப்பட்ட நிறுவனங்களுக்கு நிவாரணம் வழங்குவதில் மட்டுமே அரசாங்கம் வெற்றிகண்டுள்ளது. கடந்த வரவு-செலவுத்திட்டத்தில் இந்தக் கம்பனிகளுக்கு நிறுவன வரிகளிலிருந்து அரசாங்கம் விலக்களித்திருந்தது என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

# இரட்டைப் பதிவுடைய வாக்காளர் பெயர் நீக்கம்

(கொழும்பு)

2012 ஆம் ஆண்டுக்கான வாக்காளர் பதிவுப் பட்டியலில் இருந்து இரண்டுக்கு மேற்பட்ட வாக்காளர்களாக பதிவு செய்யப்பட்ட பதிவுகள் நீக்கப்பட்டுள்ளன. 72,319 பதிவுகளே இவ்வாறு நீக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு மாவட்டத்திலிருந்து 11,359 பதிவுகளும் கம்பஹா மாவட்டத்திலிருந்து 9,023 பதிவுகளும் வன்னி மாவட்டத்திலிருந்து 5410 பதிவுகளும் யாழ். மாவட்டத்திலிருந்து 4067 பதிவுகளும் கண்டி மாவட்டத்திலிருந்து 4040 பதிவுகளும் களுத்துறை மாவட்டத்திலிருந்து 3951 பதிவுகளும் நீக்கப்பட்டுள்ளன என்று தேர்தல்கள் திணைக்களம் அறிவித்துள்ளது.

வாக்காளர் இடாப்புப் பட்டியலில் இரண்டுக்கு மேற்பட்ட பதிவுகளை மேற்கொண்டிருந்தமையினால் 2011 ஆம் ஆண்டுக்கான வாககாளர் பட்டியலில் இருந்து 176,534 பதிவுகள் நீக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.



ஜப்பானின் பிரதிப் பிரதமர் தரோ அஸோ இரண்டு நாள பயணமாக நேற்றுக் காலை இலங்கையை வந்தடைந்தார் . இந்நிலையில், ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை ஜனாதிபதி மாளிகையில் இவர் சந்தித்துக் கலந்துரையாடியதாக அரசாங்கத் தகவல்த் திணைக்களம் தெரிவித்துள்ளது.

# நேரடி வரிகளைக் குறைக்க நடவடிக்கை எடுக்கவேண்டும்

## அமைச்சர் திஸ்ஸ கோரிக்கை

(கொழும்பு)

நேரடி வரிகளைக் குறைப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டுமேன அமைச்சர் திஸ்ஸ விதாரண தெரிவித்துள்ளார். கிருலப்பனை நகரசபை மைதானத்தில் நடைபெற்ற மே தினக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றியபோது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்

உழைக்கும் மக்களுக்குக் கூடுதல் வருமானம் வழங்கப்பட வேண்டும். ஓய்வூதியம் பெற்றுக் கொண்டவர்களுக்கு உரிய வகையில் ஓய்வூதியம் வழங்கப்பட வேண்டும்.

அவ்வாறு நடைபெறாவிட்டால் இந்தப் பயணத்தில் அர்த்தமில்லை. அரசாங்கத்தினால் அறவீடு செய்யப்படும் வரி வருமானங்களில் கூடுதலானவை நேரடி வரிகளாகும்.

பொருட்கள் சேவைகளின் விலைகள் உயர்வாகக் காணப்படுவதற்கு வரி அறவீடும் முக்கிய காரணமாகும். நேரடி வரிகளைக் குறைப்பதன் மூலம் மக்களுக்கு நிவாரணங்களை வழங்க முடியும் என திஸ்ஸ விதாரண குறிப்பிட்டுள்ளார்.

# முஸ்லிம் மக்களின் பிரச்சினை இம்மாதம் நடமாடும் சேவை

வடமாகாண முஸ்லிம் மக்களின் நலன்கருதி காணி மற்றும் இந்திய வீட்டுத்திட்டம் தொடர்பான நடமாடும் சேவை நடாத்தப்படவுள்ளதாக சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் யாழ். மாவட்ட அமைப்பாளர் ரீ.எம்.றொசான் தெரிவித்தார்.

நீதியமைச்சரும், சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவருமான ரவூப் ஹக்கீம் கடந்த 26 ஆம் திகதி யாழ். மாவட்டத்திற்கு விஜயம் மேற்கொண்டிருந்த வேளை, வடமாகாண முஸ்லிம்களின் காணிப் பிரச்சினைகள் மற்றும் இந்திய வீட்டுத்திட்டம் தொடர்பாகக் கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டிருந்தன.

இந்தக் கோரிக்கைகளின் பிரகாரம் இந்த மாத நடுப்பகுதியில், நடமாடும் சேவையினை நடத்தி காணி மற்றும் இந்திய வீட்டுத் திட்டம் தொடர்பான குறைகள் நிவர்த்தி செய்யப்படுமெனறு உறுதியளித்துள்ளதாக அவர் கூறினார்.(25)

# நித்திரையால் எழுந்தவர் சந்திரிக்கா அழுகிய பொருள் பொன்சேகா

## கூறுகிறார் அமைச்சர் ரோஹித்த

(கொழும்பு)

ஜனாதிபதி வீதிகளைப் புனரமைத்து, விமான நிலையங்கள், துறைமுகங்களை நிர்மாணித்து வருகிறார். அன்று செய்ய முடியாததைத் தற்பொழுது செய்யும்போது, சந்திரிக்காவுக்கு பொறுத்துக்கொள்ள முடியவில்லை.

சந்திரிக்கா நித்திரையில் இருந்து எழுந்தவர் போல் சத்தம் போடுகிறார். பொன்சேகா சந்தையில் விற்பனை செய்ய முடியாத அழுகிய பொருளாக மாறியுள்ளார் என அமைச்சர் ரோஹித்த அபேகுணவர்தன தெரிவித்துள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா தற்போது மேடைகளில் ஏறி, நாட்டில் தற்போது தலைவர் இல்லை நாடு அழிவை நோக்கி சென்றுள்ளது, நர்ட்டை அபிவிருத்தி செய்ய வேண்டும் எனக் கூறுகிறார்.

11 வருடங்கள் ஆட்சியில் இருந்து செய்ய முடியாததைச் செய்யப் போவதாக இன்று பேசுகிறார். இது நித்திரையிலிருந்து எழுந்தது போன்ற வேலையாகும்.

அண்மையில் மத்துகம பிரதேசத்தில் அடிக்கல் நாட்டும் விழா ஒன்றுக்கு அர்ஜுன போன்ற மூழ்கும் கப்பலுடன் அவர் அங்கு வந்திருந்தார் எனவும், அபேகுணவர்தன குறிப்பிட்டுள்ளார்.

களுத்துறை - இலங்கை சுதந்திரக்கட்சியின் அலுவலகத்தில் நடைபெற்ற வைபவம் ஒன்றில் உரையாற்றும் போதே அமைச்சர் இதனைக் கூறியுள்ளார்.

மின்சாரக் கட்டணங்கள் குறித்து மங்கள சமரவீர பெரிதாக சத்தம் போடுகிறார். அமைச்சர்கள் எவ்வளவு மின்சாரத்தைப் பயன்படுத்தினாலும், செலுத்த வேண்டிய இரண்டாயிரம் ரூபாவைக் கூட அவர் செலுத்தியிருக்கமாட்டார் எனவும் அமைச்சர் அபேகுணவர்தன மேலும் தெரிவித்துள்ளார்.

# நீதி அமைச்சிற்கு வழங்கிய நிதி திரும்பப் பெற்றது அமெரிக்கா

(கொழும்பு)

இலங்கைக்கான உதவியை அமெரிக்கா வாபஸ் பெற்றுக் கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. நீதி அமைச்சிற்கு வழங்கப்பட்ட நிதி உதவித் தொகையே இவ்வாறு வாபஸ் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

உதவி அடிப்படையில் வழங்கப்பட்ட 450 மில்லியன் ரூபா பணம் இவ்வாறு மீளப் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. வினைத்திறனின்மை மற்றும் கவனயீனம் காரணமாக இந்த உதவித் தொகை மீளப் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

நாட்டின் நீதிமன்றக் கட்டமைப்பை மேம்படுத்தும் நோக்கில் இந்த உதவித் தொகை வழங்கப்பட்டுள்ளது.

அரசாங்க அதிகாரிகளுடன் உரிய இணக்கப்பாடுகள் ஏற்படுத்திக்கொள்ள முடியாத காரணத்தினால் உதவித்தொகை வாபஸ் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

இந்த உதவித்தொகை வாபஸ் பெற்றுக் கொள்ளப்பட்டதனை அமெரிக்கத் தூதரகம் உறுதிசெய்துள்ளது.

நீதிமன்றக் கட்டமைப்பின் பல்வேறு துறைகளை மேம்படுத்தும் நோக்கிலேயே இந்த உதவித்தொகை வழங்கப்பட்டிருந்தது. இதே வேளை, குறித்த உதவித்தொகை வாபஸ் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ள போதிலும், மீளப் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என இலங்கையின் நீதி அமைச்சின் செயலாளர் கமாலினி டி சில்வா தெரிவித்துள்ளார்.

இந்த உதவித்தொகை தொடர்பில் பொருளாதார அமைச்சே அமெரிக்காவுடன் பேச்சுவார்த்தை நடத்தியதாகக் குறிப்பிட்டுள்ளார். எனினும், உதவித்தொகை மீளளிக்கப்படமாட்டாது என அமெரிக்கத் தூதரகம் அறிவித்துள்ளது.

# இலங்கை புகலிடதாரி கிறிஸ்மஸ்தீவில் மரணம்

(கொழும்பு)

இலங்கை புகலிடக் கோரிக்கையாளர்களில் ஒருவர் அவுஸ்ரேலியாவின் கிறிஸ்மஸ் தீவில் உயிரிழந்துள்ளதாக அவுஸ்ரேலியத் தகவல்கள் தெரிவிக்கின்றன. சுகயீனம் காரணமாக பாதிககப்பட்ட நிலையில் பாஸ்பேட் ஹில் செயலாக்க பகுதியில் இருந்து நேற்று முன்தினம் குறித்த அகதி கிறிஸ்மஸ் தீவுககு மாற்றப்பட்டுள்ளார்.

எனினும், கிறிஸ்மஸ் தீவுக்கு கொண்டுசென்ற சில மணிநேரங்களுக்குள்ளேயே குறித்த நபர் உயிரிழந்ததாக அவுஸ்ரேலிய குடிவரவுத் திணைக்களம் .நேற்று அறிவித்துள்ளது.

மரணமடைந்த நபரின் குடும்பத்தினருக்கு திணைக்களம் அனுதாபம் தெரிவித்துள்ளது. இவருடைய திடீர் மரணம் குறித்து விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன.

# சம்பூர் அனல் மின்நிலையம் மாத இறுதியில் உடன்படிக்கை

(திருகோணமலை)

திருகோணமலை சம்பூரில் 500 மெகாவாட் திறன் கொண்ட அனல் மின்நிலையத்தை அமைப்பதற்காக, இலங்கையுடன் இந்திய அரசுத்துறை நிறுவனமான என.ரி.பி.சி. இந்த மாத இறுதியல் இரண்டு முக்கிய உடன்பாடுகளைச் செய்து கொள்ளவுள்ளது.

அயல்நாடுகளின் உட்கட்டமைப்பு வசதிகளில், பொருளாதார மற்றும் மூலோபாய செல்வாக்கை விரிவாக்கிக் கொள்ளும் இந்தியாவின் திட்டத்தின் ஒரு பகுதியே இந்தத் திட்டமாகும். மின்சாரக் கொள்முதல் மற்றும் திட்டத்தை நடைமுறைப் படுத்துவது தொடர்பான இரு முக்கியமான உடன்பாடுகளே இந்தமாத இறுதியில் செய்து கொள்ளப்படவுள்ளன.

நீண்டகாலம் இழுபறியாக இருந்து வந்த இந்தத் திட்டத்துக்கான உடன்பாடு செய்து கொள்ளப்படுவது முடிவாகி விட்டது என்பதை இந்திய அரச அதிகாரி ஒருவர் உறுதிப்படுத்தியுள்ளார்.

# கரைச்சி மணியம்குளம் கிராமத்தில் பொதுநோக்கு மண்டபம் திறப்பு



(கிளிநொச்சி)

இன்னும் ஒரு சில ஆண்டுகளில் உட்கட்டுமானங்கள் உள்ளிட்ட எமது மக்களின் அடிப்படைத் தேவைகள் அனைத்தும் பூர்த்தி செய்யப்பட்டு மக்கள் அபிவிருத்தியில் நிறைவான ஒரு சமூகமாக வாழ்வார்கள் என ஈ.பி.டி.பி.யின் நாடாளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயலகப் பிரிவிலுள்ள மணியம்குளம் கிராமத்தில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் 17 இலட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டில் அமைக்கப்பட்ட பொதுநோக்கு மண்டபத்தினை திறந்து வைத்து உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்தகால கொடிய யுத்தத்தின் பாதிப்புக்களை சுமந்த மக்களாக எமது மக்கள் இருப்பதினால் அவர்களுக்கு அதிகளவு தேவைகள் காணப்படுகிறது. குறிப்பாக முப்பது வருடங்களாக பல்வேறு தேவைகளுடன் வாழ்ந்த மக்களின் தேவைகள் ஒரு குறிப்பிட்ட குறுகிய காலத்திற்குள் தீர்த்துவிட முடியாது இருப்பினும், கடந்த மூன்றரை ஆண்டுகளில் மக்களின் வாழ்விலும் பிரதேசங்களின் அபிவிருத்தியிலும் பாரிய முன்னேற்றங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இதற்காக அரசு பல கோடிக்கணக்கான நிதிகளைச் செலவு செய்துள்ளது. இதனை எவரும் மறுத்துவிட முடியாது.

வீதிகள், மின்சாரம், நீர்ப்பாசனம், விவசாயம், கடற்றொழில், உட்கட்டுமானங்கள் என அபிவிருத்தியின் பணிகள் விரிந்து தொடர்கிறது. இதன் தொடர்ச்சியாக இன்னும் சில ஆண்டுகளில் எமது மக்களின் தேவைகள் பூர்த்தி செய்யப்பட்டு அவர்கள் நிறைவான ஒரு சமூகமாக காணப்படுவார்கள் எனத் தெரிவித்தார். நாடாளுமன்ற உறுப்பினர். இந்நிகழ்வில் கரைச்சி பிரதேச செயலர் நாகேஸ்வரன், கிளிநொச்சி மாவட்ட மீள் எழுச்சித்திட்ட மற்றும் துரித மீட்சித்திட்டம் ஆகியவற்றின் பிரதித்திட்டப்பணிப்பாளர் . விஜய கிருஸ்ணன், மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தினர், பொது மக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

# முள்ளாவெளி கிராமத்திற்கு மின்கம்பங்கள் நாட்டல்

(வரணி)

வடக்கு வரணி சைவப்பிரசாக வித்தியாசாலையில் இருந்து முள்ளாவெளி ஜே/340 கிராம அலுவலர் பிரிவுக்கு மின் விநியோகத்தை வழங்கும் வகையில் மின்சார சபையினால் மின்கம்பங்கள் நாட்டப்பட்டுள்ளன. இப்பிரிவில் உள்ள மக்களுக்கு அவர்களின் வீடுகளுக்கு மின் சாரத்தைப் பெற்றுக்கொடுக்கும் முகமாக அண்மையில் மின்கம் பங்கள் நாட்டப்பட்டன. இதனால் இப்பிரிவில் வாழும் குடும்பங்கள் மிகவும் மகிழ்ச்சி அடைவதாக தெரிவித்துள்ளனர். முன்னர் இம் மக்கள் மின்வசதிகளற்ற நிலையில் நாளாந்தம் பல்வேறு கஷ்டங் களை எதிர்நோக்கி வந்த நிலையில் பல்வேறு முயற்சிகளின் பலனாக தற்போது மின்சார விநியோகம் வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (150)

# செயலமர்வு

(சாவகச்சேரி)

தென்மராட்சி வலய பாடசாலைகளில் தரம் 8, 9 வகுப்புக்களுக்கு சைவசமய பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான செயலமர்வு நாளை சனிக்கிழமை காலை 8 மணிமுதல் பிற்பகல் 4 மணிவரை வரணி ஆசிரியர் மத்திய வள நிலையத்தில் நடைபெறவுள்ளது.

இதில் பெயர் குறிப்பிட்டு கடிதம் அனுப்பப்பட்ட ஆசிரியர்கள் மட்டும் தரம் 8, 9 வகுப்புக்களுக்கான சமய பாடத்துடன் ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி ஆகியவற்றை எடுத்து வருமாறு தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (11)

# புனரமைக்க கோரிக்கை

சந்நிதி வீதி தம்பாலைச் சந்திக்கு அண்மையில் உள்ள காட்டுப்பிள்ளையார் ஆலயத்திற்குச் செல்லும் வீதியானது நீண்ட காலமாகப் புனரமைப்பின்றிக் காணப்படுவதாக அப்பகுதி மக்களால் கவலை தெரிவிக்கப்படுகிறது.

ஆலயத்திற்குச் செல்லும் மக்களும், விவசாய நடவடிக்கைக்காகச் செல்லும் மக்களும் இப்பாதையினூடாகப் பயணிக்க முடியாத நிலை காணப்படுகிறது. மழை காலங்களில் வெள்ளம் தேங்கி நின்று சேறும் சகதியுமாகக் காணப்படுவதால் பயணம் செய்யமுடியாதுள்ளது எனவே, உரியதரப்பினர் இப்பாதையினைச் செப்பனிட்டுப் புனரமைப்புச் செய்து தருமாறு மக்கள் கேட்டுள்ளனர்.

# கள்ளச்சாராய உற்பத்தி அதிகரிப்பு

(யாழ்ப்பாணம்)

சிறுப்பிட்டி கலைமதிப்பகுதியில் உள்ள சில வீடுகளில் சட்ட விரோதமாக கள்ளச்சாராயம் உற்பத்திசெய்யப்படுவதாக பிரதேச வாசிகள் குற்றம்சாட்டுகின்றனர்.

இப்பகுதியில் மும்முரமாக இடம்பெறும் கள்ளச்சாராய உற்பத்தி தொடர் பாக பொலிஸாரும் நடவடிக்கை எடுக்காமல் இருப்பதாக குற்றஞ் சாட்டும் பொதுமக்கள், இந்த விடயத்தில் உரிய அதிகாரிகள் தலையிட்டு பிரதேசத்தினை இயல்பு நிலைக்குக் கொண்டுவர நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கேட்டுக் கொள்கின்றனர். (15)

## செய்யுள்



மூலபாரதி

### மக்கள் சொத்து

ஆயிரம் ஏக்கர் காணிவிடுக
அதுவே எங்கள் முதிசசொத்து!
போயினர் புலிகள் எல்லாம்செய்து
பாதித்தல் நாமோ நீதிபகர்வீர்?

எறிகணை அப்போ எதிரும்புதிரும்
எப்படி இருக்க முடியுமங்கே?
பறிகை வைக்க உறவென்றாலும்
பதைக்கு முள்ளம் புரிந்திடுவீரே!

புலிகள் வென்ற இடத்துமவரே
பிடித்தார் காணி அதற்குமிதற்கும்;
மலிதல் தொடர்பு வேண்டாமாமே
மக்கள் சொத்தை மக்களுக்களியும்!

# பருவகாலத்திற்கு ஏற்ற தேங்காய் திருட்டு

தேங்காய்த் திருடர்களின் தொல்லை ஆவரங்கால் கிழக்குப் பகுதியில் அதிகரித்துச் செல்வதாக அப்பகுதி மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். தற்போது தேங்காய் விலை நாளுக்கு நாள் அதிகரித்துச் செல்வதால் திருடர்கள் இவ்வியாபாரத்தில் இறங்கியுள்ளதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

இரவு வேளைகளில் இப்பகுதியில் உள்ள தென்னந் தோப்புகளில் நுழைந்து தேங்காய்களினை பறித்தெடுத்துச் செல்கின்றனர். இதனைக் காணி உரிமையாளர்கள் வீட்டினைப் பாதுகாப்பதனை விட்டுக் காணியைக் காவல் செய்யவேண்டியுள்ளதாக கவலை தெரிவிக்கின்றனர். இதனால் இப்பகுதியில் மீண்டும் விழிப்புக்குழுவினை இயங்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என கிராம சேவகரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (15)

# முரசின் இன்றைய பலன்

(03.05.2013 – வெள்ளிக்கிழமை)

விஜய வருஷம் சித்திரை மாதம் 20 ஆம் திகதி.
நட்சத்திரம் அவிட்டம் பின்னிரவு 04.55 வரை. திதி அட்டமி.
மரண 08.23 வரை. இராகுகாலம் 10.26 - 11.56 வரை.
சுபநேரம் 05.56 - 07.26 வரை.

சோதிடஞானி அவர்களால் கணிக்கப்பட்டது.

**மேடம்**
நற்குணம் மிகுந்தவர், உங்களிடம் அன்பு பாராட்டுவர். உண்மை, நேர்மைக்குக் கிடைத்த மரியாதை என, பெருமிதம் கொள்வீர்கள். தொழில், புதிய வளர்ச்சி பரிமாணம். பணவரவும், நன்மையும் அதிகரிக்கும். விருந்து, விசேஷத்தில் கலந்து கொள்வீர்கள்.

**ரிஷபம்**
எதிர்கால நலனில் அக்கறை கொள்வீர்கள். சுதந்திரமாக செயற்பட விருப்பம் வளரும். தொழிலில் திட்டமிட்ட இலக்கை அடையலாம். சராசரி வரவுடன், கடனும் வசூலாகும். உறவினர் வருகையால், நன்மை கிடைக்கும். மாணவர்க்கு உயர்வு.

**மிதுனம்**
எந்தச் செயலையும் சிறப்பாக நிறைவேற்றுவீர்கள். உங்களின் தனித்திறமையை, பிறர் வியப்பர். தொழிலில், இருந்த இடையூறு விலகும். பணவரவில் முன்னேற்றம். வெகுநாள் காணாமல் தேடியது கைவந்து சேரும். வெளியூரிலிருந்து நல்ல செய்தி.

**கடகம்**
இளமைக்கால நினைவுகளை அசைபோடுவீர்கள். திட்டமிட்ட வேலை வெற்றிகரமாக நிறைவேறும். தொழிலில், எதிர்பார்த்த அரச உதவி கிடைக்கும். பணவரவு திருப்தி. வெகுநாளாய் விரும்பிய பொருளை வாங்குவீர்கள். வழக்குகள் வெற்றியாகும்.

**சிம்மம்**
பேச்சில் தத்துவமும், சிந்தனையும் மிகுந்திருக்கும். எவரையும் அன்புடன் நேசிப்பீர்கள். சமூகத்தில் புகழும் பாராட்டும் பெறுவீர்கள். தொழில், வளர்ச்சி திருப்திகரமான முன்னேற்றம். பணவரவு சீராகும். வழிபாடு நிறைவேற்றுவீர்கள். பிள்ளைகள் உதவி.

**கன்னி**
பேச்சில் நிதானம் பின்பற்றி, நற்பெயரைக் காக்கவும். தொழில், வளர்ச்சிக்கு கூடுதல் முயற்சியும், உழைப்பும் உதவும். வரவை விட செலவு கூடும். பாதுகாப்பில், தகுந்த கவனம் வேண்டும். வேலையிடத்தில் வரும் சச்சரவுகளில் விலகிச் செல்க.

**துலாம்**
ஞாபக மறதி முக்கியமான செயலுக்கு தடையாகும். தொழிலில், குளறுபடி சரிசெய்வது அவசியம். கடுமையான உழைப்புக்கு குறைவான பணவரவு. மனம் சோர்வாக உணர்வீர்கள். குடும்ப அனுசரணை. சீரான ஓய்வு உடல்நலம் பாதுகாக்கும்.

**விருச்சிகம்**
உங்கள் செயலை சிலர் குறை சொல்வர். அவப்பெயர் வராமல் முன்யோசனையுடன் செயற்படுக. தொழில், அளவான மூலதனம் போதும். போட்டிக்காக செலவு வேண்டாம். இல்லறத் துணையின் ஆலோசனை நம்பிக்கை தரும். பயண வாய்ப்பு வரும்.

**தனுசு**
அறிமுகம் இல்லாதவரிடம் சுயபெருமை பேசவேண்டாம். தொழில், கூடுதல் மூலதனம் தேவைப்படும். திட்டமிட்ட இலக்கு நிறைவேறும். சுற்றுப்புறச் சூழ்நிலை தொந்தரவு தரலாம். நித்திரை கெடலாம். வெளியூர் பயணத்திட்டத்தில் மாறுதல் இருக்கும்.

**மகரம்**
நண்பர், உறவினருக்கு உதவுவீர்கள். தொழில் வளர்ச்சி பெற, புதிய அனுகூல வாய்ப்பு உருவாகும். முயற்சிக்குப் பலனாக, உபரிபணவரவு. வெளியூரிலிருந்து எதிர்பார்த்த சுபசெய்தி வரும். புத்திரர் விரும்பியது வாங்கிக்கொடுப்பீர்கள். நட்பில் மனநிறைவு.

**கும்பம்**
வெளித் தொடர்பு மூலம், சிறு சிரமம் எதிர் கொள்வீர்கள். விலகுவதால், மனஅமைதியை பாதுகாக்கலாம். தொழில் சீர் பெற, புதிய அணுகுமுறை பின்பற்றுவீர்கள். வேலையில் உங்களை மறப்பீர்கள். சேமிப்பு செலவுக்கு ஆகும். வாகன பயணத்தில் கவனம்.

**மீனம்**
தொடங்கிய செயல்கள் வெற்றி பெறும். மன உறுதியுடன் செயற்படுவீர்கள். நன்மைகள் தேடிவரும். தொழில், மாற்று உபாயங்கள் பின்பற்றுவீர்கள். வரவு செலவுக்கு ஆகும். பிறர் பொருளைப் பாதுகாக்கும் பொறுப்பு ஏற்க வேண்டாம். பயண மாற்றம்.

# கைதிகளின் தாக்குதலுக்குள்ளான சரப்ஜித்சிங் நேற்றுக்காலை மரணம்

## வீரமகனென பிரதமர் தெரிவிப்பு



பாகிஸ்தான் சிறையில் சக கைதிகளால் தாக்கப்பட்ட இந்தியர் சரப்ஜித் சிங், லாகூர் மருத்துவமனையில் சிகிச்சை பலனின்றி நேற்று அதிகாலை 1 மணியளவில் மரணமடைந்தார்.

கடந்த 6 நாட்களாக கோமா நிலையில் உயிருக்குப் போராடிய சரப்ஜித் சிங் உயிரிழந்தது, அவரது குடும்பத்தினரை சோகத்தில் ஆழ்த்தியுள்ளது.

இந்நிலையில் சரப்ஜித் சிங் உடலை இந்தியாவிடம் ஒப்படைக்க உறுதியாக இருப்பதாக பாகிஸ்தான் வெளியுறவு அமைச்சர் தெரிவித்துள்ளார். சட்ட நடவடிக்கைகள் முடிந்த பின்னர் சரப்ஜித் உடல் இந்தியாவிடம் ஒப்படைக்கப்படும் எனவும் தெரிவித்துள்ளார்

சரப்ஜித் சிங் மரணத்திற்குக் காரணமானவர்களை பாகிஸ்தான் அரசு தண்டித்து மரணத்திற்கு நீதி வழங்கவேண்டும் என்று பிரதமர் மன்மோகன் சிங் பாகிஸ்தான் அரசை வலியுறுத்தியுள்ளார்.

அவர் தனது இரங்கல் செய்தியில் கூறியிருப்பதாவது:

சரப்ஜித் சிங்கின் மரணம் வேதனை அளிக்கிறது சரப்ஜித் சிங் வழக்கில் இந்தியாவின் கோரிக்கை மனுக்களை பாகிஸ்தான் கருத்தில் எடுத்துக் கொள்ளவில்லை.

இவ்வழக்கில் சரப்ஜித் சிங் குடும்பத்தினரை மனித நேயத்துடன் அணுக வேண்டும் இந்தக் கொடூரமான, மனித தன்மையற்ற தாக்குதல் செயலுக்கு காரணமாக குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டும் சரப்ஜித் சிங்கிற்கு நீதி கிடைக்க வேண்டும்

சரப்ஜித் சிங்கின் உடலை இந்தியா கொண்டு வருவதற்கான அனைத்து ஏற்பாடுகளையும் இந்திய அரசு செய்யும் அவருக்கு உரிய இறுதி உரிமைகள் வழங்கப்படும் சரப்ஜித் சிங், இந்தியாவின் வீரமகன். இவ்வாறு பிரதமர் தெரிவித்துள்ளார்.

இந்தியச் செய்திகள்

# அவுஸ்ரேலிய ஆசைகாட்டப்பட்டு கடத்தப்படும் இலங்கை அகதிகள்

சட்டவிரோதமான முறையில் அவுஸ்ரேலியாவிற்கு பயணம் செய்யும் இலங்கை அகதிகளை கைது செய்துள்ளதாக இந்திய அரசாங்கம் அறிவித்துள்ளது. இதுவரை சுமார் 1100 அகதிகளை படையினர் கைது செய்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

மக்களவையில் கருத்து வெளியிட்ட மாநிலங்களவை அமைச்சர் ஆர்.பி.ஐ.சிங், தமிழ்நாட்டு அரசிற்கு கிடைத்த தகவல்களின் அடிப்படையில் அவுஸ்ரேலியாவிற்கு அனுப்பி வைப்பதாக தெரிவித்து பல இலங்கை அகதிகள் இந்தியாவிற்கு கடத்தப்படுகின்றனர். கடந்த 2010ஆம் ஆண்டு முதல் 1163 இலங்கை தமிழ் அகதிகளும் 57 இந்திய பிரஜைகளும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவர்கள் அனைவருக்கும் எதிராக 41 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. தமிழ் நாடு அரசாங்கமானது, இந்தியாவிலுள்ள அனைத்து பொலிஸ் உயர் அதிகாரிகளும் இச் செயற்பாட்டிற்கு எதிராக உரிய சட்டநடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென ஆணையிட்டுள்ளது. என அமைச்சர் சிங் தெரிவித்தார்.

# இந்தியாவில் அதிகாரம் மிக்கவர்கள் மன்மோகன், சோனியா, சிதம்பரம்

இந்தியாவில் அதிகாரமிக்கவர்கள் பட்டியலில், பிரதமர் மன்மோகன் சிங், காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி, மத்திய நிதியமைச்சர் ப.சிதம்பரம் உள்ளிட்டோர் இடம்பெற்றுள்ளனர்.

அமெரிக்காவில் இருந்து வெளியாகும், 'பொறின்பொலிஸி' என்ற இதழ் வெளியிட்டுள்ள உலக அளவில் 500 அதிகாரமிக்க நபர்கள் பட்டியலில்,



இந்தியாவில் இருந்து பிரதமர் மன்மோகன் சிங், காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி உள்ளிட்ட 16 பேர் இடம் பெற்றுள்ளனர்.

மத்திய நிதியமைச்சர் ப.சிதம்பரம், இராணுவ அமைச்சர் ஏ.கே. அந்தோணி, வெளியுறவுத்துறை அமைச்சர் சல்மான் குரஷித், மத குருக்கள் பாபா ராம்தேவ், ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர், பா.ஜ. தலைவர் சுஷ்மா சுவராஜ் ஆகியோரும் இப்பட்டியலில் இடம் பெற்றுள்ளனர்.

இவர்களைத் தவிர, தொழிலதிபர்கள் முகேஷ் அம்பானி, லட்சுமி மிட்டல், ரா உளவுப் பிரிவு அதிகாரி அலோக் ஜோஷி, தேசிய பாதுகாப்பு ஆலோசகர் சிவசங்கர் மேனன், டில்லி முதல்வர் ஷீலா தீட்சித், மும்பை மேயர் சுனில் பிரபு, அம்னெஸ்டி அமைப்பின் செயலாளர் சலில் ஷெட்டி ஆகியோரும் இப்பட்டியலில் இடம்பெற்றுள்ள முக்கிய புள்ளிகள்.

பாகிஸ்தானில் இருந்து இராணுவ தலைமை தளபதி அஸ்பாக் பர்வேஸ் கயானி, ஐஎஸ்ஐ உளவுப்பிரிவு தலைவர் ஜாஹீர் உல் இஸ்லாம், பாகிஸ்தான் தலிபான் தலைவர் ஹகிமுல்லா மெஹ்சூத், கராச்சி நகர நிர்வாகி சையத் ஹசீம் ரசா ஜைதி ஆகியோர் இடம் பெற்றுள்ளனர். இதேபோல் சீனாவில் இருந்து 30 பேர் இப்பட்டியலில் இடம் பெற்றுள்ளனர். புத்த மதத்தலைவரான தலாய்லாமாவும் பட்டியலில் இடம் பிடித்துள்ளார். அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகளைச் சேர்ந்தவர்களே பட்டியலில் அதிகம் இடம் பெற்றுள்ளனர்.

# அம்பானிக்கு இஸட் பாதுகாப்பு கேள்வி எழுப்பும் நீதிமன்றம்



தொழிலதிபர் முகேஷ் அம்பானிக்கு இஸட் பிரிவு பாதுகாப்பு வழங்குவது குறித்து மத்திய அரசுக்கு உச்ச நீதிமன்றம் கேள்வி எழுப்பியுள்ளது. தனி நபர்களுக்கு பாதுகாப்பு வழங்கப்படும் நிலையில், சாதாரண மனிதர்களுக்கான பாதுகாப்பின் நிலை என்ன என்றும் உச்சநீதிமன்றம் மத்திய அரசிடம் கேட்டுள்ளது. தலைநகர் டில்லியில் சரியான பாதுகாப்பு இருந்திருந்தால், 5 வயதுக் குழந்தை பாலியல் வன் கொடுமைக்கு ஆளாகியிருக்காது என்றும் உச்சநீதிமன்றம் சுட்டிக்காட்டியுள்ளது.

ரிலையன்ஸ் குழுமத்தின் தலைவரான முகேஷ் அம்பானிக்கு, சமீபத்தில் இஸட் பிரிவு பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது. உலகப் பணக்காரர்கள் பட்டியலில் 22ஆவது இடத்திலும் உள்ள முகேஷ் அம்பானிக்கு இந்தியன் முஜாகிதீன் தீவிரவாத அமைப்பிடம் இருந்து மிரட்டல் கடிதம் வந்ததாகவும், மும்பையில் உள்ள அவருக்குச் சொந்தமான பிர மாண்டமான அன்ட்டிலா சொகுசு வீட்டை தகர்க்கப் போவதாக எச்சரித்ததாகவும் தகவல் வெளியானது.

இதையடுத்து அவருக்கு இஸட் பிரிவு பாதுகாப்பு அளிக்கப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

**மக்கள்....**

(5ஆம் பக்கத்தொடர்ச்சி...)

பொய்யர்களையும் தவறான வழிகாட்டிகளையும் தூர விலக்குங்கள். வரலாற்றில் துயரங்களை இழைப்பதற்கு சாத்தான்கள் எப்போதும் உள்ளனர். இந்தச் சாத்தான்கள் பொய்யை கவர்ச்சிகரமான தின்பண்டமாக்கித் தருவார்கள். அதற்கு நல்ல ருசியையும் ஊட்டுவார்கள்.

ஆனால், தீமை என்றும் தீமை தான். பொய் என்றும் பொய் தான். அது ஒருபோதும் நன்மையாகவோ, உண்மையாகவோ மாறாது.

நீங்கள் பொய்யான வழிகாட்டிகளின் பின்னே ஒரு அடி கூட வைக்காதீர்கள். கடந்த காலத்தில் இரத்தமும் சதையுமாக வாழ்ந்த அலைக்கழிக்கப்பட்ட உங்களுடைய வாழ்க்கை உங்களுக்குச் சாட்சியாக உண்டு. அனுபவத்தின் ஒளிகொண்டு அது உங்களுக்கு வழிகாட்டும். நாங்கள் உங்களோடு இணைந்து இந்த மீள்குடியேற்றக் காலத்திற்குப் பின்னர் உங்களுடைய வாழ்வை மேம்படுத்துவதற்காகவும் இந்தப்பிரதேசங்களை முன்னேற்றுவதற்காகவும் கடுமையாக உழைத்து வருகின்றோம் என்பது உங்களுக்கு நன்றாகவே தெரியும்.

நாளும் பொழுதும் உங்களுடனேயே இருக்கின்றோம்.

கடந்த காலத்தில் இருள் நிரம்பிய ஊர்களை ஒளியூட்டி வருகின்றோம். புழுதி பூத்திருந்த தெருக்களைப் புதிதாகப் புனரமைத்து வருகின்றோம். குடிசைகளை வீடுகளாக்கியுள்ளோம். மர நிழல்களின் கீழே படிக்கவேண்டியிருந்த நிலையை மாற்றி அழகிய வகுப்பறைகளை அமைத்துத் தந்துள்ளோம்.

குளங்களையும், வாய்க்கால்களையும் புனரமைத்து வருகின்றோம். அபிவிருத்தி என்பது மக்களைத் தலை நிமிரவைக்கும் ஒரு வழிமுறையாகும். கையேந்தும் நிலையை மாற்றுவதற்கான அடிப்படையாகும் அது.

வளர்ச்சியடைந்த நாடுகளை நோக்கித்தான் இங்கிருந்து புலம்பெயர்ந்து போகின்றார்கள் பலர். யாரும் வறிய நாடுகளை நோக்கிப் பயணம் செய்வதில்லை.

நாங்கள் கையேந்தும் மக்களாக இருந்தால் எங்களை இலகுவில் எவரும் அடிமை கொள்ள முடியும். அப்படி சொந்த மக்களையே கையேந்த வைக்கும் அரசியலைச் செய்வதற்கே ஒரு கூட்டம் முன்னணியில் நிற்கிறது. நாங்கள் இதை மாற்றியமைக்க உழைத்துவருகின்றோம்.

உழைப்பாளிகள் உருவாக்கிய உலகத்தைப் போல் நாமும் நல்லதோர் சமூகத்தை உருவாக்க உழைக்கிறோம். இதுதான் எமது அரசியலின் அடிப்படை.

தோழர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் கடந்த காலத்தில் தமிழ்ச் சமூகத்திற்கு ஆற்றிய பணியை, எமது கட்சி அளித்த பங்களிப்பை வேறு எந்தத் தரப்பும் ஆற்றவில்லை. இது முக்கியமானது.

அபிவிருத்தி அரசியல் என்பது மக்களுடைய தேவைகளை நிறைவு செய்யும் வழிமுறையே!

மருத்துவமனை தேவையில்லையென்று யாராவது சொல்ல முடியுமா?

எல்லாப் பிரச்சினையும் தீர்ந்த பின்னர் பிள்ளைகளைப் படிக்க வைக்கலாம், அப்போது பாடசாலைகளைக் கட்டிக்கொள்ளலாம் என்று யாரும் சொன்னால் அதை ஏற்றுக்கொள்வீர்களா?

வீதிகளும், மின்சாரமும், வீடும் எங்களுக்குத் தேவையில்லை. எல்லாம் இன்னொருபோது பார்த்துக்கொள்ளலாம் என்று எவரும் சொல்வதில்லை. எல்லாம் எங்களுக்குத் தேவை. எல்லாவற்றையும் இழந்த எங்களுக்கு எல்லாமே தேவையாகவுள்ளது.

இந்தத் தேவைகளை நிறைவு செய்வதே எமது அரசியல் வழிமுறையாகும். தேவைகளை நிறைவு செய்வதற்காகவே மனிதர்கள் உழைக்கின்றார்கள்.

அப்படி தேவைகளை நிறைவுசெய்வதற்காக உருவாகியதே இந்த உலகம். இந்த உலகத்தின் பொதுப் போக்கிலேயே எமது அரசியற் பயணமும் எமது மக்களின் அரசியல் எதிர்காலமும் தங்கியுள்ளது. இதையே நான் இங்கு ஆணித்தரமாக உங்கள் முன்னிலையில் வெளிப்படுத்துகின்றேன். இது உழைப்பாளிகளாகிய எங்களின் நாள். இந்த நாளில் நாங்கள் ஒன்றிணைந்து எங்களின் உணர்வை வெளிப்படுத்துவோம். எங்களின் வெற்றியை வெளிப்படுத்துவோம்.




## வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் : ..........................................

முகவரி : ..........................................

பிறந்த ஆண்டு : ..........................................


கூப்பன்கள் ஐந்தும், புகைப்படமும்


..........................................

பெற்றோர் கையொப்பம்

உங்களது பத்து வயதுக்குட்பட்ட சிறார்களின் பிறந்த நாள் கொண்டாட்டங்களில் "தினமுரசு" தினப்பதிப்பும் இணைகின்றது. உங்களது சிறாரின் புகைப்படத்துடன் கீழ்வரும் கூப்பன்களில் ஐந்தினை நிரப்பி எமக்கு அனுப்பி வையுங்கள். தினமுரசு தினப்பதிப்பு உங்கள் அன்புச் செல்வத்தின் பிறந்த நாளன்று புகைப்படத்துடன் கூடிய பிறந்த நாள் செய்தியைப் பிரசுரிக்கும் என்பதை மனமகிழ்வுடன் தெரிவிக்கின்றோம்.

# ஸ்ரான்லி, வித்தியானந்தா இடையே நண்பர்களின் போர் இன்று ஆரம்பம்


கனகரத்தினம் மத்திய ம.வி.


முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரி

(யாழ்ப்பாணம்)

வடக்கின் போர், பொன் அணிகளின் போர், வீரர்களின் போர், இந்துக்களின் போர் என நீளும் பட்டியலில் புதியதாக இணைந்து கொள்கின்றது நண்பர்களின் போர். யாழ். கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலய (ஸ்ரான்லி) அணிக்கும், முல்லைத் தீவுமுள்ளியவளை வித்தியானந்தாக்கல்லூரி அணிக்கு மிடையிலான இரண்டு நாள் இனிங்ஸ் கிரிக்கெட் போட்டி முதல் முறையாக இன்று நண்பகல் 12.30 மணிக்கு யாழ். கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலய மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இரு அணிகளுக்குமிடையிலான ஒரு நாள் போட்டி ஏற்கனவே கடந்த மாத நடுப்பகுதியில் நிறை வடைந்துள்ள நிலையில் ,நண்பர்களின் போர் நாளை வரை நடைபெறவுள்ளது.

இப்போட்டி இரு மாவட்டத்திற்கும் சிறந்த உறவுப் பாலத்தை ஏற்படுத்தும் ஒரு தொடராக அமைய வேண்டும் என்றும், ஏனைய பெரும் போட்டிகள் போன்று எதிர்வரும் காலத்தில் சிறப்புற இத்தொடர் நடத்தப்படவேண்டும் என்ற நம்பிக்கை தமக்கு இருப்பதாக விளையாட்டு ஆர்வலர்கள் நம்பிக்கை வெளியிட்டுள்ளனர்.

உள்ளூர் கிரிக்கெட் திருவிழா நிறைவடைந்துவிட்டதோ என்ற ஏக்கத்துடன் காத்திருக்கும் உள்ளூர் இரசிகர் களுக்கு தீனிபோடும் வகையில் இப்போட்டியும் அமை யும் வகையில் இரு அணிகளும் தமது அணி களின் வெற்றிக்காகப் போராடும் என எதிர்பார்க்கலாம்.

புதிய தொடராக உருவாகவுள்ள இத்தொடர் மூலம் சிறந்த வீரர்களை இரு பாடசாலைச் சமூகமும் உருவாக்கி மாவட்டத்திற்கும்; மாகாணத்திற்கும் பெருமை சேர்க்க வேண்டும் என வாழ்த்துவோமாக...

(எஸ்.பி.)

## விளையாட்டுச் செய்திகள்

# கிண்ணம் வென்றது எழுவைதீவு பார்த்திமா

(வேலணை)

வேலணை மகேஸ்வரி விளையாட்டுக்கழகத்தினால் நடத்தப்பட்ட தீவக அணிகளுக்கிடையிலான கரப்பந்தாட்டத் தொடரில் எழுவைதீவு பார்த்திமா அணி கிண்ணத்தைக் கைப்பற்றிக் கொண்டது.

வேலணை மகேஸ்வரி சனசமூக நிலையத்தின் ஆண்டு நிறைவை முன்னிட்டு தீவக கரப்பந்தாட அணிகளுக்கிடையிலான கரப்பந்தாட்டத் தொடர் அண்மையில் நடைபெற்றது.

இதில் தீவகத்தைச் சேர்ந்த பல முன்னணி அணிகள் பங்குகொண்டன. இதன் முதலாவது அரை யிறுதிப் போட்டியில் ஊர்காவற்றுறை சென். ஜேம்ஸ் அணியும், எழுவைதீவு பார்த்திமா அணியும் மோதின. ஆரம்பம் முதலே சிறப்பான ஆட்டத்திறனை வெளிப்படுத்திய எழுவைதீவு பார்த்திமா அணி 2-0 என்ற செட் கணக்கில் வெற்றிபெற்று இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது.

தொடர்ந்து நடைபெற்ற இரண்டாவது அரையிறுதிப் போட்டியில் வேலணை மகேஸ்வரி அணியும், வேலணை செட்டிபுலம் ஐயனார் அணியும் மோதின. இதில் உள்ளூர் இரசிகர்களின் முன்னிலையில் அசத்திய வேலணை மகேஸ்வரி அணி 2-0 என்ற செட் கணக்கில் வெற்றிபெற்று இறுதிப் போட்டிக்குத் தகுதிபெற்றது.

இறுதிப் போட்டியில் வேலணை மகேஸ்வரி அணியும், எழுவைதீவு பார்த்திமா அணியும் மோதின. இதில் உள்ளூர் இரசிகர்களின் ஆதரவுடன் கிண்ணத்தை வெல்லும் முனைப்புடன் வேலணை மகேஸ்வரி அணி களமிறங்கிய, அதேவேளை, எந்த இடத்திலும் அசத்துவோம் என்ற நம்பிக்கையுடன் எழுவைதீவு பார்த்திமா அணி களமிறங்கியது. இரசிகர்களின் எதிர்பார்ப்பை ஈடுசெய்யும் வகையில் இரு அணி களும் மோதும் என எதிர்பார்க்கப்பட்டபோதும், வேலணை மகேஸ்வரி அணியால் தாக்குப் பிடிக்க முடியவில்லை. முதல் செட்டில் வீறுகொண்டு அசத்திய எழுவைதீவு பார்த்திமா அணி 25-10 என்ற புள்ளிகள் அடிப்படையில் வென்று முதல் செட்டைக் கைப்பற்றியது. இரண்டாவது செட்டில் எழுச்சி பெறும் என எதிர்பார்ப்பட்ட மகேஸ்வரி அணி அதிலும் கோட்டைவிட்டது. இறுதி யில் எழுவைதீவு பார்த்திமா அணி 25-10, 25-12 என்ற செட் கணக்கில் வெற்றிபெற்று கிண்ணத்தைக் கைப்பற்றிக் கொண்டது.

இப்போட்டி நிகழ்வில் கிராமப் பெரியோர், மகேஸ்வரி விளையாட்டுக்கழகத்தைச் சேர்ந்த நிர்வாகிகள், அதன் ஆதரவாளர்கள், இரசிகர்கள், விளையாட்டு நலன் விரும்பிகள், இரசிகர்கள் எனப் பலர் கலந்து கொண்டு போட்டியைக் கண்டு களித்தமை குறிப்பிடத்தக்கது. (93)

# மணிலாலுக்குத் தடை



சர்வதேச கால்பந்தாட்ட சம்மேளனத்தின் நிறைவேற்றுக் குழு உறுப்பினர் மணிலால் பெர்னாண்டோவிற்கு 8 வருட கால தடை விதிக் கப்பட்டுள்ளது.

கால்பந்தாட்டம் தொடர்பான எவ்வித நடவடிக்கை கள- ிலும் மணிலால் பெர்னாண்டோ எதிர்வரும் 8 வருடங் களுக்கு ஈடுபட முடியாது என சர்வதேச கால்பந்தாட்ட சம்மேளனம் அறிவித்துள்ளது.

2004 ஆம் ஆண்டு சுனாமி காலத்தில் உதைபந்தாட்ட வளர்ச்சி மற்றும் பேர ழிவு நிவாரண நிதியை முறை கேடாக பயன்படுத்தியதாக மணிலால் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

சர்வதேச கால்பந்தாட்ட சம்மேளனத்தின் பல சட்ட திட்டங்களை மீறி மணிலால் செயற்பட்டுள்ளார் என நிரூபிக்கப்பட்டதை அடுத்து அவருக்கு 8 வருட தடை விதிக்கப்பட்டுள்ளது. இதேவேளை ஆசிய கால்பந்தாட்ட சங்கத்தின் தலைவர் முகம்மட் பின் ஹமா முடன் நெருக்கமான தொடர்பு கொண்டவர் என்பதும் குறிப் பிடத்தக்கது. இதேவேளை, தனக்கு எதிராக விதிக்கப்பட்ட தடை எதிர்த்து உரிய சட்ட நவடிக்கை எடுக்கவுள்ளதாக மனிலால் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கத.




கைதடி சரஸ்வதி சனசமூக நிலையத்தின் 57ஆவது ஆண்டு விழாவை முன்னிட்டு நடத்தப்பட்ட இல்ல மெய்வல்லுநர் போட்டியில் பண்டாரவன்னியன் இல்லம் முதலிடத்தைப் பிடித்துக் கொண்டது. அண்மையில் நடைபெற்ற இப்போட்டி நிகழ்வில் வீராங்கனைகளின் அணிவகுப்பையும், முதலிடம் பிடித்துக் கொண்ட பண்டாரவன்னியன் இல்லத்திற்கு யாழ். மாவட்ட மெய்வல்லுநர் சங்கத் தலைவர் ரமணன் கிண்ணம் வழங்குவதையும் காணலாம். (21)



# கணிதம் தோன்றிய காலம்...

நம்முடைய வாழ்வில் எண்களுக்கு இருக்கும் முக்கியத்துவம் அதிசயமானது. அதை விட அதிசயம் நமது மூளை அதனைப் புரிந்து கொண்டு செயல்படுவது.

சைக்கிள் ஓட்டப் பழகுவது போல எண்களை அறிந்து கொள்வதும் புரிந்து கொள்வதும் பழக்கத்தால் வருவது என்றுதான் விஞ்ஞானிகள் காலம் காலமாகக் கருதி வந்திருக்கிறார்கள். மூன்று கோடி வருஷங்களுக்கு முன்பு வாழ்ந்திருந்த நம்முடைய முன்னோருக்கும் கணிதம் பற்றிய அறிவு இருந்திருக்கலாம் என்றும் கூறுகிறார்கள்.

கணிதம் என்பது நமது பிறப்பிலேயே இருக்கிறது எனவும் கருத இடமிருக்கிறது. அமெரிக்காவில் ஜோன்ஸ் ஹொப்கின்ஸ் பல்கலைக்கழக விஞ்ஞானிகள் நடத்திய ஆராய்ச்சியில் குழந்தைகள் பள்ளிக்கூடங்களுக்குச் சென்று கணக்கு பயில்வதற்கு முன்பே கணிதத்தைக் குறித்த உள்ளுணர்வோடு இருப்பதைக் கண்டுபிடித்திருக்கிறார்கள். அது மட்டுமல்ல, மனிதனைத் தவிர, சில வகை குரங்குகளுக்கும் கணக்கு விவகாரங்கள் தெரிந்திருக்கின்றன.



ஆனால் இந்த இயற்கையான கணக்குக்கும் இன்று நாம் பயன்படுத்தும் கணக்குக்கும் நிறைய வித்தியாசம் இருக்கிறது. எண்களுக்கு வடிவங்களையும் குறியீடுகளையும் தந்து பயன்படுத்தும் நவீன கணிதம் என்பது வேறு. கடந்த இரண்டாயிரம் வருஷங்களில் கணிதத் துறையில் பல மாற்றங்கள் நடந்துள்ளன. விஞ்ஞானக் கருத்துகளின் மொழியாக கணிதம் மாறியுள்ளது. விண்ணை முட்டும் கட்டடங்கள், விண்ணில் பாயும் றொக்கெற்கள் இதெல்லாம் அந்த மொழியின் மூலம் கிடைத்தவைதான்.

# நீரே வைத்தியம்!



அதிகாலையில் எழுந்ததும் வெறும் வயிற்றில் தண்ணீர் அருந்துவது ஜப்பானில் உள்ள பழக்கம். தண்ணீரைக் கொண்டு பல்வேறு வியாதிகளைக் குணப்படுத்த முடியும் என்பது விஞ்ஞான முறைப்படி நிரூபிக்கப்பட்ட ஒன்று.

தலைவலி, உடல்வலி, இதயநோய்கள், ஓர்த்ரைட்டிஸ் எனப்படும் மூட்டு வலி சம்பந்தப்பட்ட நோய், வேகமான இதயத்துடிப்பு, வலிப்பு நோய், அளவுக்கு அதிகமான உடல் பருமன், ஆஸ்த்மா, காசநோய், மூளைக்காய்ச்சல், சிறுநீரகம் மற்றும் சிறுநீர் வியாதிகள், வாந்திபேதி, வாய்வுக் கோளாறுகள், மூல வியாதி, நீரிழிவு நோய், சகலவிதமான கண் நோய்கள், கர்ப்பப்பை புற்றுநோய், ஒழுங்கற்ற மாதவி டாய், காது, மூக்கு, தொண்டை கோளாறுகள் போன்றவற்றுக்கு இந்த நீர் மருத்துவம் பயனளிக்கிறது என மருத்துவர்கள் ஆய்வில் கண்டறிந்துள்ளனர்.

**மருத்துவ முறை:**

- காலையில் எழுந்ததும், பல் துலக்கும் முன்பே 4 டம்ளர் (160 மி.லீ) தண்ணீர் அருந்துங்கள்.
- பல் துலக்கி வாய் கொப்பளித்த பின் 45 நிமிஷங்களுக்கு உணவோ, நீரோ எதுவாயினும் உட்கொள்ளக்கூடாது.
- 45 நிமிடங்களுக்குப் பின் வழக்கமான உணவை உட்கொள்ளலாம்.
- காலை உணவிற்கு பின்பு 15 நிமிடங்களுக்கு வேறு எதுவும் சாப்பிடக்கூடாது. மதிய, இரவு உணவிற்கு பின் 2 மணி நேரங்களுக்கு வேறு எதுவும் சாப்பிடக் கூடாது.
- முதியோர் அல்லது நோயாளிகள் அல்லது 4 டம்ளர் தண்ணீரை எடுத்த எடுப்பிலேயே அருந்த முடியாதவர்கள் ஆரம்பத்தில் கொஞ்சம் கொஞ்சமாக நீர் உட்கொண்டு நாளடைவில் 4 டம்ளர் அளவு நீர் அருந்தலாம்.

இம்முறையை பின்பற்றும் நோயாளிகள் தமது நோய்கள் நீங்கி குணமாக முடியும். எந்த நோய்க்கு எத்தனை நாட்கள் இந்த முறையை பின்பற்ற வேண்டும் என்ற விவரங்கள் இதோ:

உயர் இரத்த அழுத்தம் - 30 நாட்கள்
வாய்வுக் கோளாறுகள் - 10 நாட்கள்
நீரிழிவு நோய் - 30 நாட்கள்
மலச்சிக்கல் - 10 நாட்கள்

இந்த வழியில் பின்பற்றினால் இந்நோய்கள் முற்றிலும் குணமாகும் அல்லது கடுமையாக மட்டுப்படும் என ஜப்பானிய மருத்துவர்கள் கண்டறிந்துள்ளனர்.

ஓர்த்ரைட்டிஸ் மூட்டு நோயாளிகள் முதல் வாரம் 3 நாட்களும், இரண்டாவது வாரத்திலிருந்து தினமும் இம்முறையினைப் பின்பற்ற வேண்டும்.

பக்கவிளைவுகள் எதுவுமில்லை. எனினும் நீர் அதிகமாக உட்கொள்வதால் அடிக்கடி சிறுநீர் கழிக்க வேண்டி வரும். ஆனாலும் இந்த முறையை நமது அன்றாட கடமைகளில் ஒன்றாகப் பின்பற்றுவது மிகவும் நன்மை தரும். நீர் அருந் ஆரோக்கியமாகவும் சுறுசுறுப்பாகவும் இருங்கள்.

('பல நாடுகள் பலவித மக்கள்' நூலில்)

# பில்லியனர் கிளப்பில் பொப் பாடகி!




அமெரிக்காவைச் சேர்ந்த, பிரபல பொப் பாடகி மடோனா, சிலிர்க்க வைக்கும் நடனத்தாலும், கிறங்க வைக்கும் குரலாலும், உலகம் முழுவதும் உள்ள இலட்சக்கணக்கான இரசிகர்களை ஈர்த்தவர். தற்போது இவர், ஒரு சாதனையை நிகழ்த்தி உள்ளார்.

அதிகம் சம்பாதித்த, பிரபலங்களின் பில்லியனர் கிளப்பில், மடோனாவின் பெயரும் இடம்பெற்றுள்ளது. பொப் பாடகி ஒருவர், பில்லியனர் கிளப்பில் இடம்பெறுவது, இதுவே முதல் முறை. கடந்தாண்டு, 'எம்.டி.என்.ஏ.' என்ற பெயரில், பல்வேறு நாடுகளில், தன் நடன நிகழ்ச்சிகளை நடத்தினார். இதில், அவருக்கு வருமானம் குவிந்தது. இப்போது, மடோனாவின் சொத்து மதிப்பு 54 ஆயிரம் கோடி ரூபா. இதனால், மிகுந்த உற்சாகத்தில் இருக்கிறார் மடோனா.

# கூகுள் மோதல்!

வார்த்தை மோதல்கள் ஏற்படுவது சகஜமானதுதான். ஆனால் ஒரு வார்த்தை உருவாக்கப்பட்டதை வைத்து ஒரு பெரும் நிறுவனத்துக்கும், ஒரு நாட்டுக்கும் இடையே மோதல் ஏற்படுவது என்பது சற்று வித்தியாசமான நிகழ்வு.

இந்த வகையான மோதலில் சமீபத்தில் ஈடுபட்டது இன்டர்நெட்டில் பிரபல தேடு பொறியான கூகுளும், ஸ்வீடன் நாட்டு மொழி ஆய்வு மையமும்தான்.



ஸ்வீடன் மொழி ஆய்வு மையம் சமீபத்தில் "ஓகூகுள்பார்" (ogooglebar) என்ற புதிய வார்த்தையை ஸ்வீடிஷ் மொழியில் சேர்த்தது. இதன் ஆங்கில மொழிபெயர்ப்பு "அன்குகூளபில்" (ungoogleable) என்பதாகும். அதாவது, இணையதளத்தில் எந்த தேடுபொறியாலும் கண்டுபிடிக்க முடியாதது என்பது இந்த வார்த்தையின் பொருள் என்ற விளக்கம் கூறப்பட்டது.

கூகுளின் பெயரால் ஒரு மொழியில் புதிய வார்த்தை சேர்க்கப்பட்டது என்பது அந்நிறுவனத்துக்கு புகழா அல்லது கூகுள் நிறுவனத்தை கிண்டல் செய்யும் வகையில் இந்த வார்த்தை உள்ளதா என்று இணைய உலகில் பரபரப்பான விவாதம் எழுந்தது.

ஆனால் இதனை தங்கள் நிறுவனத்தை இழிவுபடுத்தும் செயல்தான் என்ற முடிவுக்கு வந்தது கூகுள். ungoogleable என்று கூறுவதன் மூலம் கூகுளால் தேடித்தர முடியாது என்று கூறுவதுதான் வார்த்தையை உருவாக்கியவர்களின் முக்கிய நோக்கம். எங்கள் நிறுவனத்தின் புகழைக் கெடுக்கும் வகையிலான இந்த வார்த்தை உருவாக்கத்தின் பின்னணியில் எங்களது போட்டி நிறுவனங்கள் உள்ளன என்று குற்றம்சாட்டியது கூகுள்.

இந்த வார்த்தையை முறையாகத் திரும்பப் பெறாவிட்டால் சட்டப்படி நடவடிக்கை எதிர்கொள்ள வேண்டியிருக்கும் என்று ஸ்வீடிஷ் மொழி ஆய்வு மையத்துக்கு எச்சரிக்கை விடுத்தது.


ஆனால் "கூகுளபில்" போன்ற வார்த்தைப் பிரயோகங்களை ஏற்றுக் கொள்ளும் நீங்கள் "அன்கூகுளபில்" என்ற வார்த்தையை ஏற்றுக் கொள்ளாதது ஏன் என்று பதில் கேள்வி எழுப்பியது ஸ்வீடன் தரப்பு.

இந்த வார்த்தைப் போரின் இறுதியில், கூகுள் என்ற வார்த்தைக்கு தாங்கள் பெற்றுள்ள காப்புரிமையை கையில் எடுத்து ஸ்வீடனைப் பணியச் செய்தது கூகுள் நிறுவனம்.

இறுதியில், ungoogleable என்ற வார்த்தையை தங்கள் நாட்டு புதிய வார்த்தைகள் பட்டியலில் இருந்து நீக்குவதாக அறிவித்திருக்கிறது ஸ்வீடன் மொழி ஆய்வு மையம்.

# வெள்ளைச் சிங்கம்

முதன் முதலில் தென் ஆபிரிக்கா நாட்டில்தான் வெள்ளைச் சிங்கங்கள் இருப்பது வெளியுலகிற்குத் தெரியவந்தது. அங்குள்ள டிம்பாவதி பகுதியில் வெள்ளைச் சிங்கம் இருப்பதை உறுதிசெய்தனர். ஆனால் உண்மையில் அவை வெள்ளை நிறம்



அல்ல. பிறவிக் கோளாறு காரணமாக இப்படி இவை பிறந்திருக்கலாம் என்று கருதினார்கள். ஆனால் உண்மையில் வெள்ளைச் சிங்கங்கள் இருப்பது 1975 ஆம் ஆண்டு உறுதி செய்யப்பட்டது. இதேபோல் இந்தியாவிலும் வெள்ளைச் சிங்கம் இருப்பது கண்டறியப்பட்டது. அவற்றுக்கு வெள்ளைச் சிங்கம் என்று பொதுவான பெயர் இருந்தாலும்கூட அவற்றின் மீது மெல்லிய சாம்பல் நிறம் இருக்கிறது. இந்த வெள்ளைச் சிங்கங்களைப் பிடித்து வளர்ப்பது சிரமமாக இருந்தது. இதனால் மிருகக் காட்சிசாலையில் இவற்றை வளர்க்க முடியாமல் இருந்தது. ஆனால் கடந்த 5 ஆண்டுகளாக வெள்ளைச் சிங்கங்களை மிருகக் காட்சிசாலையில் இனப்பெருக்கம் செய்வதில் வெற்றி கிடைத்துவிட்டது. அண்மையில் ஜெர்மனியின் நூரம்பெர்க் நகரில் ஒரு பெண் வெள்ளைச் சிங்கம் குட்டியொன்றை ஈன்றெடுத்தது.

# சினிமா சினிமா

◗ "நான்" படத்தில், ... ஆண்டனி ... நடித்ததைத் ... இசையமைப்பாளர் ஜி.வி.பிரகாஷையும், ஹீரோவாக்கும் முயற்சி நடந்தது. ஆனால், கடைசி நேரத்தில் நடிப்பில் ஆர்வமில்லை என்று சொல்லி, தயாரிப்பாளராகி விட்டார். மதயானைக் கூட்டம் என்ற பெயரில், படம் தயாரிக்கும் ஜி.வி. பிரகாஷ், அப்படத்துக்கு தான் இசையமைக்கவும் இல்லை. அந்த வாய்ப்பை, ரகுநந்தனுக்கு கொடுத்திருக்கிறார்.





◗ "ஜே.கே. எனும் நண்பனின் வாழ்க்கை" படத்தின் மூலம் மீண்டும் இயக்கத்துக்கு வந்திருக்கிறார் சேரன். சர்வானந்த், நித்யாமேனன் நடிக்கின்றனர். "தமிழ் திரையுலகில் கிராமத்து கதை இயக்குனர், கமர்ஷியல் இயக்குனர் என்று பிரித்து தரம் பார்க்கிறார்கள். பல வெற்றிப்படங்கள் கொடுத்தும் எனக்கு சில இலட்சங்களில்தான் சம்பளம் பேசப்பட்டது. கமர்ஷியல் வெற்றி கொடுத்தால் அந்த இயக்குனருக்கு கோடியில் சம்பளம் தருகிறார்கள். பிரபல ஹீரோக்களிடம் சென்றால் இவர் "பொற்காலம்", "ஆட்டோகிராப்" போன்ற கதைகளைத்தான் இயக்குவார் என்று கால்ஷீட் தர மறுத்து விடுகிறார்கள். கிராமத்து பாணியிலான படம் மட்டுமில்லாமல் கமர்ஷியல் படங்களையும் என்னால் இயக்க முடியும் என்பதை நிரூபிக்கவே இந்தப் படம்" என தன் வருத்தத்தையும் பதிவு செய்துள்ளார் சேரன்.

◗ "ஏஜென்ட் வினோத்" என்ற ஹிந்திப் படத்தை இயக்கிய ஸ்ரீராம், அடுத்து தான் இயக்கும் படத்தில், ஐஸ்வர்யாராயை நடிக்க வைக்கும் முயற்சிகளில் இறங்கினார். ஆனால், கதையைக் கேட்டு, நடிக்க சம்மதம் சொன்ன ஐஸ்வர்யாராய், அப்படத்தின் ஹீரோவுக்கு வயது 25 என்றதும், மறுத்து விட்டார். "இப்போது எனக்கு 39 வயது. ஒரு குழந்தைக்கும் தாயாகி, உடல் பருமனாகி விட்டேன். இந்த சூழலில், வயது குறைந்த ஹீரோவுடன் நான் நடித்தால், அக்கா - தம்பி போல் தெரியும்..." என்று, மறுப்புக்கு காரணம் கூறியுள்ளார்.

◗ முன்னணி நடிகைகளுக்கு, ஒரு பாட்டுக்கு நடனமாட அதிக சம்பளம் தரப்படுவதால், பலரும் இப்போது அதில் ஆர்வம் காட்டி வருகின்றனர். எதிர்நீச்சல் படத்தில் நயன்தாரா, சிங்கம் - 2 இல் அஞ்சலி, தேசிங்குராஜாவில் பானு, மதகஜராஜாவில் சதா, அகராதியில் கீர்த்தி சாவ்லா என, முன்னணி நடிகைகள், ஒரு பாட்டுக்கு நடனமாடும் படங்களின் பட்டியல், நீண்டு கொண்டே போகிறது.


◗ தனுஷ் தயாரிக்கும் "எதிர்நீச்சல்" படத்தில் சிவகார்த்திகேயனுக்கு ஜோடியாக நடிக்கும் ப்ரியா ஆனந்த், நியூயோர்க்கில் படித்திருந்தாலும் "நான் மயிலாடுதுறையில்" வளர்ந்த தமிழ்ப்பொண்ணு என்கிறார். "இங்கு ஹீரோயினுக்கான கதைகள் எப்போதுமே குறைவுதான். "இங்கிலீஷ் விங்கிலீஷ்" படம் மூலம் ஸ்ரீதேவி மேடத்துக்கு தந்த முக்கியத்துவத்தை தமிழில் யாராவது கொடுக்க முன் வருவார்களா? ஹீரோயினை முன்னிறுத்தி படங்கள் வருவதில்லை. ஹீரோவுடன் நாலு டூயட்டைத் தாண்டி எதுவுமே யோசிக்க முடியவில்லை. முன்னணி இடத்துக்கு கிளாமர்தான் முக்கியம் என்பதை என்னால் ஏற்றுக் கொள்ள முடியாது. ஒரு கேரக்டரில் ஊடுருவி கிளாமர் செய்தால் நன்றாக இருக்கும். "வானம்" படத்தில் அனுஷ்காவின் கிளாமர் கண்களை உறுத்தாமல் இருந்தது இதற்கு உதாரணம்." என்கிறார் ப்ரியா ஆனந்த்.

◗ ஜெயம் ரவி - அமலாபாலை ஜோடி சேர்த்து, நிமிர்ந்து நில் படத்தை இயக்கி வரும் சமுத்திரகனி, அடுத்து தன் நண்பரும், நடிகருமான சசிகுமாரை வைத்து ஒரு படம் இயக்குகிறார். ஏற்கனவே அவரை வைத்து தான் இயக்கிய, நாடோடிகள் போன்று இதுவும் காதல் கதை தான். அதே சமயம், நட்புக்கும் இப்படத்தில் ஒரு புதிய வடிவம் கொடுத்திருப்பதாக கூறுகிறார்.

◗ கவர்ச்சி நடிப்புக்கு முற்றுப்புள்ளி வைக்கிறார் மல்லிகா ஷெராவத். பொலிவுட் கவர்ச்சி நடிகை மல்லிகா ஷெராவத் தமிழில் "தசாவதாரம்", "ஒஸ்தி" போன்ற படங்களில் நடித்திருக்கிறார். ஒஸ்தி "கலா கலா கலகலா"வை யார் மறக்க முடியும்? குத்தாட்டம் என்றாலே "கூப்பிடு மல்லிகாவை" என்றுதான் இருந்தது. திடீரென்று அவர் கவர்ச்சி வேடங்களுக்கு முழுக்கு போட்டுவிட்டதாக அறிவித்திருக்கிறார். "இனி நடிப்பை வெளிப்படுத்தும் வேடங்களில் நடிக்கவே ஆசைப்படுகிறேன். இந்த முடிவை திட்டவட்டமாக எடுத்திருக்கிறேன்" என்று அறிவித்திருக்கிறார் மல்லிகா ஷெராவத்.

# பறக்கும் சொர்க்கம்!

தூரதேசங்களுக்கு விமானத்தில், சாதாரண வகுப்பில், நீண்ட தூரம் பயணிப்போரின் அவஸ்தையை சொல்லவே வேண்டாம். "எப்போது தான், நாம் செல்ல வேண்டிய இடம் வருமோ..." என, விரக்தியின் உச்சத்துக்கே சென்று விடுவர்.






பல இலட்சம் கோடி ரூபா பணத்தை, வங்கிகளில் கொட்டி வைத்திருக்கும், கோடீஸ்வரர்கள், இந்த விஷயத்தில், சற்று மாற்றி யோசிக்கத் தொடங்கினர். சவுதி அரேபியா இளவரசர் அல்-வலீத் பின் தலால், பிரபல ஹொலிவுட் நடிகர் ஜாக்கிசான், அமெரிக்காவில் புகழ் பெற்ற தொழில் அதிபர் டொனால்ட் ட்ரம்ப் ஆகியோர், இவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள்.

இவர்கள், தாங்களின் விமானப்பயணம், இனிதாகவும், சொகுசாகவும் அமைவதற்காக, பல கோடி ரூபாயில், பிரத்தியேகமாக தயாரிக்கப்பட்ட ஜெட் விமானங்களை வாங்கியுள்ளனர். அதிலும், சவுதி இளவரசர் தான், இதுபோன்ற சொகுசு விமானங்களை, அதிக அளவில் வைத்துள்ளார்.

அவரின் விமானத்துக்குள் நுழைந்தாலே, சொர்க்கத்துக்குள் நுழைவது போன்ற உணர்வு ஏற்படும். நேர்த்தியான வேலைப்பாடுகளுடன் கூடிய, பிரமாண்ட வரவேற்பறை, சாப்பாட்டறை, கருத்தரங்குகள், மாநாடுகள் நடப்பதற்கான எழில் கொஞ்சும் அறை என, ஒரு மினி அரண்மனை போல் காட்சியளிக்கிறது. மாநாட்டு அறையில், இளவரசர் அமர்வதற்காக, பிரத்தியேகமாக வடிவமைக்கப்பட்ட சிம்மாசனமும் அதைச்சுற்றி, விருந்தினர்கள் அமர்வதற்கான இருக்கைகளும் உள்ளன.

சவுதி இளவரசர் அளவுக்கு இல்லாவிட்டாலும், அதில் ஓரளவு வசதிகளுடைய, பிரத்தியேகமான சொகுசு விமானத்தை, நடிகர் ஜாக்கி சானும் வைத்துள்ளார். இவரின் விமானத்தில், 14 பேர் பயணிக்கலாம். ஒரு ஐந்து நட்சத்திர ஹோட்டலில் உள்ள, அனைத்து வசதிகளும், இந்த விமானத்தில் உள்ளன. சில நேரங்களில், படப்பிடிப்பு நடக்கும் இடங்களுக்கும், இந்த விமானத்தை எடுத்துச் செல்கிறார், ஜாக்கிசான்.


அமெரிக்காவில் பிரபலமான தொழில் அதிபரும், ட்ரம்ப் என்ற அமைப்பின் தலைவருமான, டொனால்ட் ட்ரம்ப்பும், தனக்கென, பிரத்யேகமாக தயாரிக்கப்பட்ட, ஜெட் விமானத்தை வைத்துள்ளார். இவரின் விமானத்தில், அதி நவீன தொழில் நுட்ப வசதிகளை உடைய, சினிமா தியேட்டர் உள்ளது. ட்ரம்ப், விமானத்தில் செல்லும்போது, இந்த சினிமா தியேட்டரில் தான், பெரும்பாலான நேரத்தை செலவிடுகிறார்.

மாபிள் பதிக்கப்பட்ட குளியல் அறை, முற்றிலும் கண்ணாடிகள் பொருத்தப்பட்ட சமையல் அறை, அனைத்து வசதிகளையும் உள்ளடக்கிய ஓய்வறை என, பறக்கும் சொர்க்கமாக காட்சியளிக்கிறது, இவரது விமானம். தனக்கு நெருக்கமான, தொழில் அதிபர்களுடன், தொழில் குறித்த விஷயங்களை பேச வேண்டியிருந்தால், அவர்களை இந்த விமானத்துக்கு அழைத்து வந்து தான், பேசுகிறார் டொனால்ட். இவர்களை தவிர, இன்னும் சில கோடீஸ்வரர்களும், இதுபோன்ற விமானங்களை வைத்துள்ளதாக பேசப்பட்டாலும், அவர்களை பற்றிய தகவல் ஏதும் வெளியாகவில்லை.

# இரு வேறு வேடிக்கைகள்!

இரு சிறுவர்கள், ஒரு ஏரி ஓரமாகப் போய் கொண்டிருந்தனர். அவர்களில் ஒருவன், பணக்கார வீட்டுப் பிள்ளை. மற்றவன் ஏழைச் சிறுவன். ஏரியோரத்தில், ஒரு சோடி செருப்புகள் இருப்பதை, இருவரும் பார்த்தனர். தூரத்தில், ஒரு விவசாயி, கை, கால் அலம்பிக் கொண்டிருப்பதையும் பார்த்தனர். உடனே, இருவரும் ஒரு வேடிக்கை செய்யத் தீர்மானித்தனர். பணக்காரச் சிறுவன் சொன்னான்... "இந்தச் செருப்பை வீசியெறிந்து விடுவோம். விவசாயி வந்து பார்த்து, அங்குமிங்கும் ஓடித் தேடுவான். மிரள மிரள விழிப்பான். நமக்கு நல்ல வேடிக்கையாக இருக்கும்..." இப்படி சொல்லி, செருப்பைத் தூக்கி எறியப் போனான். ஏழைச் சிறுவன் தடுத்து, "உனக்கு இப்படி ஒரு செருப்பு தொலைந்தால், உடனேயே வேறு செருப்பு வாங்க சக்தியுண்டு. அவனுக்கு இந்த செருப்பு தொலைந்து விட்டால், அவன் ஆயுட்காலம் முழுவதும் வெறும் காலில்தான் நடக்க வேண்டும். இதெல்லாம் வேடிக்கையல்ல. நான் சொல்கிறேன் பார்! முதலில் செருப்பைக் கீழே வை... உன் சட்டைப்பையிலிருந்து ஒரு ரூபா நாணயத்தை எடுத்து அதன் மேலே வை. நாமிருவரும் அந்த மரத்தில் ஒளிந்து கொள்வோம். பார், என்ன வேடிக்கை நடக்கிறதென்று..." என்றான்.

இருவரும் ஒளிந்து கொள்ள, விவசாயி வந்து செருப்பை மாட்டிக் கொள்ளப் போக, அதிலே ஒரு ரூபா இருப்பதைப் பார்த்தான். எப்படி இந்த ரூபா வந்ததென்று திகைத்து, சுற்று முற்றும் பார்த்து, ஒருவரையும் காணாதபடியால்,



ஆண்டவன் தான் கொடுத்தான் என்று பணத்தைக் கண்ணில் ஒத்திக் கொண்டு, கூப்பிய கரங்களுடன், "ஆண்டவனே, ஏழைக்கு இரங்கும் கருணாமூர்த்தி..." என்றான்.

ஏழைச் சிறுவன், பணக்காரச் சிறுவனை ஒரு இடி இடித்து, "பார்த்தாயா? உன்னைக் கருணாமூர்த்தி என்கிறான். நீ செருப்பைத் தூக்கி எறிந்திருந்தால் அவன் என்ன பாடுபட்டிருப்பான். இப்போ பார்... அவனுக்கும் சந்தோஷம் நமக்கும் ஆனந்தம். இப்படித்தான் வேடிக்கை செய்ய வேண்டும்..." என்று சொல்ல சிரித்துக் கொண்டே போயினர்.

(1949இல் என்.எஸ்.கிருஷ்ணன் பேசிய வானொலி உரையில்...)

# தேசிய விருதினை வென்று நிற்கும் கொழும்புத்துறை இந்து மகாவித்தியாலயம்

பாடசாலைகள் படிப்படியாக முன்னேறுவதும் தரமுயர்த்தப்படுவதும், ஆளணி முயற்சிகளில் தங்கி உள்ளது. நகரப்புறப் பாடசாலைகளைத்தேடி மாணவர்கள் ஏன் வரவேண்டும்?... ஏன்கிராமப்புறப்பாடசாலைகள் புறந்தள்ளப்படவேண்டும். என்கின்ற சிந்தனைகள் பல முயற்சிகளிற்கு வித்திடும். தற்போது சராசரியாக மாணவர்களின் தொகையீடுகளுடன் ஒப்பிடும் போது கிராமப்புற பாடசாலைகள் பலதுறைகளில் சாதனைகளைப் படைத்து வருகின்றன. இந்த அடிப்படையில் தேசிய விருதினை வென்று நிற்கும் ஓர் பாடசாலையாக விளங்குவதே கொழும்புத்துறை இந்து மகாவித்தியாலயம். இப்பாடசாலையானது புத்தாக்கச் செயற்பாட்டில் தேசிய மட்டத்தில் இரண்டாம் இடத்தைத் தட்டிச் சென்றுள்ளது. இதில் இருவர் வெற்றியாளர்களாக தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள்.

## கட்டடத் துறைவளர்ச்சி

1933 - 1936 ஆண்டு காலப்பகுதியில் பாடசாலையில் விஸ்தரிப்புப் பணியை மேற்கொண்டனர். கொழும்புத்துறை இந்து மகாவித்தியாலயம் ஊர்ப்பெரியவர்களின் ஆதரவுடன் வளர்ச்சி பெற்று வந்தது.

வீடுகள் தோறும் மாணவர்களை அனுப்பி நவராத்திரிப் பாடல்களை பஜனை செய்து சேகரித்த நிதியுடன், நன்கொடைப் பணத்தைத் திரட்டி புதிய கட்டடங்களை அமைக்கும் பணியில் ஈடுபட்டனர். இதன் பொருட்டு



மாணவர்களின் ஆற்றுகைசெயற்பாடு

1936ஆம் ஆண்டளவில் முன்னர் கட்டப்பட்ட அறையை அழித்து வடக்குச் சுவரோடு இணைந்து இருபக்கமும் இவ்விரண்டாக நான்கு அறைகளோடு கூடிய மண்டபம் நிர்மாணிக்கப்பட்டது. இப்பாடசாலை கொழும்புத்துறை இந்துக் கலவன் பாடசாலையென அழைக்கப்பட்டது. சிரேஷ்ட பாடசாலையாக தரம் உயர்த்தப்பட்டு எஸ்.எஸ்.சி.வரை வகுப்புக்கள் நடைபெற்றன.

1937 இல் ஐ.கந்தையா என்பவர் வடக்குத் தெற்காக ஒரு பாடசாலை மண்டபத்தை ஒப்பந்த அடிப்படையில் நிறுவினார்.

## இணைப்பாடவிதான வளர்ச்சி

கல்விமட்டும் அல்லாது 1937 இல் மாணவர் மன்றங்களை அமைத்து வளர்ச்சிப்பாதையை நோக்கி விரைந்தது. பெற்றோர் தினவிழா, விஜயதசமிப்பூஜை, விநாயகர் ஆலயத்தில் பாடசாலையினால் நடாத்தப்பட்டு வந்த சந்திரகுப்தவிழா என்பன மிக விமரிசையாகக் கொண்டாடப்பட்டன.

மாணவிகளின் தொழில்விருத்தியைக் கருத்திற் கொண்டு தையல், மனையியல் வகுப்புக்கள் ஆரம்பிக்கப்பட்டன.

## தீயிட்டு கொழுத்தப்பட்ட சம்பவம்

இவ்வாறு இப்பாடசாலை வினைத்திறனுடன் வளர்ந்து வரும் போது 1944இல் சில விஷமிகளின் பண்பற்ற செயலால் பாடசாலைக்கு தீ வைக்கப்பட்டது.

அயலவர்களின் உதவியாலும், கடவுளின் அருளாலும் தீ அணைக்கப்பட்டாலும் சுமாரான சேதம் ஏற்பட்டது. ஆயினும் ஆசிரியர்கள் மற்றும முகாமையாளர்கள் வழங்கிய நிதியைக் கொண்டு தீ வைக்கப்பட்ட மண்டபம் புதுப்பொலிவுடன் அமைக்கப்பட்டது. இப்பாடசாலையில் கல்வி கற்கும். மாணவர்களின் சைவசமய அறிவை விருத்தி செய்யும் பொருட்டு சைவப் பெரியார்களினால் சொற்பொழிவு ஆற்றப்பட்டதாக அறியமுடிகிறது. 1947 இல் ஆசிரியர் முகாமைக்கென ஒரு சங்கம் தோற்றுவிக்கப்பட்டது.

அதன் செயலாளராக செயலூக்கமும், திறமையும் வாய்ந்த ஆசிரியர் க.இராசேந்திரமும் தெரிவானார். மாணவர்களின் குடிதண்ணீர்ப்பிரச்சினையை நீக்குவதற்காக நிதிகளை ஆசிரியர்களின் மாதாந்த உறுப்புரிமைப் பணத்தில் பெற்று தண்ணீர்த்தொட்டி அமைத்து நீர் இறைக்கும் இயந்திரமும் கொள்வனவு செய்யப்பட்டது.

## தரமுயர்வும் அரசுடமையாக்கமும்

முகாமையாளர்களினால் நிர்வகிக்கப்பட்டு வந்த இப்பாடசாலை 1963இல் அரச பாடசாலையாக பொறுப்பேற்கப்பட்டது.

01.02.1963 இல் தரமுயர்த்தப்பட்ட கொழும்புத்துறை மகாவித்தியாலயத்தில் அப்பொழுது 693 மாணவர்களும் 23 ஆசிரியர்களும் கடமையாற்றினர். முதலாவது அதிபராக சிபரம்தில்லைராஜா நியமிக்கப்பட்டார். நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த அலபிரட் துரையப்பாவின் முயற்சியினால் கிடைத்த அரச நிதியுடன் பெற்றோரின் பங்களிப்பையும் கொண்டு தெற்கிலும் மேற்கிலும் இருந்த கட்டடங்கள் விஸ்தரிக்கப்பட்டதுடன் விஞ்ஞான ஆய்வு கூடம், ஆசிரியர்அறை, அலுவலகம் என்பன அமைக்கப்பட்டன. இந்து மகாவித்தியாலயம் 140 ஆண்டுகள் கடந்து அறிவு நிறைந்த சமூகத்தை உருவாக்கும் செயலில் பயணிக்கிறது. கோட்ட, மாவட்ட, மாகாண, தேசிய மட்டங்களில் பல சாதனைகளையும் வென்றுள்ளது.

## சாதனைகளும் முன்னேற்றமும்

இந்துப் பாடசாலையாக விளங்குகின்ற போதிலும் இங்கு கல்வி கற்கும் கிறிஸ்தவ மாணவர்களுக்கான சமயக்கல்வியும் புகட்டப்படுவது சிறப்பம்சமாகும். கல்விப் பொதுத்தராதர சா/த, உயர்தரப்பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளையும், இணைப்பாடவிதானங்களிலும் பல சாதனைகளைப் படைத்துள்ளது. கல்விச்சேவை அமைச்சினால் நடாத்தப்பட்ட இலவசப் பாடநூல் விநியோகம் தொடர்பாகவும், தமிழ்மொழிமூலம் அகில



தேசிய விருது பெறல்

இலங்கை செய்யுள் போட்டியில் 1983ஆம் ஆண்டில் க.பாஸ்கரன் முதற்பரிசைப் பெற்று, முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தனாவினால் விருது வழங்கப்பட்டது. சர்வதேச மட்டத்திலான ஆங்கில மொழி செயற்பாட்டுத் தொகுப்புப் போட்டியில் பத்துத் திறமையான பெறுபேறுகளில் இப்பாடசாலையைச்சேர்ந்த இரு ஆங்கில ஆசிரியர்கள் தெரிவு செய்யப்பட்டு சாதனை படைத்துள்ளனர். அவர்களில் திருமதி பி. துஸ்யந்தினி, திருமதி. சுமதி செல்வரத்தினம் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

ஒவ்வொரு வருடமும் நடைபெற்றுவரும் இல்ல மெய்வல்லுநர். போட்டிகளில் அழகூட்டப்பட்ட வகையில் கடந்த சில ஆண்டுகளாக பழைய மாணவர்களால் வீதியோட்டப் போட்டி நடாத்தப்பட்டு வருகிறது. வலைப்பந்து, உதைபந்து போன்ற பல்வேறு விளையாட்டுப்போட்டிகளிலும் கோட்ட, மாவட்ட வெற்றிகளையும் பெற்றுள்ளனர். புத்தாக்கத்துறையில் தொழிநுட்பச் செயற்பாட்டில் அதிசயம் தரும் உற்பத்திகளை காட்சிப்படுத்தி தேசிய விருதுகளை இருவர் பெற்றுக்கொண்டவர் இதனை கல்வி அமைச்சர் பந்துலகுணவர்த்தன வழங்கிக் கௌரவித்தார். செயற்பாட்டுக் கல்வியை மேற்கொள்ள இடவசதி இல்லாமையை கருத்திற் கொண்டு கல்வித்திணைக்களத்தினால் அமைக்கப்பட்ட செயற்பாட்டு கட்டடத்தை 2011ஆம் ஆண்டு பிரதிக் கல்வி அமைச்சர் திறந்து வைத்தார். அதிபர்கள், உப அதிபர்கள் இப்பாடசாலையை பல்வேறு வழிகளில் வளர்ச்சி பெறச் செய்தனர். இன்று சிறந்த அதிபராக ஞானசம்பந்தன் தலைமை யில் ஓர் வன்பந்து கிரிக்கெட் அணி தோற்றம் பெற்று வருகின்றது. பலதுரு வங்களில் காலடி எடுத்துவைத்து வளர்ச் சிப் பாதையில் நகரும் பாடசாலைகளைப் பாராட்ட வேண்டும். ஊக்குவிக்க வேண்டும் என்பதே வாரமொரு பாடசாலையின் நோக்கமாகும்.



மாணவ தலைவர்களுடன் அதிபர், ஆசிரியர்கள்



பாடசாலை ஆசிரியர்களுடன் அதிபர், பிரதி அதிபர்

# அச்சுப்பதித்த தாள்களில் மடித்தே உணவுப்பொருட்கள் விநியோகம்

## - மக்கள் முறைப்பாடு

(திருநெல்வேலி)

குடாநாட்டில் உள்ள பல உணவகங்களில் அச்சுப்பதித்த தாளிலேயே தொடர்ந்தும் உணவுப் பொதிகள் மற்றும் உணவுப் பண்டங்கள சுற்றிக்கொடுக்கப் படுவதாகப் பல பொதுமக்களினால் குறை கூறப்பட்டுள்ளது.

உணவகங்கள் அச்சுப் பதிவு இல்லாதவெள்ளைத் தாள்களையே தமது தேவைகளுக்குப் பயன்படுத்தல் வேண்டும் எனவும், அச்சுப்பதித்த தாள்கள் சுகாதாரத்திறகுப் பங்கம் விளைவிப்பவை என்பதால் அவற்றைப் பாவிக்க வேண்டாம் எனவும் சுகாதாரப் பகுதியினர் வேண்டுகோள் விடுத்திருந்தனர். இவ் வேண்டுகோள் சில உணவகங்களினால் புறக்கணிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

'ஏ' மற்றும் 'பி'தரச்சான்றிதழ்களைப் பெற்றுக் கொண்ட பல உணவகங்கள் அச்சுப் பதித்த தாள்களைக் கை துடைப்பதற்கும், உணவுப்பண்டங்களைச் சுற்றிக்கொடுப்பதற்கும் பாவிப்பதனைக் காணமுடிகின்றது. சில உணவகங்கள் வெள்ளைத் தாள்களைப் பயன்படுத்தினாலும் பல வற்றில் அவை பாவனையில் காணப்படவில்லை.

உணவகங்களின் முன்புறத்தில் 'ஏ' மற்றும் 'பி' தரச்சான்றிதழ்கள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. ஆனால் பின்பக்கம் உள்ள சமையற்பகுதிக்கு எவரும் அனு மதிக்கப்படாமல் அவை பூட்டப்பட்டே உள்ளன. உள்ளே உதவியாளர்கள் வெற்றுடம்புடன், வியர்வை வழிய அழுக்கோடு காணப்படுகின்றார்கள் அடிக்கடி பீடியும் பற்றவைத்து வாய் நிறைய வெற்றிலையுடன் காட்சியளிக்கின்றார்கள். காட்சிப்பெட்டியில் இடுக்கிகள் தென்பட்டாலும் உணவுப்பண்டங்களைப் பணியாளர்கள் கைகளினாலேயே எடுத்துப் பரிமாறுகின்றார்கள். தரச்சான்றிதழ்களைப் பெற்றுக் கொள்வதற்காக சில வாரங்கள் சுகாதார மேம்பாட்டைக் கடைப்பிடித்த பல உணவகங்கள், அவற்றைப் பெற்றுக் கொண்டதும் மீண்டும் சுகாதார சீரழிவுடன் காணப்படுவதைப் பார்க்கமுடிகிறது.

சுகாதாரப் பிரிவினர் அடிக்கடி திடீர் சோதனை நடவடிக்கைகளை மேற்கொள்வதன் மூலமே உணவகங்களில் சுகாதார மேம்பாட்டைக் காணமுடியும் எனப் பொது மக்களினால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (137)

# பாடசாலை மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள்

(கரணவாய்)


ஸ்ரீ நாரதா சுவாமிகளால் பாடசாலை மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு கடந்த திங்கட்கிழமை கரவெட்டி ஸ்ரீ நாரதா வித்தியாலயத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் கரவெட்டி ஸ்ரீ நாரதா வித்தியாலய மாணவர்களுக்கும், புத்தூர் பஞ்சசீல வித்தியாலய மாணவர்களுக்கும் சப்பாத்துக்கள்,தளபாடங்கள், விளையாட்டு உபகரணங்கள், போட்டோக் கொப்பி இயந்திரம்,பானட் வாத்தியக் கருவிகள், மிருதங்கம், கணனி போன்றன வழங்கப்பட்டன.

இதனால் இப்பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்கள் பெரும் நன்மையடைந்துள்ளதாகத் தெரிவிக்கின்றனர்.

இந்நிகழ்வில் 54 ஆவது படையணி பிரிகேடியர், கரவெட்டி பிரதேச செயலர் சிவஸ்ரீ வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சி. நந்தகுமார், நெல்லியடி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி கங்கார உள்ளிட்ட துறைசார்ந்த அதிகாரிகள் மற்றும் பாடசாலை மாணவர்கள், பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

தொடர்ந்து மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம் பெற்றன. (18)



காரைநகர் கருங்காலி போசுட்டி முருகன் ஆலய வருடாந்த தேர்த்திருவிழா அண்மையில் நடைபெற்ற போது, ஆறுமுகப் பெருமான் சித்திரத் தேரில் அமர்ந்து பக்தர்களுக்கு அருள்பாலித்துக் கொண்டிருப்பதைக் காணலாம். (50)

## வெள்ளி நற்சிந்தனை...



# இறைவன் திருநாமம் பாடுவோம்

இறைவனுக்கு எவ்வளவு பெருமை உண்டோ அவ்வளவு பெருமை அவன் பெயருக்கு உண்டு. இறைவன் பெயரைச் சொல்லுவதாலேயே நம்மில் பலருக்கு மன நிறைவு ஏற்படுகிறது. இறைவன் பெயரைச் சொல்லிச் சொல்லிப் பழக்கப்பட்டவர்கள் தங்களை அறியாமலேயே இறைவன் பெயரைச் சொல்கின்றனர்.

"நற்றவா எனை நான் மறக்கினும் சொல்லும்

நா நமச்சிவாயவே " -என்பது சுந்தரர் தேவாரம்.

அநுமன் எப்போதும் இராம நாமத்தை ஜெபம் செய்வதாகக் கூறுவர் "மரா, மரா" என்றே ஜெபம் செய்த வேடன் வான்மீகி மகரிஷி ஆகவில்லையா! ஆக, நாமஜெபம் மிகவும் வலிமை வாய்ந்தது.

உள்ளத் தூய்மையும், வாக்குத் தூய்மையும் நாம ஜெபத்தால் கிட்டும்சிவநெறிச் சீலர்கள் ஐந்தெழுத்தையும், ஆழ்வார்கள் எட்டெழுத்தையும் வலியுறுத்திச் சொல்வதன் காரணம் இது தான்.

ஒரு மந்திரத்தைத் தொடர்ந்து ஜெபம் செய்யும் போது நாம் அந்த மந்திர மயமாகி விடுகிறோம். அந்த மந்திரம் நம்மைச் சுற்றி ஒரு வேலியாகவே அமைகிறது. மந்திரமே இறைவன் திருமேனி.

"பாடுகின்ற பனுவலோர்கள் தேடுகின்ற செல்வமே" என்று தாயுமானவரும், 'பாடீர் அவன் நாமம்' என்று ஆழ்வார்களும் குறிப்பிடுகிறார்கள். நாரதர் பதினொருவிதமான பக்தி மார்க்கங்களின் "இறைவன் பெயரைப் பாடுதல்" அதாவது "கீர்த்தனம்" என்பது ஒன்று. பாட்டு என்பதே இறைவன் புகழைப் பாடுதலைக் குறிப்பதாக கூறுவர். அருணகிரிநாதரும் 'மொழிக்குத்துணை முருகா எனும் நாமங்கள்' என்று பாடுகிறார். எல்லா அடியவர்களும், ஞானியரும் இறைவன் பெயரைச் சொல்லி வழிபடும் முறையைச் சிறப்பித்துள்ளனர்.

இறைவழிபாட்டின் எளிமையான வழி அவன் பெயரைச் சொல்லி, பாடி வழிபடுவதே. இறைவன் திருநாமம், நம்மைஅறியாமலேயே, நமக்குள் சில மாற்றங்களை ஏற்படுத்தும், நம்மிடம் சில அரிய சக்திகள் வந்து சேரும்.

எனவே ஆலய உற்சவ காலங்களில் ஆலயச் சூழலில் வேண்டப்படாத சினிமாப்பாடல்களை ஒலிபரப்புவதை விடுத்து, ஆலயச் சூழலில் இறை நாமத்தை ஒலிக்கச் செய்து பயன் அடைவோமாக!

ஒரு நாமம் ஓர் உருவம் ஒன்றும் இல்லார்க்கு ஆயிரம் திருநாமம் பாடுவோம்.

**சொல்லின் செல்வர்**
**இரா.செல்வவடிவேல்**

# பதிவிறக்கப் பெட்டகம்

ஒரு கவிஞரை அவர் வேலை பார்த்த டி.வி நிலையத்தில் பார்க்கப் போனேன். இலக்கியம், தத்துவம் என காற்றில் மிதந்தபடி பேசிக் கொண்டே வெளியே வந்தோம். அப்போது காரில் ஒரு டி.வி அரசியல் விமர்சகர் வந்தார். அவர் ஒரு அரை வேக்காட்டு ஆசாமி என எங்களுக்குத் தெரியும். ஆனால் அவருக்கு நிறைய தொடர்புகள் இருந்தன. கவிஞருக்கு, தன் மகனுக்கு பள்ளிக் கூட சீட் வாங்க அவரது சிபாரிசு வேண்டி இருந்தது. அதனால் அவரிடம் ஓடிப் போய் கூனிக குறுகி கெஞ்சினார். இந்த அவலக் காட்சியைப் பார்த்து மௌனமாக நின்றிருந்தேன். இன்னொருமுறை கவிஞர் என்.டி ராஜ்குமார் தபால் துறையில் கூலி வேலை செய்து கொண்டிருந்த போது என் கண் முன்னாடி மூட்டைகளை சுமந்து கொண்டு போவதை பார்த்தேன். அந்த காட்சியை இப்போது நினைத்தாலும் எனக்கு கண்ணீர் வரும். இப்படியான எழுத்தாளர்களுக்கு புகழினால் என்ன பிரயோஜனம் சொல்லுங்கள்? இங்கு பணம் சம்பாதிக்கும் முன் வரை, சமூக அந்தஸ்தை அடையும் வரை ஒரு சின்ன புகழ் கூட எழுத்தாளனுக்கு முடகிரீடம தான். ஏன் இப்படியான சமூகத்தில் என்னைப் பிறப்பித்தாய் எனக் கடவுளைக் கேட்க மட்டுமே அவனால் முடியும். **– அபிலாஷ் சந்திரன்**

கண்ணதாசனின் தனிப்பாடல்கள் பற்றிப் பேசிய சகோதரர் 'மரபின் மைந்தன்' முத்தையா எந்தவிதக் குறிப்புமில்லாமல் அருமையாகப் பேசினார். கவிஞர் வைரமுத்து சொன்னாராம். 'என்னிடம் இருக்கும் அத்தனை புத்தகங்களும் அழிந்து போனாலும் எனக்குக் கவலையில்லை. என்னுடன் முத்தையா இருக்கிறார்' என்று. பொதுவாக வைரமுத்து அவர்களின் புகழ்ச்சியில் அதீதம் இருக்கும் என்பது எல்லோருக்கும் [அவருக்குமே] தெரிந்த ஒன்று. ஆனால் 'மரபின் மைந்தன்' விஷயத்தில் அது முற்றிலும் உண்மை. நண்பர் ஜெயமோகனின் 'கொற்றவை' வெளிவந்த வெகுசில நாட்களிலேயே அதைப் படித்து, ஜெயமோகனிடமே அதைப் பற்றி விவாதித்து அதிர்ச்சிக்குள்ளாக்கினவர், அவர். ஆக, கொற்றவை வாசகர் ஒருவரை எனக்குத் தெரியும். [நான் இப்படியெல்லாம் பேசுவதாலேயே கொற்றவை புத்தகத்தை 'நண்பன்'[?] என்று எழுதி, எனக்குப் பரிசளித்தார், நண்பர் ஜெயமோகன்]. **– சுகா**

ஒருத்தன் திருந்தி வாழ வாய்ப்புத் தரக் கூடாதா? "நேற்று நீ அடிதடிக் கேஸில் உள்ளே போனவன் ஆயிற்றே?" என்று கேட்கலாமா? வல்லிக் கண்ணன், தி.க.சி. இந்த இருவருககும் பிறகு அவர்களுடைய ரோலை எடுத்துக் கொள்ளலாமா என்று யோசித்துக் கொண்டிருக்கிறேன் நான். நேற்றுக் கூட பாருங்கள், ஒரு போஸ்ட் கார்ட் வாங்கி "கோடை பத்திரிகையில் வந்திருந்த உங்கள் சிறுகதை தமிழின் மிகச் சிறந்த கதைகளில் ஒன்று" என்று அந்த எழுத்தாளருக்கும், அந்தப் பத்திரிகைக்கும் எழுதிப் போட்டேன். அந்த அளவுக்கு நல்லவனாகி விட்டேன் முத்து. முந்தநாள் அடிதடியை எனக்கு ஞாபகப் படுத்தாதீர்கள். பாட்ஷா படம் பார்த்திருப்பீர்கள். அதில் ரஜினி தன் பழைய வாழ்க்கையை மறந்து விட்டு, ஆட்டோ டிரைவராக வாழ்வார் அல்லவா? அப்படி வாழ்ந்து கொண்டிருக்கிறேன் நான். **– சாரு நிவேதிதா**

விரும்பிப் படிக்கும் எழுத்தாளர்கள் எல்லாம், என்னுடைய சிருஷ்டிகரத்துக்குக் காரணமாக இருந்தார்கள் என்று சொல்ல முடியாது. அது வேறு. இது வேறு. ஞானத்தை உருவாக்க ஆழமான சம்பாஷனை, ஆழமான விஷயங்கள் மட்டும் காரணமாக இருக்கின்றன என்று சொல்ல முடியாது. புத்தர் வயதான ஒருவரைப் பார்க்கிறார். அது அவருக்குப் பெரிய சிக்கலாக உள்ளது. நமக்குச் சாதாரண விஷயங்களாகத் தெரிபவை பெரிய ஆளுமைகளுக்குப் பிரச்சினையாக இருக்கும். பிரமள் சொல்வார், சாது அப்பாதுரை சொன்னதாக. குருவிகள் செல்லும் பாதையையும், ஞானிகள் ஞானத்தை அடைந்த பாதையையும் வரைந்து காட்ட முடியாது என்று. வண்ணத்துப்பூச்சி செல்லும் பாதையை வரைந்துவிட முடியுமா?

– சுரேஷ்குமார இந்திரஜித்

# பாலைதீவு, இரணைதீவுப்பகுதிகளில் கடற்றொழில் செய்வதற்கு அனுமதி

(கொழும்பு)

முப்பத்தைந்து வருடகால இடைவெளியின் பின்னர் மீண்டும் பாலைதீவு இரணைதீவுப் பகுதிகளில் மீன் பிடிப்பதற்கான அனுமதியை கடற்படையினர் மீனவர்களுக்கு வழங்கியுள்ளனர்.

பொன்னாலை கடற்படை முகாமில் கடந்த திங்கட்கிழமை பிற்பகல் கடற்படைகளின் வடமாகாண கட்டளை அதிகாரி ரியல் அட்மிரல் உடவத்த, உதவிக் கட்டளை அதிகாரி கொமாண்டர் ஜீ.டி.எஸ்.விமலதுங்க, கப்டன் அபேரத்ன உட்பட யாழ். மாவட்ட கடற்படை முகாம்களின் கட்டளை அதிகாரிகள், ஏனைய அதிகாரிகளுக்கும் யாழ்.மாவட்ட கடற்றொழிலாளர் சமாசங்களின் பிரதிநிதிகளும் இடையில் கலந்துரையாடலொன்று இடம்பெற்றது.



இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்ட கடற்றொழிலாளர் சங்கங்களின் பிரதிநிதிகளினால், பாலைதீவு, கற்கட தீவு மற்றும் இரணைதீவு ஆகிய பகுதிகளில் தொழில் செய்வதற்கு தம்மை அனுமதிக்க வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்தனர்.

இதனை உடனடியாக கருத்திற்கொண்டு ஆய்வுசெய்த கடற்படை அதிகாரிகள், பாலைதீவு மற்றும் இரணைதீவுப் பகுதிகளில் தொழில் செய்வதற்கு உடனடியாக அனுமதிப்பதாகவும் குறிப்பிட்ட தீவுகள் இரண்டிலும் தங்கி நின்று தொழில் புரிபவர்கள் கடற்றொழில் திணைக்களத்தின் அடையாள அட்டையுடன் கடற்றொழில் திணைக்கள அதிகாரியின் உறுதிப்படுத்தலையும் பெற்றுக் கொண்டு வந்து தொழில் செய்ய அனுமதிக்கப்படுவர் என்று குறிப்பிட்டனர்.

இவ்வாறு பாலைதீவு மற்றும் இரணைதீவுப் பகுதிகளில் தங்கி நின்று தொழில் செய்பவர்கள் தமது தங்கும் இடங்களை கடற்படையினரின் முகாமகளுக்கு அண்மையாக அமைப்பார்களாக இருந்தால் கடற்றொழிலாளர்களுக்கு வேண்டிய உதவிகளையும் கடற்படையினர் செய்யக் கூடியதாக இருக்கும் எனவும் தெரிவித்தனர். இதேவேளை, தென்னிலங்கையில் இருந்து வந்து சிலிண்டர்களுடன் கடலட்டை பிடிப்பவர்களினால் வடமாகாண கடற்றொழிலாளர்கள் கடுமையாக பாதிப்படைவதாகவும் இதனைக் கட்டுப்படுத்த நடவடிக்கைகளை கடற்படையினர் மேற்கொள்ள வேண்டும் எனவும் யாழ். மாவட்ட கடற்றொழிலாளர்களின் பிரதிநிதிகளால் இதன்போது கோரிக்கை விடுக்கப்பட்டது. யாழ்ப்பாணம், மன்னார் கடல் பகுதிகளில் இந்நடவடிக்கைகள் அதிகமாக மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அதனால் கடலட்டையின் பெருக்கம் பெருமளவில் பாதிப்படைந்து வருவதாகவும் அவர்கள் சுட்டிக்காட்டினர்.

இந்தக் கோரிக்கை தொடர்பில் கருத்து தெரிவித்த கடற்படை அதிகாரிகள், கடலட்டை பிடிப்பதனை தடை செய்வதற்கான அதிகாரம் தமக்கு கிடையாது எனவும் இதனை மீன்பிடித் திணைக்கள அலுவலர்கள் மூலம் கடற்றொழில் அமைச்சுடன் தொடர்பு கொண்டு முறைப்பாடு செய்ய வேண்டும் என்றும் குறிப்பிட்டனர்.

கடற் றொழில் அமைச்சில் இருந்து உரிய அனுமதியை பெற்று தென்னிலங்கையில் இருந்து வரும் கடற்றொழிலாளர்கள் தொழில் செய்வதை தடை செய்ய முடியாது எனவும் கடற் படை அதிகாரிகள் இதன் போது குறிப்பிட்டனர்.

# மின் கட்டண அதிகரிப்பு; எதிர்த்து போராட்டம்

## ஜே.வி.பி. அறிவிப்பு

(கொழும்பு)

மின்சாரக் கட்டணம் குறைக்கப்படாவிட்டால் பாரிய போராட்டம் வெடிக்கும் என ஜே.வி.பி. எச்சரிக்கை விடுத்துள்ளது. அண்மையில் அறிவிக்கப்பட்ட மின்சாரக் கட்டண உயர்வு முற்றுமுழுதாக வாபஸ் பெற்றுக்கொள்ளப்பட வேண்டும் என ஜே.வி.பி. முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் கே.டி. லால்காந்த தெரிவித்துள்ளார். சகல அரசாங்க நிறுவனங்களையும் இணைத்துக் கொண்டு எதிர்வரும் 21ஆம் திகதி பாரியளவில் போராட்டமொன்றை நடாத்தத் திட்டமிட்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

புதிய மின்சாரக் கட்டண உயர்வினை முற்றுமுழுதாகக் குறைப்பதற்கு 20ஆம் திகதி வரையில் கால அவகாசம் வழங்குவதாகத் தெரிவித்துள்ளார். பெருந்தோட்டத் தொழிலாளர்கள் உள்ளிட்ட நாட்டின் சகல துறைகளையும் சேர்ந்த தொழிலாளர்களை இணைத்து நாடுதழுவிய ரீதியில் பாரிய போராட்டமொன்றை நடாத்தத் திட்டமிட்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

# இலங்கைக்குள் வரமுயன்ற ஐவர் கடற்படையால் கைது



சட்டவிரோதமான முறையில் நாட்டுக்குள் பிரவேசித்த ஐந்து பேரை கடற்படையினர் கைது செய்துள்ளனர். சட்டவிரோதமான முறையில் கடல் வழியாக குறித்த ஐந்து பேரும் நாட்டுக்குள் பிரவேசித்துள்ளதாக கடற்படையினர் தெரிவித்துள்ளனர்.

உருமலை கடற்பிரதேசத்தில் வைத்து சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். சென்னையைச் சேர்ந்தவர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர். கைது செய்யப்பட்டவர்களில் இரண்டு ஆண்களும், இரண்டு பெண்களும் ஒரு சிறுமியும் அடங்குவதாகத் தெரிவிக்கப்படுகிறது.சந்தேக நபர்கள் பயங்கரவாத தடுப்புப் பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

# பௌத்த - தலிபான்வாதம் உருவாகக் கூடிய அபாயம்

## எச்சரிக்கும் காலி பேராயர்

(காலி)

நாட்டில் பௌத்த - தலிபான்வாதம் உருவாகக் கூடிய அபாயம் ஏற்பட்டுள்ளதாக காலி பேராயர் ரேய்மன்ட் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார். பொதுபலசேனா அமைப்பு போன்ற சிங்கள பௌத்த அமைப்புக்களினால் சிறுபான்மை மக்கள் மீது அச் சுறுத்தல்கள் விடுக்கப்பட்டு வருவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

யுத்தம் நிறைவடைந்து சில ஆண்டுகள் கடந்துள்ள நிலையில் வேறும் வகையிலான வன்முறைகள் சமூகத்தில் உருவாகக் கூடிய ஆபத்து ஏற்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார். பேச்சுவார்த்தைகளின் மூலம் இனங்களுக்கிடையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென அவர் குறிப் பிட்டுள்ளார்.

பெருமளவிலான பௌத்த அமைப்புக்கள் இனவாதத்தையோ குரோத உணர்வுகளையோ தூண்டுவதில்லை என அவர் சுட்டிக் காட்டியுள்ளார். ஒருசில அமைப்புக்கள் இனவாத அடிப்படையில் செயற்பட்டு வருவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

# தொழில் நீதிமன்றம் அமைக்க சாதகமான பதில் இல்லை

(கொழும்பு)

வடமாகாணத்தில் தொழில் பிணக்குகள் அதிகமாக இருப்பதனால் வடமாகாணத்திற்கு என தொழில் நீதிமன்றம் அமைப்பதற்கு நீதியமைச்சிடம் கோரிக்கை விடுக்கப்பட்டதற்கான பதில் இதுவரையில் கிடைக்கவில்லை என வடமாகாண பிரதி தொழில ஆணையாளர் க.கனகேஸ்வரன் தெரிவித்தார்.

வடமாகாணத்தில் நாளாந்தம் தொழில் பிணக்குகள் அதிகரித்து வருகின்றன. அதனடிப்படையில், வடமாகாணத்திற்கு என யாழில் தொழில் நீதிமன்றம் அமைப்பது அவசியமென்றும், அதற்கான கோரிக்கை அடங்கிய கடிதம், கடந்த வருடம் தொழில் திணைக்களத்தினால், நீதியமைச்சருக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

அதற்கான பதில் இதுவரையில், கிடைக்கவில்லை என்றும், வடமாகாண ஆலோசனை சபை ஊடாக நீதியமைச்சருக்கு இரண்டாவது கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

அத்துடன், வடமாகாணத்தில் மாதாந்தம் 20இற்கும் மேற்பட்ட தொழில் பிணக்குகள் தொழில் திணைக்களத்தில் முறையிடப் படுவதாகவும், அந்தவகையில், கடந்த மார்ச் மாதம் 13 தொழில் பிணக்குகள் தொழில் திணைக்களத்தில் முறையிடப்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

இவ்வாறான தொழில் பிணக்குகளைத் தீர்ப்பதற்கு மாவட்ட நீதிமன்றங்களில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டு, தீர்த்து வைக்கப்படுவதாகவும், இதுவரையில் 5 தொழில் பிணக்குகள் தீர்த்து வைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். அந்த வகையில், வடமாகாணத்திற்கென தொழில் நீதி மன்றம் அமைப்பது மிகவும் அவசியமென்றும், அதற்கான அவசியத்தினை கடித மூலம் நீதியமைச்சருக்கு தெரியப்படுத்தியுள்ளதாகவும் அவர் மேலும் கூறினார். (25)



சென்.ஜோன்ஸ் கல்லூரியின் 190ஆவது ஆண்டு நிறைவையொட்டி முத்திரைக் கண்காட்சி ஒன்று நேற்று ஆரம்பமானது இக்கண்காட்சி மூன்று தினங்கள் இடம் பெறவுள்ளது. இக்கண்காட்சியின் ஆரம்ப நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட அஞ்சல் மா அதிபர் எஸ்.அபயரட்ண நாடாவை வெட்டி கண்காட்சியை ஆரம்பித்து வைப்பதையும், மாணவர்களினால் சேகரிக்கப்பட்டு காட்சிப்படுத்தப்பட்ட முத்திரைகளை பிரதம விருந்தினர், மற்றும் கல்லூரி அதிபர் ஆகியோர் பார்வையிடுவதையும், கண்காட்சியில் கலந்து கொண்டு முத்திரைகளை பார்வையிடும் மாணவர்களையும் காணலாம். (படங்கள். ஆர். இராஜகுமார்)

32) 1833 இல் இடம்பெற்ற வரலாற்று நிகழ்வு
1) டொனமூர் யாப்பு 2) 2 ஆவது சுந்திரப்புரட்சி
3) கோல்புறுக் யாப்பு 4) சோல்பரி யாப்பு

33) அனைவருக்கும் நிலம், அனைவருக்கும் சமாதானம் என்ற சுலோகத்தை முன்வைத்து மக்கள் போராட்டம் வெடித்த நாடு.
1) ரஷ்யா 2) ஜேர்மன்
3) பிரான்ஸ் 4) இத்தாலி

34) கொழும்புக் கோட்டையை நிர்மாணித்தவன்
1) நிஷங்க அழகேசன் 2) 4 ஆம் பராக்கிரமபாகு
3) 6 ஆம் பராக்கிரமபாகு 4) சப்புமல் குமாரன்

35) நன்நம்பிக்கை முனையைக் கண்டுபிடித்தவர்
1) வஸ்கொடகாமா 2) கொலம்பஸ்
3) பார்த்தலோமியோ டயர் 4) மகலன்

36) இரட்டை ஆட்சிமுறை இலங்கையில் நடைபெற்ற காலப்பகுதி
1) 1797 - 1798 2) 1802 - 1815
3) 1798 - 1802 4) 1815 - 1820

37) 1848 சுதந்திரப் போராட்டம் நடைபெற்றமைக்கான காரணம்
1) ஊவா வெல்லஸ்ஸ 2) கண்டி பிரதான வருமானத்தை இழந்தமை
3) டொரிங்கனின் புதிய வரிகள் 4) மன்னனின் மீது மக்கள் விரும்பாமை

38) உலகின் முதல் பெண் பிரதமர் யார்?
1) சந்திரிக்கா குமாரதுங்கா 2) ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க
3) லீலாவதி 4) கோமாவதி

39) சோல்பரி யாப்பின் பிரதிநிதிகள் சபையின் எத்தனை பேர் தேர்தல் மூலம் தெரிவுசெய்யப்பட்டனர்.
1) 30 2) 15
3) 06 4) 95

40) இலங்கையிலுள்ள 21 வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும் வாக்குரிமை வழங்கிய யாப்பு
1) சோல்பரி யாப்பு 2) மக்கலம் யாப்பு
3) மானிங் யாப்பு 4) டொனமூர் யாப்பு



# கிளி/ எடிசன் கல்லூரியும் -தினமுரசு பத்திரிகையும் இணைந்து நடாத்தும் வருடமொரு கல்விச் செயலமர்வு -2013



## வரலாறு

தரம் - 10 நேரம்: 2 மணி

01) சரியான விடையின் கீழ் கோடிடுக.

1) வரலாற்றைக் கற்க முன் வரலாற்று ஆசிரியரை இனம் காணவேண்டும் எனக் கூறினார்.
1) ப.ா.கார் 2) போர்க்கார்ட் 3) ஸ்டுவர் பிகொட் 4) ஹெரடோரஸ்

2) இலங்கையின் வரலாற்றைக் குறிப்பிடும் வெளிநாட்டு இலக்கிய மூலாதாரங்களை இந்திக்கோ, டியுமண்டோ, தேசக்குறிப்பு டெமோ கிராபியா கிறிஸ்டியனா என்பவற்றை முறையே எழுதியவர்களைச் சரியாக காட்டும் விடைத்தொகுதி
1) மார்க்கோபோலோ, பாகியன், கொஸ்மஸ், மெகஸ்ரனிஸ்
2) மெகதனிஸ், அரிஸ்ரோட்டில், பாகியன், மொஸ்மஸ்
3) மார்க்கோபோலா, பாகியன், கொஸ்மஸ், மெகதனிஸ்
4) மெகதனிஸ், அரிஸ்ரோட்டில், கொஸ்மஸ், பாகியன்

3) வசபனின் ஆட்சி யாழ்ப்பாணக் குடாவரை காணப்பட்டமைக்குச் சான்றாக அமைவது
1) வல்லிபுர சாசனம் 2) மகிந்தலை கல்வெட்டு
3) பனாகடுவ செப்புசாசனம் 4) தெவன கல கல்வெட்டு

4) 16 குடியேற்றங்களில் பாரியது, ரஜகக நகரம் காணப்பட்டது ஆரம்ப ஆட்சியின் பிம்பிசாரன்
1) அவற்றி 2) மகதம்
3) கோசலம் 4) வத்சய

5) குப்த கால கலைப்படைப்பிற்குச் சிறந்த எடுத்துக்காட்டாக அமைவது
1) சாரணர் 2) எல்லோரா
3) சாந்திதூபி 4) அசோக தூண்

6) உடல் எடைக்கு சமமான துலாபாரம் எனும் தான முறையை அறிமுகம் செய்தவர்
1) நிசங்கமல்லன் 2) வசபன்
3) துட்டகைமுனு 4) மகாசேனன்

7) திரிபீடகம் நூல் வடிவமாக தொகுத்த ஆட்சியாளர்
1) வலகம்பா 2) காசியப்பன்
3) மூத்தசீவன் 4) தாதுசேனன்

8) சோழர்களால் அமைக்கப்பட்ட ராஜராஜப் பெரும்பள்ளி அழைக்கப்படுவது.
1) வெல்கம்விகாரை 2) ஜெனநாதமங்களம்
3) திரியாய் விகாரை 4) எம்பக்கே

9) இலம்பகர்ண வம்சத்தின் முதல் ஆட்சியாளர்கள்
1) முகலன் 2) நிஸங்கமல்லன்
3) வசபன் 4) தாதுசேனன்

10) புத்தசாசன, தர்மசாசன சங்கசரண நூலை எழுதியவர்
1) குமரதாச 2) குருலுசாமி
3) மகாநாம 4) வித்தியாசக்கரவர்த்தி

11) நிலத்தின் சாய்வை அடிப்படையாகக் கொண்டு அமைக்கப்பட்ட கால்வாய்
1) எலகரகால்வாய் 2) மினிப்பே
3) மோதகாய்வாய் 4) பபபதன்ன

12) யாப்பாகுவா, கோவிந்தலை, தம்பதெனியா, மினிப்பே போன்றவற்றை ஆட்சி செய்தவர்கள் முறையே காட்டும் விடைத்தொகுதி.
1) சுபேசேனாதிபதி, சங்கசேனாதிபதி, புவனேகபாகு, விஜயபாகு
2) சுபசேனாதிபதி, புவனேகபாகு, விஜயபாகு, சங்கசேனாதிபதி
3) புவனேகபாகு, சுபசேனாதிபதி, விஜயபாகு, சங்கசேனாதிபதி
4) சுபசேனாதிபதி, சங்கசேனாதிபதி, விஜயபாகு, புவனேகபாகு

13) பின்வருவனவற்றை இணைத்தல் சரியாக காட்டும் விடைத்தொகுதி
1) ஸ்ஹேகொன் A) ஜாவாதீவு
2) தாஸ்மகால் B) தீகதி
3) போரோ புதூர் விகாரை C) சாஜகான்
4) அவாஹன் ஆட்சியாளர் D) மியான்மார்

1) DCAB 2) DCBA 3) DABC 4) DACB

14) அப்கானிஸ்தானில் காணப்படும் பிரசித்திபெற்ற புத்தர் சிலை
1) சாரணாத்த சிலை 2) வேதமாதாசிலை
3) பாமியன் 4) சுகோதய சிலை

15) குதுப்மினார் கோயிலைக் கட்டியவன்
1) முகமது பின்துக்னர் 2) குதுபுதீன் அய்பெக்
3) கஜனி முகமது 4) பாபர்

16) அசோக மன்னன் காலத்தில் தேரவாத பௌத்தம் நிலவும் பொற்பூமி என அழைக்கப்பட்டது
1) பர்மா 2) கம்போடியா
3) இலங்கை 4) சீயம்

17) கொன்ஸ்தாந்திநோபிளுக்கு துருக்கியர் வழங்கிய பெயர்
1) அலெக்சாந்திரியார் 2) வெனிஸ்
3) மிலான் 4) கிஸ்தான்புல்

18) மறுமலர்ச்சிக் காலத்தில் காணப்பட்ட நூலாசிரியர்கள் கொண்ட தொகுதி
1) றபியேல், மைக்கல், ஆங்சலோ, வில்லியம் நேர்வே
2) மொசாக்கியோ, மாக்கியவல்லி, ரபேஸ்
3) தாந்தே, பெட்ராக், நிக்கலோ, மாக்கியவல்லி
4) மெடிசி, தாந்தே, பெட்ராக்

19) பீட்டர் சிலை மெடியசின் உருவத்தை செதுக்கிய சிற்பக் கலைஞர்
1) மைக்கல் ஆஞ்சலோ 2) லியானாடோ டாவின்சி
3) டொனடெலோ 4) பிரான்ஸிஸ் பேக்கன்



20) புரட்டஸ்தாந்து இயக்கத்தின் முன்னோடி
1) மாட்டின் லூதர் 2) ஸ்விங்கிரி
3) ஜோன் கல்வின் 4) இனசன்ற்

21) மத்திய காலத்தில் இத்தாலியில் காணப்பட்ட பல்கலைக் கழகங்களைக் கொண்ட தொகுதி
1) வெனிஸ், பாதுவா 2) பொலந்நா, பாதுவா
3) பாதுவா பரிஸ் 4) ஒக்ஸ்போட், பரீஸ்

22) மானிடவியலின் தந்தை என அழைக்கப்படுபவர்
1) தாந்தே 2) பொக்காசியோ
3) தோமஸ்மூர் 4) பெட்ரக்

23) நாடுகாண் பயணங்களினால் ஏற்பட்ட முக்கிய விளைவு
1) குடியேற்றவாதம் 2) தன்னிறைவு பொருளாதாரம்
3) சமத்துவம் 4) மறுமலர்ச்சி

24) இலங்கை வரலாற்றில் முதல் கத்தோலிக்க மன்னன்.
கோட்டை இராச்சியத்தை நன்கொடை உறுதிமூலம் போர்த்துக்கேயருக்கு வழங்கியவர்
மல்வானை உடன்படிக்கைக்குக் காரணமானவன் மேல்வரும் கூற்றுக்களுடன் தொடர்புடையவன்
1) தர்மபாலன் 2) புவனேகபாகு
3) இறைகமபண்டார 4) வீரிய பண்டார

25) இலங்கைக்கு முதலில் வருகை தந்த போர்த்துக்கேயர்
1) லோரன்ஸோ டி அல்மேடா 2) அல்பேன் டிகூசா
3) அஸவேது 4) டிபிரகன்ஸா

26) போர்த்துக்கேயர் கீழைத்தேயத்தில் தோல்வியைத் தழுவிய முதல் இடம்
1) பலன 2) தந்துரே
3) கணனொருவ 4) முல்லேரியா

27) நல்லூர் உடன்படிக்கை மூலம் போர்த்துக்கேயரின் பிரதிநிதியாக யாழ்ப்பாணத்திற்கு நியமிக்கப்பட்டவன்
1) சங்கிலியன் 2) காசினைனார்
3) எதிர்மன்னசிங்கன் 4) பிலிப் ஒலிவரோ

28) உலகின் கைத்தொழில் புரட்சி தோற்றம் பெற்ற இடம்
1) பிரான்ஸ் 2) இங்கிலாந்து
3) எதிர்மன்னசிங்கன் 4) பிலிப் ஒலிவரோ

29) இலங்கையின் கைத்தொழில் புரட்சி தோற்றம் பெற்றஇடம்
1) VOC 2) OVC
3) BOC 4) பத்தேவியா

30) தேசங்களின் செல்வன் எனும் நூலை எழுதியவர்
1) அடம்ஸ்மித் 2) தாந்தே
3) ஜோன்கோ 4) தோமஸ்மூர்

31) மனித உரிமைகளை வென்றெடுக்கும் பொருட்டு மேற்கொள்ளப்பட்ட புரட்சி
1) ஆங்கிலப்புரட்சி 2) ரஷ்யப்புரட்சி
3) பிரான்ஸ்புரட்சி 4) சீனப்புரட்சி

# இறுதிக்குத் தகுதி



(மட்ரிட்)

சம்பியன்ஸ் லீக் கால்பந்துத் தொடரின் இறுதிப் போட்டிக்கு போரஷயா டார்ட்மண்ட் அணி தகுதி பெற்றது.

ஜேர்மனியில் உள்ள டார்ட்மண்ட் நகரில் நடந்த சம்பியன்ஸ் லீக் கால்பந்துத் தொடரின் அரையிறுதிக்கான முதல் சுற்றுப் போட்டியில் போரஷயா டார்ட்மண்ட் அணி 4-1 என ரியல் மட்ரிட்டை வீழ்த்தியது.

ஸ்பெயினில் உள்ள மட்ரிட்டில் நடந்த அரையிறுதிக்கான இரண்டாவது சுற்றுப் போட்டியில் போரஷயா டார்ட்மண்ட், ரியல் மட்ரிட் அணிகள் மீண்டும் மோதின. போட்டியின் முதற் பாதியில் இரு அணி வீரர்களும் கோல் ஏதும் அடிக்கவில்லை. பின் இரண்டாவது பாதியில் எழுச்சிகண்ட ரியல் மாட்ரிட் அணிக்கு கரீம் பென்ஜீமா (82ஆவது நிமிடம்), செர்ஜீயோ ராமோஸ் (88ஆவது நிமிடம்) ஆகியோர் தலா ஒரு கோல் அடித்தனர். இதற்கு டார்ட்மண்ட் அணி வீரர்களால் பதிலடி கொடுக்க முடியவில்லை. முடிவில், ரியல் மாட்ரிட் அணி 2-0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

முதலிரண்டு போட்டியில் அடித்த கோல்களின் அடிப்படையில் டார்ட்மண்ட் அணி 4-3 என்ற கோல் கணக்கில் இறுதிப் போட்டிக்கு முன்னேறியது.

# இறுதியில் பேயர்ன் முனிச்



(கேட்டலோனியா)

சாம்பியன்ஸ் லீக் கால்பந்துத் தொடரின் இறுதிப் போட்டிக்கு பேயர்ன் முனிச் அணி தகுதி பெற்றது.

சம்பியன்ஸ் லீக் கால்பந்துத் தொடரின் அரையிறுதிக்கான முதல் சுற்றுப் போட்டியில் பேயர்ன் முனிச் அணி 4–0 என பார்சிலோனாவை வீழ்த்தியது. நேற்று முன்தினம் நடந்த அரையிறுதிக்கான இரண்டாவது சுற்றுப் போட்டியில் இரு அணிகளும் மீண்டும் மோதின.

போட்டியின் முதற் பாதியில் இரு அணி வீரர்களும் கோல் ஏதும் அடிக்கவில்லை. பின் இரண்டாவது பாதியில் எழுச்சிகண்ட பேயர்ன் முனிச் அணிக்கு அர்ஜன் ராபன் (48ஆவது நிமிடம்) ஒரு கோல் அடித்தார். பின் பார்சிலோனாவின் ஜெரால்ட் (72ஆவது நிமிடம்) ஒரு சேம்சைட் கோல் அடித்தார். தொடர்ந்து அசத்திய முனிச் அணிக்கு தோமஸ் முல்லர் (76 ஆவது நிமிடம்)) ஒரு கோல் அடித்து அணியின் வெற்றியை உறுதி செய்தார். இதற்கு பார்சிலோனா வீரர்களால் பதிலடி கொடுக்க முடியவில்லை. முடிவில், பேயர்ன் முனிச் அணி 3–0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. அரையிறுதியின் இரண்டு போட்டிகளில் அடித்த கோல்கள் (7–0) அடிப்படையில் பேயர்ன் முனிச் அணி இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது.

# மிகைப்படுத்திய புகழார ம்

சச்சின் டெண்டுல்கரின் ஓய்வு குறித்து பேசிக்கொள்வதைத் தயவு செய்து விட்டுவிடுங்கள். தற்போதும் விளையாடக்கூடிய உடற்தகுதியுடன் தான் அவர் உள்ளார் என இந்திய அணியின் முன்னாள் வீரரும், தற்போதைய வர்ணனையாளருமான ரவி சாஸ்திரி தெரிவித்துள்ளார்.

சச்சின் டெண்டுல்கரின் ஓய்வு குறித்து அடிக்கடி பேசிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் இன்னும் அவர் விளையாடுவதற்கு ஏற்ற உடற்தகுதியுடன் இருப்பதால் தொடர்ந்து விளையாடிக்கொண்டிருக்கிறார். விளையாடுவதை எப்போது நிறுத்திக் கொள்ள (ஓய்வு) வேண்டும் என்று அவர் விரும்புகிறாரோ அப்போது அதை அவர் நிறுத்திக் கொள்வார். டெண்டுல்கர் போன்ற வீரர்கள் 100 ஆண்டுகளுக்கு ஒரு முறை கூட கிடைக்க மாட்டார்கள் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# கரிபியன் ருவென்ரி–20 விளையாடுகிறார் முரளி

எதிர்வரும் ஜுலை மற்றும் ஓகஸ்ட் மாதங்களில் நடைபெறவுள்ள முதலாவது ருவென்ரி- 20 போட்டியில் விளையாட நட்சத்திர சுழற்பந்து வீச்சாளர் முத்தையா முரளிதரனுடன் ஒப்பந்தம் செய்துள்ளதாக கரிபியன் பிரிமியர் லீக் ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

800 விக்கெட்டுக்களுக்கு மேல் எடுத்துச் சாதனை புரிந்த, உலகின் முன்னணிப் பந்து வீச்சாளரான முத்தையா முரளிதரன் 2011ஆம் ஆண்டு சர்வதேச கிரிக்கெட்டிலிருந்து ஓய்வு பெற்ற பின் பல ருவென்ரி- 20 போட்டிகளில் விளையாடி வருகின்றார். அவர் தற்போது இந்திய பிரிமியர் லீக் போட்டியில் பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ் அணிக்காக விளையாடுகின்றார்.

இந்தப் போட்டியில் அனுமதிக்கப்பட்ட ஆறு அணிகள் விளையாடுகின்றன. இந்தப் போட்டிகள் கரிபியன் நாடுகளில் ஜுலை மாதம் 29ஆம் திகதியிலிருந்து ஓகஸ்ட் மாதம் 26ஆம் திகதிவரை நடைபெறும். விளையாட்டு வீரர் இணைப்பு மே 24ஆம் திகதி நடைபெறும்.

# மூன்றாமிடம்



(செயின்ட் பீட்டர்ஸ்பர்க்)

அல்கேன் நினைவு சதுரங்கத் தொடரின் கடைசிச் சுற்றுப் போட்டியை சம நிலை செய்து உலக சம்பியன் இந்தியாவின் விஸ்வநாதன் ஆனந்த் மூன்றாவது இடம் பிடித்தார்.

பிரான்ஸ் மற்றும் ரஷ்யாவில் அல்கேன் சதுரங்கத் தொடர் நடந்தது. இதன் ஒன்பதாவது மற்றும் கடைசிச் சுற்றில் ஆனந்த், இஸ்ரேலின் போரிஸை சந்தித்தார். இம்முறை கறுப்பு நிற காய்களுடன் விளையாடிய ஆனந்த், போட்டியை 40ஆவது நகர்த்தலின் போது சமநிலை செய்தார்.

ஒன்பது சுற்றுகளும் முடிந்த நிலையில் இந்தியாவின் ஆனந்த், 5 புள்ளிகளுடன் மூன்றாவது இடம் பிடித்தார்.

அர்மேனியாவின் லெவான், இஸ்ரேலின் போரிஸ் ஆகியோர் 5.5 புள்ளிகளுடன் முதல் இடத்தைப் பகிர்ந்து கொண்டனர்.



# சம்பியன்ஸ் கிண்ண கிரிக்கெட் அவுஸ்ரேலிய அணி அறிவிப்பு

(சிட்னி)

இங்கிலாந்தில் அடுத்த மாதம் நடக்கும் சம்பியன்ஸ் கிண்ணக் கிரிக்கெட் போட்டிக்கான அவுஸ்ரேலிய அணி நேற்று அறிவிக்கப்பட்டது. துடுப்பாட்டம் மற்றும் பந்து வீச்சில் கவனம் செலுத்துவதற்காக துணைக் கப்டன் பதவியில் இருந்து வட்சன் விலகியதையடுத்து, இந்தப்போட்டிக்கான துணைக் கப்டனாக ஜோர்ஜ் பெய்லி நியமிக்கப்பட்டுள்ளார். வீரராக வட்சன் அணியில் நீடிக்கிறார்.

சம்பியன்ஸ் கோப்பை கிரிக்கெட் போட்டிக்கான அவுஸ்ரேலிய அணி வருமாறு: மைக்கல் கிளார்க் (கப்டன்), ஜோர்ஜ் பெய்லி, டேவிட் வோர்னர், வட்சன், பிலிப் ஹூக்ஸ், அடம் வோக்ஸ், மத்யூ வேட், கிளைன் மேக்ஸ்வெல், மிட்செல் மார்கூஷ், ஜேம்ஸ் பவுல்க்னெர், சேவியர் டோஹர்த்தி, கிளைன்ட் மெக்கே, மிட்செல் ஜோன்சன், மிட்செல் ஸ்டார்க், நதன் கவுல்டர் நிலே.

# அணியிலிருந்து நீக்கம் காரணம்கண்டறிந்த அப்ரிடி

அணியில் இருந்து நான் நீக்கப்பட்டதற்கு கப்டன் மிஸ்பா உல்–ஹக் காரணம் என பாகிஸ்தான் அணியிள் அதிரடி வீரர் அப்ரிடி தெரிவித்துள்ளார். இங்கிலாந்தில் நடைபெறவுள்ள சம்பியன்ஸ் கிண்ணக் கிரிக்கெட் போட்டி அடுத்த மாதம் (ஜூன்) 6ஆம் திகதி முதல் 23ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது. 8 அணிகள் பங்கேற்கும் இந்தப் போட்டிக்கான பாகிஸ்தான் அணியில் இருந்து சகலதுறை வீரர் அப்ரிடி நீக்கப்பட்டார். இதனால் அதிர்ச்சிக்குள்ளாகி இருக்கும் அப்ரிடி பத்திரிகை ஒன்றுக்கு அளித்த பேட்டியில் கருத்துத் தெரிவிக்கையிலேயே மேற்கண்டாவறு தெரிவித்தார். இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

கப்டன், குறிப்பிட்ட ஒரு வீரரை வேண்டாம் என்று சொல்வதில் ஒன்றும் பெரிய விடயம் கிடையாது. கிரிக்கெட்டைப் பொறுத்தவரை அணியில் இருப்பதும், நீக்கப்படுவதும் வழக்கமான ஒன்றுதான். பல பாகிஸ்தான் வீரர்களை விட நான் ரொம்ப நன்றாக இருக்கிறேன். இன்னும் என்னால் சிறப்பாக விளையாட முடியும். பாகிஸ்தான் கிரிக்கெட் அணிக்காக மேலும் சில ஆண்டுகள் என்னால் பங்கேற்க முடியும் என்று கருதுகிறேன். கடினமாக உழைத்து, விரைவில் அணிக்குத் திரும்புவேன். எனக்காக கடவுளிடம் பிரார்த்தனை செய்யும்படி எனது இரசிகர்களைக் கேட்டுக்கொள்கிறேன் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.


**இன்றைய ஆட்டம்**

Season 6

IPL

கொல்கத்தா நைட் ரைடர்ஸ் எதிர்
ராஜஸ்தான் றோயல்ஸ்
**இடம்: கொல்கத்தா**
**இரவு 8.00 மணி**

# ரெய்னா சதம்; சாதித்தது சென்னை



(சென்னை)

கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணிக்கெதிரான போட்டியில் சென்னை சூப்பர் கிங்ஸ் அணி 15 ஓட்டங்களால் போராடி வெற்றிபெற்றது. ஆறாவது ஐ.பி.எல். ருவென்ரி–20 கிரிக்கெட் தொடரின் 45ஆவது போட்டி நேற்று சென்னையில் நடைபெற்றது. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற சென்னை சூப்பர் கிங்ஸ் அணி முதலில் துடுப்பாடத் தீர்மானித்தது. இதற்கமைய களமிறங்கிய சென்னை அணி ஆரம்பத்தில் மந்தமாக ஆடியது. முதல் விக்கெட்டை 21 ஓட்டங்களுக்குப் பறிகொடுத்த சென்னை சூப்பர் கிங்ஸ் அணி மேலும் நெருக்கடி நிலையை எதிர்கொண்டது. இதன் பின்னர் உருவெடுத்த சுரேஷ் ரெய்னா ஒரு முனையில் அதிரடியான ஆட்டத்தை வெளிப்படுத்தி அரங்கை அதிர வைத்ததுடன் அணியின் ஓட்ட எண்ணிக்கையையும் அதிகரித்தார். சுரேஷ் ரெய்னாவின் விக்கெட்டைச் சாய்க்க பல வழிகளிலும் கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணி பொறி வைத்த போதும், அதில் சிக்கிக்கொள்ளவில்லை. மாறாக பவுண்டரிகள், சிக்ஸர்கள் என விளாசிய சுரேஷ் ரெய்னா சதமடித்து அணியின் ஓட்ட எண்ணிக்கையை வலுவாக்கினார். இறுதியில் சென்னை சூப்பர் கிங்ஸ் அணி 20 ஓவர்கள் நிறைவில் நான்கு விக்கெட்டுக்களை இழந்து 186 ஓட்டங்களைப் பெற்றது. இதில் சுரேஷ் ரெய்னா 53 பந்துகளை எதிர்கொண்டு ஆறு சிக்ஸர்கள், ஏழு பவுண்டரிகள் அடங்கலாக ஆட்டமிழக்காது 100 ஓட்டங்களைப் பெற்றார். ஆறாவது ஐ.பி.எல். தொடரின் பதிவாகிய மூன்றாவது சதமாக இது அமைந்தது. மற்றும் மைக்கல் ஹசி 35, ஏ. மோர்கல் 23 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் அவனா இரண்டு விக்கெட்டுக்களை விழ்த்தினார். பதிலுக்கு 187 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணி ஆரம்பத்தில் தடுமாறியது. முதலிரு விக்கெட்டுக்களையும் 36 ஓட்டங்களைப் பெற்றவேளை பறிகொடுத்தது. தொடர்ந்து களமிறங்கிய டேவிட் ஹசி மார்ஷிற்கு ஒத்துழைப்பு வழங்கும் வகையில் சிறிது நேரம் தாக்குப் பிடித்தார். இந்த இணையும் பிரிக்கப்பட கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணி மேலும் நெருக்கடிக்குள் தள்ளப்பட்டது. இந்நிலையில் நான்காவது விக்கெட்டுக்காக இணைந்த மில்லர், மார்ஷ் இணை சென்னை சூப்பர் கிங்ஸ் அணியின் பந்து வீச்சை புளந்து கட்டி சிக்ஸர்களாகவும், பவுண்டரிகளாகவும் விளாசியது. இந்த ஜோடியின் ஆட்டம் பஞ்சாப் அணிக்கான வெற்றிவாய்ப்பை பிரகாசப்படுத்தியது. இறுதி ஓவரில் 19 ஓட்டங்கள் தேவை என்ற நிலையில் இந்த ஜோடி பிராவோவினால் பிரிக்கப்பட்டது. அடுத்து களமிறங்கிய ஜி. சிங்கும் வெளியேற்றப்பட சென்னையில் வெற்றி உறுதி செய்யப்பட்டது. இறுதி ஓவரில் மிகவும் சிறப்பான முறையில் செயற்பட்ட பிராவோ மூன்று விக்கெட்டுக்களைச் சாய்த்து அணியின் வெற்றிக்கு துணைபுரிந்தார். இறுதியில் கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணி 20 ஓவர்கள் நிறைவில் ஆறு விக்கெட்டுக்களை இழந்து 171 ஓட்டங்களைப்பெற்றுத் தோல்வியைத் தழுவியது. இதில் மார்ஷ் 51 பந்துகளில் எட்டு பவுண்டரிகள், இரண்டு சிக்ஸர்கள் அடங்கலாக 73 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தார். மில்லர் ஆட்டமிழக்காது 26 பந்துகளில் 51 ஓட்டங்களைப் பெற்றது. மில்லர், மார்ஷ் இணை நான்காவது விக்கெட்டுக்காக 95 ஓட்டங்களைப் பெற்றது. பந்து வீச்சில் பிராவோ மூன்று, எம். சர்மா இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினர். போட்டியின் ஆட்டநாயகனாக ரெய்னா தெரிவானார்.

# பங்களாதேஷிற்கு எதிராக வர்த்தக நடவடிக்கை

## ஐரோப்பிய ஒன்றியம் பரிசீலனை



ஐரோப்பிய ஒன்றியத்தின் உறுப்பு நாடுகள் அனைத்தின் ஒப்புதலுடன் மட்டுமே பங்களாதேஷிற்கு அளிக்கப்படும் சலுகைகளை குறைப்பது குறித்து முடிவெடுக்க முடியும். சலுகைகள் நிறுத்தப்பட்டால் பங்களாதேஷ் கடும் பாதிப்புக்கு உள்ளாகும்.

இதற்கிடையே விபத்தில் இறந்த தொழிலாளர்கள் அடிமைகள் போல் நடத்தப்பட்டதற்கு பாப்பரசர் போப் பிரான்சிஸ் கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

(டாக்கா)

பங்களாதேஷ் தலைநகர் டாக்காவில் ராணா பிளாசா என்ற 8 மாடிக்கட்டடம் கடந்த 24ஆம் திகதி இடிந்து விழுந்தது. இந்த விபத்தில் பல்லாயிரக்கணக்கானோர் சிக்கிக்கொண்டனர். 2443 பேர் மீட்கப்பட்டுள்ள நிலையில், 402 பேர் உயிரிழந்துள்ளனர். அந்தக் கட்டடத்தின் உரிமையாளர் கைது செய்யப்பட்டு 14 நாள் பொலிஸ் காவலில் வைக்கப்பட்டுள்ளார். இந்தச் சம்பவத்துக்கு காரணமானவர்களுக்கு அதிக பட்ச தண்டனை வழங்கக்கோரி அந்த நாட்டில் தொழிலாளர்கள் பல போராட்டங்களை நடத்தி வருகின்றனர்.

இந்நிலையில் ஐரேர்ப்பிய ஒன்றியம் அந்நாட்டுக்கு எதிராக வர்த்தக நடவடிக்கைகளை மேற்கொள்ள பரிசீலித்து வருகிறது. பங்களாதேஷின் ஆயத்த ஆடைகள் ஏற்றுமதியில் 60 சதவீதம் ஐரோப்பிய நாடுகளுக்கே செல்கிறது.

வரியில்லாமல் வர்த்தகம் செய்யும் சலுகையை பங்களாதேஷிற்கு மேற்கத்திய நாடுகள் வழங்கி உள்ளன. இதனால் ஒரு வருடத்திற்கு 19 பில்லியன் டொலர் மதிப்பிலான ஆயத்த ஆடைகள் ஐரோப்பிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது.

இது குறித்து ஐரோப்பிய ஒன்றியத்தின் வெளியுறவு கொள்கைகள் தலைவர் கத்தரின் ஆஷ்டன் மற்றும் வர்த்தக ஆணையர் காரெல் டே குசட் ஆகியோர் இணைந்து வெளியிட்டுள்ள அறிக்கையில்,

பங்களாதேஷ் அரசு நாட்டில் உள்ள அனைத்து தொழிற்சாலைகளும் சர்வதேச தொழிலாளர் தரநிலைகளை அடிப்படையில் அமைக்கப்பட்டுள்ளது என்பதை விரைவில் உறுதி செய்யவேண்டும் என்று ஐரோப்பிய ஒன்றியம் கேட்டுக் கொள்கிறது எனத் தெரிவிக்கப் பட்டுள்ளது.

# வெனிசுலா நாடாளுமன்றில் ஆளும், எதிர்க்கட்சிகளால் அமளி



வெனிசுலா (Venezuela) நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சி மற்றும் ஆளுங்கட்சி உறுப்பினர்கள் மோதிக் கொண்டதால் அமளி ஏற்பட்டது. ஹுகோ ஹாவேஸ் (Hugo Chavez) மறைவை அடுத்து வெனிசுலா (Venezuela) அதிபராக நிகோலாஸ் மதுரோ (Nicolas Maduro) பொறுப்பேற்றுள்ளார்.

அவரது வெற்றியை ஏற்க மறுத்துள்ள எதிர்க்கட்சியினர், நாடாளுமன்றத்தில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். தொடர்ந்து அரசுக்கு எதிராக முழக்கம் எழுப்பியதால் ஒருகட்டத்தில் ஆளுங்கட்சியினருக்கும் எதிர்க்கட்சியினருக்கும் இடையே கைகலப்பு ஏற்பட்டது.

அப்போது, இரு தரப்பினரும் சரமாரியாக தாக்கிக் கொண்டனர். நாற்காலிகளும், லப் டொப்களும் தூக்கி வீசப்பட்டன. இந்த மோதலில் இரு தரப்பிலும் உறுப்பினர்கள் பலர் காயமடைந்தனர்.

நாடாளுமன்றத்தில் தங்களுக்கு பேச்சுரிமை மறுக்கப்படுவதாக கூறியுள்ள எதிர்க்கட்சியினர், வெனிசுலா (Venezuela) அரசுக்கு எதிராக தொடர் போராட்டத்தில் ஈடுபடப்போவதாக அறிவித்துள்ளனர்.

உலகச் செய்திகள்

# துவைக்காமல் நூறு நாட்கள் உபயோகிக்கக்கூடிய சட்டை

## அமெரிக்காவில் அறிமுகமானது



(நியூயோர்க்)

துவைக்காமல், அயன் போடத தேவையில்லாமல், தொடர்ந்து 100 நாட்கள் உபயோகப்படுத்தக்கூடிய விதத்தில் ஒரு சட்டையை அமெரிக்காவின் உல்ரூயஅஷி பிரின்ஸ் என்ற நிறுவனம அறிமுகப்படுத்தியுள்ளது.

உல்லன் நூல் கலந்த துணிகள கசங்காது, வியர்வை வாடையை வெளியிடாத தன்மை கொண்டவை. கொட்டனைவிட ஆறு மடங்கு உழைக்கக்கூடியது என்பதால் இந்த வகைத் துணியில் நவீன காலத்திற்கு ஏற்ப ஆழ் நீலகலரில் சிறிய கட்டங்கள் கொண்ட சட்டையை வெளியிட்டுள்ளதாக அந்நிறுவனம் அறிவித்துள்ளது

இதனை அணிந்து பார்க்க, நிறுவனத்தால் தேர்ந்தெடுக்கப்பட்ட நபர்கள் தாங்கள் எப்படி உபயோகித்தாலும் சட்டைகள் புதிது போலவே இருக்கின்றன என்று கூறுகின்றார்கள். ஒரே சட்டையை 100 நாட்கள் அணிந்துகொண்டு தெருவில் அனைவரிடமும் அது குறித்த கருத்தினைக் கேட்பது போலவும் அவர்கள் அனைவரும் ஆதரவான கருத்தினை வெளியிடுவதும் போன்ற வீடியோ விளமபரங்களை அந்த நிறுவனம் வெளியிட்டுள்ளது.

எல்லோரும் விரும்பும் விதத்திலும், எப்போதும் அணியக்கூடிய வடிவத்திலும் ,சாதாரண விலைமதிப்பிலும் இந்த சட்டைகளை உருவாக்கியுள்ளதாக அந்த நிறுவனம் தங்களது இணையதளத்தில் தகவல் வெளியிட்டுள்ளது.

# அமெரிக்க சரக்கு விமானம் விபத்துக்குள்ளாகி 7பேர் பலி



டுபாய் நோக்கிப் பயணித்த அமெரிக்க சரக்கு விமானம் விபத்துக்குள்ளானதில் ஏழு பேர் உயிரிழந்துள்ளனர்.

ஆப்கானிஸ்தானில் அமெரிக்க இராணுவ வீரர்கள் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டுள்ளனர்.

இவர்களுக்குத் தேவையான பொருட்களை எடுத்து வந்த, அமெரிக்க சரக்கு விமானம் கடந்த மாதம் 29ஆம் திகதி பாக்ரம் விமானப்படை தளத்திலிருந்து டுபாய் நோக்கி புறப்பட்டது. புறப்பட்ட சில நிமிடங்களில் திடீரென விமானம் விபத்துக்குள்ளாகி நொறுங்கியது. இந்த விபத்தில் ஏழு பேர் பலியாகினர். இந்த விபத்துக்கான காரணம் குறித்து, அமெரிக்க போக்குவரத்து பாதுகாப்புத்துறை விசாரணைக்கு உத்தரவிட்டுள்ளது.

# தொலைக்காட்சி கேள்விநேரம் உலக சாதனை படைத்த புடின்



(மொஸ்கோ)

ரஷ்ய அதிபர் விளாடிமிர் புடின், தொலைக்காட்சி நிகழ்ச்சியின், கேள்வி நேரத்தில் பங்கேற்று, ஒரு புதிய உலக சாதனையை நிகழ்த்தியுள்ளார் ரஷ்ய அதிபர் விளாடிமிர் புடின், கடந்த வாரம், பல்வேறு தரப்பில் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு, தொலைக்காட்சி நிகழ்ச்சியின் மூலம் பதில் அளித்தார்.அதிபரிடம் கேள்வி கேட்பதற்காக, பலர் தொலைபேசி மூலமும், எஸ்.எம்.எஸ்., மூலமும் ஏராளமான கேள்விகளைக் கேட்டனர். இவற்றில் ஆக்கபூர்வமான, 85 கேள்விகளுக்கு, 4 மணி நேரம்,47 நிமிடங்கள் சளைககாமல் பதில் அளித்தார், புடின். கடந்த, 2001இல், இதே போன்ற கேள்வி பதில் நிகழ்ச்சியில் அவர், முதல் முறையாக பங்கேற்ற போது, இரண்டரை மணி நேரத்திற்கு பதில் அளித்தார். பின், திட்டமிட்ட கால அவகாசத்தைக் காட்டிலும், ஒரு மணி நேரம் கூடுதலாக இடம்பெற்றது.கடந்த, 2009இல், கேள்வி - பதில் நிகழ்ச்சியில், ஏறக்குறைய, 4 மணி நேரமும், 2010இல், 4 மணி, 26 நிமிடங்களுக்கும் பதில் அளித்துள்ளார். 2011இல், 4 மணி 30 நிமிடங்களுக்கு பதில் அளித்து, சாதனை படைத்துள்ளார்.

# விண்வெளிக்குச் செல்ல கட்டணம் நிர்ணயம்



விண்ணில் அமைக்கப்பட்டுள்ள சர்வதேச விண்வெளி ஆய்வகத்துக்குச் செல்ல, ஒரு நபருக்கு 350 கோடி ரூபாய் கட்டணம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

விண்வெளி வீரர்களை அழைதது்ச் செல்லும் பணியில் உள்ள ரஷ்ய நாட்டு நிறுவனத்துக்கு, அமெரிக்காவின் நாசா தரும் கட்டணம்தான் இது. 2016, 2017ஆம் ஆண்டுகளில் செல்ல உள்ள பயணத்துக்காக இத்தொகையை செலுத்த வேண்டும். 2015ஆம் ஆண்டு பயணத்துக்கு 300 கோடி ரூபாய் மட்டுமே செலுத்தப்படும் நிலையில், இப்போது அது 50 கோடி ரூபாய் அதிகரித்துவிட்டது.

விண்வெளிப்பயணத்துக்கான பயிற்சி, விண்வெளியில் எப்படி நடந்து கொள்ள வேண்டும், ஆபத்துக் காலங்களில் பாதுகாப்பாக மீட்டு வருவது உள்ளிட்ட சேவைகளுக்காகவே இக்கட்டணம் வசூலிக்கப்படவுள்ளது.

# சவுதியில் வரலாறு காணாத மழை 13பேர் பலி நால்வர் மாயம்

(ரியாத்)

சவுதி அரேபியாவில் கடந்த 25 வருடங்களில் இல்லாத அளவிற்கு பலத்த மழை பெய்துள்ளது. கடந்த வெள்ளிக்கிழமை ஏற்பட்ட பலத்த மழையால் தாழ்வான பகுதிகளில் வெள்ள நீர் சூழ்ந்தது. இதில் 13 பேர் பலியானதாகவும், நான்கு பேரைக் காணவில்லை என்றும் செய்திகள் வெளியாகி உள்ளன.

மேலும், திடீரென ஏற்பட்ட வெள்ளத்தால் கார்கள் தத்தளிப்பதையும், மக்கள் மரங்களின் அடியில் ஒதுங்கியிருப்பதையும், தொலைக்காட்சி வெளியிட்டுள்ளது. மக்கள் வெட்ட வெளிகளில் ஒதுங்கவேண்டாம் என்றும் மக்கள் பாதுகாப்பு ஆணையம் கேட்டுக்கொண்டுள்ளது.

தலைநகர் ரியாத், பாகா, ஹெயில் ஆகிய இடங்களில் மக்கள் மழையில் பலியாகியுள்ளனர். கடந்த ஞாயிறு சவுதி உள்துறை அமைச்சர், இளவரசர் முகமது பின் நயெப், பாதுகாப்புத்துறை அதிகாரிகளிடம் வெள்ளத்தில் சிக்கி அவதிப்படும் மக்களுக்கு வேண்டிய உதவிகளை செய்யுமாறு கூறியுள்ளார். நிலை மையை அவர் தீவிரமாகக் கண்காணித்து வருவதாகக் கூறப்படுகின்றது.

கடந்த 2009 ஆம் ஆண்டு இதுபோல் ஏற்பட்ட திடீர் வெள்ளப்பெருக்கில் ஜெட்டாவில் 123 பேர் இறந்தனர். பின்னர், 2011ஆம் ஆண்டில் ஏற்பட்ட வெள்ளத்தில் 10 பேர் பலியானார்கள். இதுபோன்ற அவசர நிலைமைகளுக்கு சவுதி அரசு தயார் நிலைமையில் இருப்பதில்லை என்ற குற்றச்சாட்டு தற்போது எழுந்துள்ளது

# குடிநீரில் அளவுக்கு மீறிய குளோறின் நெஞ்சம் புளுங்கும் பொதுமக்கள்

(யாழ்ப்பாணம்)

மண்டைதீவுப் பகுதிக்கு விநியோகிக்கப்படும் குழாய் மூல குடிநீரில் அதிகளவில் குளோறின் இடப்படுவதாக அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

இதன் காரணமாக தாகம் தீர அந்த நீரைப் பருக முடியாத நிலை ஏற்பட்டிருப்பதாகத தெரிவிக்கும் பொதுமக்கள் ஒருவகை காரத்தன்மையையும் அந்த நீரில் உணர முடிவதாகவும் தெரிவித்துள்ளனர்.

எனவே மண்டைதீவுப் பகுதிக்கு விநியோகிக்கப்படும் குடிநீரில் குளோறினை அளவாகப் பயன்படுத்தி நீரை விநியோகிக்குமாறு சம்பந்தப்பட்ட தரப்பினரை அப்பகுதி மக்கள் கேட்டுள்ளனர்.

மேலும் கோடை காலத்தில் இந்தக் கிராமத்திற்கு விநியோகிக்கப்படும் நீரின் அளவும் போதாமல் இருப்பதாகவும் தெரிவிக்கப்படும் அதேவேளை காலையில் தொட்டிகளுக்கு வரும் நீர் பிற்பகல் தீர்ந்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

மண்டைதீவுக்கு அல்லைப்பிட்டி, மண்கும்பான் ஆகிய பகுதிகளிலிருந்தே குழாய் மூல குடிநீரினை தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச்சபை விநியோகித்து வருகின்றமை தெரிந்ததே. (பா)

# சிசுக்கள் மீது கிருமித் தொற்று அபாயத்தை அகற்ற ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்தியசாலையின் பெண்கள் பிரசவ விடுதிக்குள் செல்லும் பார்வையாளர்களின் எண்ணிக்கை மட்டுப்படுத்தப்பட்டிருப்பதாக வைத்தியசாலைப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

பெண்கள் பிரசவ விடுதிக்கு பார்வையாளர்களாக வருபவர்களின் மூலம் அங்குள்ள சிசுக்கள் கிருமித் தொற்றுக்கு இலக்காகும் சாத்தியங்கள் தென்படுவதனை அடுத்தே அங்கு வரும் பார்வையாளர்களை மட்டுப்படுத்த வைத்தியசாலை நிர்வாகம் நடவடிக்கை எடுத்துள்ளதாகத் தெரியவருகின்றது.

ஏற்கனவே மூன்று முதல் ஐவர் வரை இவ்வாறு பிரசவ விடுதியில் உள்ள ஒருவரையும், சிசுவையும் பார்வையிட அனுமதி வழங்கப்பட்டிருந்தது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

ஏற்கனவே இவ்வாறு சில வைத்தியசாலைகளின் பிரசவ விடுதிகளில் இருந்த சிசுக்களுக்கு நோய்த் தொற்று ஏற்பட்டிருந்ததை உறுதிப்படுத்தப்பட்டதனை அடுத்தே இந்த நடைமுறை அமுல்படுத்தப்படவுள்ளதாகவும் தெரியவருகின்றது. (பா)

## குளத்தில்...

ஆறுமுகம் தர்மராசா என்பவர் குளத்தில் குளிக்கச் செல்வதாக குடும்பத்தினரிடம் கூறிவிட்டுச் சென்றுள்ளார்.

நீண்ட நேரமாகியும் குறித்த நபர் வீடு வராததால் அவரை தேடி உறவினர்கள் குளத்திற்கு சென்றவேளை குறித்த நபர் குளத்தினுள்ளே சடலமாகக் கிடந்துள்ளார்.

அதன்பின்பு இராணுவம் மற்றும் பொலிஸாரின் உதவியுடன் சடலம் மீட்கப்பட்டு மாவட்ட பொது வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. தற்போது குறித்த நபரின் சடலம் வைத்தியசாலை பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

நாளை பிரேத பரிசோதனை இடம்பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது. இச்சம்பவம் தொடர்பாக முள்ளியவளை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (125)

## அசாத் சாலி கைது

(கொழும்பு)

குற்றப்புலனாய்வு பிரிவினரால் நேற்றுக் கைது செய்யப்பட்ட கொழும்பு மாநகர முன்னாள் பிரதி மேயர் அசாத் சாலி நான்காம் மாடியில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

இந்தியாவிலுள்ள பத்திரிகையொன்றுக்கு வழங்கிய நேர்காணல் தொடர்பிலேயே பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழே அசாத் சாலி கைது செய்யப்பட்டுள்ளார். நான்காம் மாடிக்கு சென்ற சட்டத்தரணிகள் சிலர் இவரைச் சென்று பார்வையிட்டுள்ளனர்.

## பளையில் அதிகாலை விபத்து; மயிரிழையில் தப்பினர் பயணிகள்

(கொடிகாமம்)

பளை வைத்தியசாலைக்கு அருகாமையில் நேற்று அதிகாலை 6.45 மணியளவில் அரச தனியார் பேருந்தும், டிப்பர் வாகனமும் மோதி விபத்துக்குள்ளான சம்பவமொன்று இடம்பெற்றுள்ளது.

பளை வைத்தியசாலை வீதியால் சென்றுகொண்டிருந்த டிப்பர் வாகனத்தை யாழ்ப்பாணத்திலிருந்து பயணிகளை ஏற்றிக் கொண்டு வந்துகொண்டிருந்த தனியார் பேருந்து முந்திச் செல்ல முற்பட்ட சமயம் பேருந்தின் பின்புறமாக டிப்பர் வாகனம் மோதியதில் விபத்துக்குள்ளாகி பலத்த சேதமடைந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

எனினும், எவருக்கும் காயம் ஏற்படவில்லை எனத் தெரிவிக்கப்படுவதுடன், வாகனங்கள் பலத்த சேதமடைந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

விபத்துத் தொடர்பாக பளைப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (130)

## வெளியேறிய...

முகாம்களில் வாழ்ந்தால் கூட, கடந்த காலங்களில் வழங்கப்பட்டது போன்ற வாக்களிக்கின்ற உரிமை சட்டப்படி வழங்க முடியாது என்று தேர்தல் ஆணையகம் தெரிவித்திருக்கின்றது.

இதன் காரணமாக வெளியேற்றப்பட்ட முஸ்லிம்களில் வடமாகாணத்தில் மீள்குடியேறாத முஸ்லிம்களின் பெயர்கள் 2010 ஆம் ஆண்டு வரை, வடமாகாணத்துக்கான வாக்கா ளர் பட்டியலில் இருந்த போதும், தற்போது நீக்கப்பட்டுள்ளதாக அறிகின்றோம்.இது சட்ட ரீதியாக அவர்களினால் எடுத்திருக்கின்ற முடிவாகும். மறு வார்த்தையில் சொல்லப்போனால், வடமாகாணத்தில் மீள்குடியேறியவர்களுக்கு மாத்திரம் தான் வாக்குரிமை இருக்கின்றது.

இதனது பின்னணியில் தான் மீள்குடியேற்றம் முடிவுறாத வரையில் வடமாகாண சபைத் தேர்தல் நடத்தப்படக்கூடாது என்ற நிலைப்பாட்டை எடுத்தோம். உதாரணமாக மன்னார் மாவட்டத்தில் 1990 ஆம் ஆண்டு காலப்பகுதியில் எருக்கலம்பிட்டியில் 8 ஆயிரம் வாக்களார்கள் பதிவுகளில் இருந்தனர். ஆனால் தற்போது புதிதாக காணப்படும் வாக்குப் பட்டியலில் 2 ஆயிரம் மட்டுமே உள்ளடக்கப்பட்டுள்ளது. ஏற்கனவே இருந்த தொகை 80 சதவீதமாக குறைவடைந்துள்ளதை பார்க்க முடிகின்றது என்றும்,


இந்த நிலையில் சொந்த வீடுகளில், சொந்தத் தொழில்களை செய்து கொண்டு வசதியாக வாழ்ந்த மக்கள் அகதி முத்திரை குத்தி வெளியேற்றப்பட்டு 22 வருட அவல வாழ்க்கை வாழ்ந்து, அமைதி திரும்பியதன் பின்பு கூட தாங்கள் வாழ்ந்த வீடுகளில் அல்லது நிலங்களில் வாழ முடியாத துர்ப்பாக்கிய நிலையில் இருக்கின்ற இம் முஸ்லிம்களுக்கு எஞ்சியிருப்பது, அரசாங்கத்தால் வழங்கப்பட்ட காடுகள் மாத்திரமே எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## "யாழ்ப்பாண வாழ்வியல்" நூல் வெளியீடு

யாழ்ப்பாணத்து வாழ்வியலை பிரதிபலிக்கும் வகையில் யாழ்.பல்கலைக்கழக வரலாற்றுத்துறையினால் யாழ்ப்பாண வாழ்வியல் என்னும் நூல் வெளியிட்டு வைக்கப்பட்டுள்ளது. யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் வரலாற்றுத்துறைத் தலைவர் பேராசிரியர் ப.புஸ்பரட்ணம் தலைமையில் நேற்று மாலை இவ் வெளியீட்டு நிகழ்வு நடைபெற்றது.

இந்நிகழ்வில் யாழ். பல்கலைக்கழக பதில் துணைவேந்தர் பேராசிரியர் ச.சத்தியசீலன் நூலினை சம்பிரதாய பூர்வமாக வெளியிட்டு வைத்தார்.

சமஸ்கிருதத்துறை முன்னாள் தலைவர் பேராசிரியர் வி.சிவசாமி, விஞ்ஞானபீட பீடாதிபதி பேராசிரியர் க.கந்தசாமி, வணிக பீட பீடாதிபதி பேராசிரியர் தி.வேல்நம்பி, வரலாற்றுத் துறை பேராசிரியர் செ.கிருஷ்ணராஜா அரசறிவியல் துறைத் தலைவர் வே.மணிவாசகம் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



தாய்லாந்தின் பிரதி பிரதமரும் வெளிவிவகார அமைச்சருமான கலாநிதி சுரபொங் ரொவிச்சாக்சைக்குல் கொட்டாஞ்சேனையில் அமைந்துள்ள தீபதுத்தமரம தாய் ரஜ மகா விகாரைக்கு நேற்று சென்று மத வழிபாடுகளில் ஈடுபட்டார்.

## வைரஸ் தொற்று தீவிரம்

(கொழும்பு)

புதிதாக பரவிவரும் இன்புளுவன்ஸா AHINI வைரஸ் தொற்று அறிகுறிகள் காணப்படும் கர்ப்பிணித் தாய்மார்கள் உடனடியாக வைத்தியர்களை நாட வேண்டும் என சுகாதார அமைச்சு அறிவுறுத்தியுள்ளது. கர்ப்பிணித் தாய்மார்கள் குழந்தை பெற தயாராகும் காலத்தில் அவர்களுக்கு நோய்த்தடுப்பு சக்தி குறைவதாகவும் அதன்போது குறித்த வைரஸ் உடம்பினுள் உட்புகும்போது பாரிய சிக்கல் ஏற்படும் எனவும் சுகாதார அமைச்சு எச்சரித்துள்ளது.

இருமல், காய்ச்சல், தலைவலி, உடம்புவலி போன்ற நோய் அறிகுறிகள் காணப்பட்டால் அது இன்புளுவன்ஸா AHINI வைரஸாக இருக்கலாம் என சுகாதார அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது. விலங்குகள் மூலம் உருவாகும் இன்புளு வன்ஸா AHINI வைரஸ், விரைவில் பரவிச் செல்லக் கூடியது எனவும் கர்ப்பிணி தாய்மார்கள், குழந்தைகள், முதியவர்கள் மிகவும் அவதானமாக இருக்க வேண்டும் எனவும் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

## மின் கட்டணச்...

அலகுகள் தொடக்கம் அமுல்படுத்தப்படவிருந்த கட்டண முறையினை 66 அலகுகளிலிருந்து அமுல்படுத்துவதற்கும் 91 அலகுகளிலிருந்து நடைமுறைப்படுத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டிருந்த கட்டண முறைமையை 96 அலகுகளிலிருந்து அமுல்படுத்துவதற்கும் இப்போது பிரேரிக்கப்பட்டுள்ளது.

புதிய கட்டணத் திருத்தத்திற்கு அமைய 121 அலகுகளிலிருந்து அமுல்படுத்தப்படவிருந்த கட்டண முறைமை 126 அலகுகளிலிருந்து நடைமுறைப்படுத்துவதற்கு ஜனாதிபதி வழங்கிய பரிந்துரைக்கு அமைய தீர்மானம் மேற்கொண்டுள்ளதாக மின்சக்தி எரிசக்தி அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

முதல் 66 அலகுகள் வரை பயன்படுத்தும் பாவனையாளர்களுக்கு கட்டண அதிகரிப்பு எதுவும் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## வாள்வெட்டில்...

வட்டுக்கோட்டைப் பகுதியைச் சேர்ந்த காந்தன் ஆகியோரே வாள்வெட்டுக்கு இலக்காகியுள்ளனர்.

சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது, குணசேகரம் பிரேம்காந் என்பவருக்கு கொழும்புத்துறை பகுதியைச் சேர்ந்த நபர் ஒருவர் பணம் கொடுக்க வேண்டியிருந்துள்ளது.அந்தப் பணத்தினைத் தருமாறு கேட்டு அவரும் அவருடைய சகோதரனும் சென்ற வேளையிலேயே, பணத்தை கொடுக்கவேண்டியவர் 8 பேர்கொண்ட குழுவுடன் வாகனத்தில் வந்து வாளால் வெட்டியுள்ளார்.

இதனையடுத்து இரு தரப்பினருக்கும் இடையில் பரஸ்பரம் தாக்குதல் இடம்பெற்றுள்ளது. இதன்போதே நான்கு பேர் காயமடைந்துள்ளனர்.

வெட்டுக் காயங்களுக்கு இலக்காகிய நால்வரில் ஒருவர் அதி தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளதுடன், ஏனைய மூவரும் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (25)

## அனுமதியற்ற...

சட்டத்திற்கு மீறிய நெற்செய்கையில் ஈடுபட்ட விவசாயிகளின் அத்துமீறிய நெற்செய்கை பரப்புக்களை அழிப்பதற்கான நடவடிக்கைகள் எதிர்வரும் 6 ஆம் திகதியிலிருந்து ஆரம்பிக்கப்படவுள்ளது என்பதனை அத்துமீறிய விவசாயிகள் அனைவருக்கும் தெரியப்படுத்துகின்றேன் என்றும் ஏனைய சிறுபோகக் குளங்களுக்கும் இந் நடவடிக்கை ஏற்புடையதாகும் என்றும் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் அறிவித்துள்ளார்.

## மூச்சக்கர...

நர்களுக்கு ஆட்டோ ஓட்டுவதற்கு அனுமதி இல்லை, யாழ். மாநகர சபையால் அங்கீகரிக்கப்பட்ட ஆட்டோ தரிப்பிடத்தில் மட்டும் ஆட்டோக்கள் தரித்தல் வேண்டும், ஆட்டோ சங்கத்தின் யாப்பு விதிகளுக்கும், அறிவுறுத்தலுக்கும் கட்டுப்பட்டு நடத்தல் வேண்டும்.

மேற்படி மேற்குறிப்பிட்டுள்ள விடயங்களில் உடன்பட்டு நடக்காத ஆட்டோ உரிமையாளர்கள் மீது யாழ். மாநகரசபை வீதி ஒழுங்குபடுத்தும் பணியாளர்களினாலும் தேவைப்படும் போது போக்கு வரத்துப் பொலிஸாரினாலும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று யாழ்.மாநகர முதல்வர் அறிவித்துள்ளார்.

# பாரபட்சமற்ற மக்கள் சேவைக்கு நாம் ஒருபோதும் பின்நிற்பதில்லை



(யாழ்ப்பாணம்)

உள்ளூராட்சி சபைகளினை எந்த கட்சியினர் ஆட்சி செய்தாலும் ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர் என்ற வகையிலும் அரச நாடாளுமன்ற உறுப்பினர்கள் என்ற வகையிலும் மக்களிற்கு தேவையான அபிவிருத்தி திட்டங்கள், மக்களின் அடிப்படை வசதிகள் போன்றவற்றை ஏற்படுத்திக்கொடுக்க வேண்டியவர்களாக நாம் காணப்படுகின்றோம். எனவே உள்ளூராட்சி சபைகளினை யார் ஆட்சி செய்தாலும் மக்களின் நலன் கருதி அனைத்துப் பிரதேசங்களும் அபிவிருத்தி செய்யப்படும் என்று ஈ.பி.டி.பி நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்ரின் (உதயன்) தெரிவித்தார்.

சாவகச்சேரி பிரதேசசபை எல்லைக்குட்பட்ட புறநெகும திட்டத்தின் கீழ் 170 இலட்சம் ரூபாய் நிதியில் புனரமைக்கப்பட்ட வரணி அம்மா கடை வீதியினையும் 250 இலட்சம் ரூபா செலவில் புனரமைக்கப்பட்ட விடத்தற்பளை கரம்பகம் இணைப்பு வீதியினையும் திறந்து வைத்து உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

மேலும் அவர் உரையாற்றுகையில்,

பிரதேசசபை பகுதிகளில் அரசநிதியின் ஊடாக அபிவிருத்தி திட்டங்கள் தெரிவு செய்யப்படும் போது விவாதிப்பதற்கு போட்டியிடும் பிரதேசசபை தலைவர்கள் அத்திட்டங்கள் ஆரம்பிக்கும் போதோ நிறைவு செய்யும் போதோ இத்திட்டம் அரச நிதியில் செய்யப்பட்டது என தட்டிக்கழிக்கின்றனர். நாம் எப்போதும் மக்களின் நலன்கள் முன்னுரிமையின் தன்மை போன்றவற்றை கருத்திற்கொண்டு எவ்வகை பாகுபாடுகளும் இன்றி மக்களுடைய அனைத்து தேவைகளினையும் நிறைவு செய்வோம் எனத்தெரிவித்தார்.

இந்நிகழ்வில் தென்மராட்சி பிரதேச செயலர் திருமதி சாந்தசீலன், யாழ். மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் கொன்றைக்சில் ஜக்சில், தென்மராட்சி திட்டப்பணிப்பாளர் திருமதி இரகுநாதன் தென்மராட்சி ஈ.பி.டி.பி அமைப்பாளர் அலெக்சாண்டர் சார்ள்ஸ், டாக்டர் ஆறுமுகம், கிராமசேவையாளர்கள், பொதுமக்களின் பிரதிநிதிகள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

# நெடுந்தீவில் நீர்விநியோக ஒன்றுகூடல்



(நெடுந்தீவு)

நெடுந்தீவில் நீர் விநியோகம் செய்வது சம்பந்தமான சமூகமயப்படுத்தப்பட்ட கிராமிய நீர் வழங்கல் மற்றும் சுகாதார திட்ட ஒன்றுகூடல் நேற்றுக் காலை 10.30 மணிக்கு நெடுந்தீவு பிரதேச சபை மண்டபத்தில் நெடுந்தீவு பிரதேச செயலர் ஆழ்வாப்பிள்ளை சிறி தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் நெடுந்தீவு பிரதேச சபை தவிசாளரும் நெடுந்தீவு ஈழமக்கள் ஜனநாயகக்கட்சி அமைப்பாளருமாகிய தானியேல் றெக்சியன் மற்றும் குடிநீர் வழங்கல் தொடர்பான ஆசிய அபிவிருத்தி வங்கி பிரதிநிதிகள் கலந்து கொண்டு கருத்துரைகள் வழங்கினார்கள்.

நெடுந்தீவிலுள்ள திணைக்களங்களின் பிரதிநிகள் மற்றும் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் எனப் பலர் கலந்து கொண்டனர். இதன் போது நெடுந்தீவு கூடிநீர் வழங்கல் தொடர்பான பிரச்சினைகள், அவற்றுக்கான தீர்வுகளும் எதிர்காலத்தில் நடைமுறைப்படுத்தப்படவிருக்கும் சுகாதார அபிவிருத்தி தொடர்பான விடயங்களும் ஆராயப்பட்டன.

# கடமைநேரங்களில் கைபேசிப் பாவனை ஊழியர்கள் மீது தண்டம் விதிப்பு

## போதனா மருத்துவமனை முன்மாதிரி

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்திய சாலையில் கடமை நேரத்தில் கையடக்கத் தொலைபேசியில் உரையாடிய நான்கு சிற்றூழியர்களிடமும் அவர்கள் கையடக்கத் தொலைபேசியில் உரையாடுவதனை அவதானிக்கத் தவறிய இரண்டு கண்காணிப்பாளர்களிடமும் யாழ். போதனா வைத்திய சாலை நிர்வாகம் தண்டம் அறவிட்டுள்ளது.

நேற்று யாழ். போதனா வைத்தியசாலையில் கடமையிலிருந்த இவர்களுக்கு தலா 100 ரூபா தண்டம் செலுத்துமாறும் பணிக்கப்பட்டது.

நேற்று முற்பகல் சம்பந்தப்பட்ட சிற்றூழியர்களும் கண்காணிப்பாளர்களும் யாழ். போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் அலுவலகத்திற்கு உடன் அழைத்துவரப்பட்டு பணிப்பாளரினால் எச்சரிக்கப்பட்டதுடன் குறித்த ஒழுககாற்று நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டிருப்பதாகவும் தெரியவருகின்றது.

ஏற்கனவே பலமுறை யாழ். போதனா வைத்தியசாலை நிர்வாகத்தினரால் கடமை நேரத்தில் சிற்றூழியர்கள் கையடக்கத் தொலைபேசியில் உரையாடுவது அவதானிக்கப்பட்டிருப்பதாகவும் இவ்வாறு தொடர்ந்து சிற்றூழியர்களின் நடவடிக்கை அமையுமாயின் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டிருந்தமை தெரிந்ததே.

இதேவேளை கடமை நேரத்தில் இவ்வாறு கையடக்கத் தொலைபேசியில் சிற்றூழியர்கள் உரையாடுவதை கண்காணிப்பதென்பது மிகவும் கஷ்டமான காரியம். இவ்வாறு மறைவிடங்களில் சென்று கையடக்கத் தொலைபேசியில் உரையாடுபவர்கள் (பெண்கள்) பின்தொடர்ந்து சென்று அவதானிப்பது வேறு விதமாக அமைந்துவிடும் என்றும் தெரிவித்த பாதிக்கப்பட்ட கண்காணிப்பாளர் இதற்கு தகுந்த பொறிமுறையை வைத்தியசாலை நிர்வாகம் உருவாக்க வேண்டும் என்றும் தெரிவித்தார். (பா)

# பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ் வெற்றி

ஐ.பி.எல். போட்டியின் நேற்றைய 2 ஆவது லீக் புனேவில் நேற்று தொடங்கியது. இதில் புனே வாரியர்ஸ் - றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூர் அணிகள் மோதின.

தொடக்க ஆட்டக்காரர்களாக திவாரி, ஹெய்ல் களம் இறங்கினர். புனே அணிக்கு எதிரான கடந்த போட்டியில் சதம் அடித்த கெய்ல் இதில் 21 ஓட்டங்கள் எடுத்து ஏமாற்றம் அளித்தார். ஹோலி 25, திவாரி 52 ஓட்டங்களைப் பெற்றனர். பெங்களூர் அணி 3 விக்கெட் இழப்பிற்கு 187 ஓட்டங்கள் குவித்தது. டி வில்லியர்ஸ் 50, ஹென்ரிக்ஸ் 27 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

188 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற கடின இலக்குடன் புனே வாரியர்ஸ் அணி களமிறங்கியது. ஒருபுறம் விக்கெட் வீழ்ந்தாலும் மறுமுனையில் உத்தப்பா நம்பிக்கையுடன் விளையாடினார். இருந்தாலும் அவர் 75 ஓட்டங்களில் ஆட்டம் இழந்தார்.

அதன்பின் புனே வாரியர்ஸ் அணியின் தோல்வி உறுதியானது. 20 ஓவர் முடிவில் அந்த அணியால் 9 விக்கெட் இழப்பிற்கு 170 ஓட்டங்கள் மட்டுமே எடுக்க முடிந்தது. இதனால் பெங்களூர் அணி 17 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. இந்த வெற்றி மூலம் 11 போட்டிகளில் 7 போட்டிகளில் வெற்றி பெற்று 2 ஆவது இடத்தில் றோயல் சலஞ்சர்ஸ் அணி உள்ளது.

# மருந்தடிக்கப்பட்ட பழங்கள் சந்தைகளில் விநியோகம்

## நுகர்வோர் கவலை

(திருநெல்வேலி)

பழுக்க வைக்கும் மருந்து அடித்த பழங்களே யாழ்ப்பாணத்தில் அதிகளவில் விற்பனைக்கு உள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. வாழை, பலா, மா, அன்னாசி, பப்பாசி, கொய்யா, தோடை போன்ற பலதரப்பட்ட பழங்களும் மருந்தடித்து பழுக்கவைத்த பழங்களாகவே காணப்படுகின்றன. தானாக கனிந்து பழுத்த பழங்களை மிக அரிதாகவே பார்க்கமுடிகிறது.

காய்களாகக் காணப்பட்ட நிலையில் மருந்து அடிக்கப்பட்ட பின்னர் சில மாலை நேரங்களில் இவை பழங்களாக மாறிவிடுவதனால் பழ வற்பனையாளர்கள் அவற்றை உடன் விற்றுப் பணமாக்கிக் கொள்கின்றனர். ஆனால் இப்பழகங்களை உண்பவர்கள் பலர் ஒவ்வாத நோய்களுக்கு ஆளாவதையும் அதனால் அவர்கள் பலத்த இடர்களை எதிர் நோக்குவதையும் இப்பழ வியாபாரிகள் உணர்ந்து கொள்வதாகத் தெரியவில்லை.

பழங்களாவதற்கு அடிக்கப்படும் மருந்துகள் பழங்களில் நன்கு செறிந்து காணப்படுகின்றன. இதனால் பழங்களை விரும்பி உண்பவர்கள் உடலிலும் இம்மருந்துகள் சேர்ந்து கொள்வதால் பல புதியவகை நோய் சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் அவர்களுக்கு உண்டாகும் அபாயம் உள்ளதாக அச்சம் தெரிவிக்கப்படுகின்றது.

பொதுமக்களின் நன்மைகருதி உடலுக்கு தீங்கு விளைவிக்கும் வகையில் மருந்துகள் அடித்து பழுக்கவைக்கும் முறை உரிய அதிகாரிகளால் தடைசெய்யப்பட வேண்டும் என பொதுமக்களினால் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. (137)

# கனகாம்பிகை குளத்தில் வீடொன்று தீயில் எரிந்து முற்றாக நாசம்

## ஆவணங்களை மீட்க முற்பட்டவருக்கு எரிகாயம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி கனகாம்பிகை குளத்தில் 55 வயதுடைய தாயொருவரின் வீடு முற்றாக எரிந்து சாம்பராகியுள்ளது.

இல 68, சேவிஸ் வீதி, கனகாம்பிகை குளத்தைச் சேர்ந்த ஜோதீஸ்வரன் விஜயசாந்தி என்பவருக்கு நிறுவனம் ஒன்றினால் அமைத்துக் கொடுக்கப்பட்ட தற்காலிக வீடே எரிந்துள்ளது.

நேற்றுப் பிற்பகல் 2.00 மணியளவில் இச்சம்பவம் இடம் பெற்றது. தகரத்தினாலான கூரையும் கிடுகளினாலான சுவர் அமைப்பை கொண்ட வீடே தீப்பிடித்துள்ளது.

சுமார் 2 இலட்சம் ரூபாவுக்கும் மேற்பட்ட பொருட்கள் தீயில் கருகியுள்ளன. இதன்போது பிறப்பு அத்தாட்சிப் பத்திரம் மற்றும் காணி உறுதிகள் அடங்கிய முக்கிய ஆவணங்களை எடுப்பதற்காக உட்சென்ற குறித்த தாயார் எரிகாயங்களுக்குள்ளாகியுள்ளார். இவர் கிளிநொச்சி மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவருகிறார். (28)

# முன்னறிவித்தல் இல்லாத மின்தடையால் பிரதேச செயலகம் வந்த மக்கள் நெருக்கடி

(புதுக்குடியிருப்பு)

புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்திற்குரிய மின்சார விநியோகம் முன்னறிவித்தல் எதுவுமின்றி நேற்று சிலமணி நேரம் தடைசெய்யப்பட்டதால் பல்வேறு தேவைகள் நிமித்தம் செயலகத்திற்கு வந்திருந்த பெருமளவு பொதுமக்கள் சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருகையில்,

வழமையாக புதன்கிழமைகளில் இடம்பெறும் மக்கள் சந்திப்புக்கள் தொழிலாளர் தினத்தை முன்னிட்டு நேற்று புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்தில் இடம்பெற்றிருந்தது.

இச்சந்திப்புக்களின்போது விசுவமடு, றெட்பானா, உடையார்கட்டு, சுதந்திரபுரம், வள்ளிபுனம், தேவிபுரம், புதுக்குடியிருப்பு, இரணைப்பாலை உட்பட பல்வேறு தூர இடங்களிலிருந்து பொதுமக்கள் பிரதேச செயலகத்திற்கு வருகை தருகின்றனர்.

பிறப்பு அத்தாட்சிப் பத்திரம், வதிவிடச் சான்றிதழ் உட்பட பல்வேறு ஆவசிய தேவைகளுக்காக மக்கள் நேற்று இச்செயலகத்திற்கு வந்திருந்தனர்.

மக்களின் சேவைகள் இடம்பெற்றுக்கொண்டிருந்த வேளை எவ்வித முன்னறிவித்தலுமின்றி பிரதேச செயலகத்திற்கான மின்னிணைப்பு துண்டிக்கப்பட்டது. இதனால் பொதுமக்கள் மற்றும் ஊழியர்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டதாக பாதிக்கப்பட்ட பொதுமக்கள் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக மக்கள் பிரதேச செயலக அதிகாரிகளுக்கு முறையீடு செய்ததையடுத்து பிரதேச செயலகத்தால் அதிகாரிகளுக்கு அறிவிக்கப்பட்டது. இதனையடுத்து மின்சார இணைப்பு வழங்கப்பட்டுள்ளது. (125)

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2013 மே 03 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.